
ஒன்று சேர்ந்த
அன்பு மாறுமா...
ரமணிசந்திரன்

# ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா...

ரமணிசந்திரன்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை
இராயப்பேட்டை, சென்னை-600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா... |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| முதற் பதிப்பு | : ஜூலை, 2002 |
| இரண்டாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2004 |
| மூன்றாம் பதிப்பு | : செப்டம்பர், 2005 |
| நான்காம் பதிப்பு | : நவம்பர், 2006 |
| ஐந்தாம் பதிப்பு | : டிசம்பர், 2007 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 128 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |

**விலை ரூ.40.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |


## பதிப்புரை

"எத்தனை கதைகள் படித்தாலும், திருமதி. ரமணிசந்திரன் கதைகள் படிப்பதிலே எங்களுக்கு உள்ள ஆர்வம் கொஞ்சமும் குறைவதில்லை.

படிக்கப் படிக்க இன்பமும் சுவையும் இனிக்கிறது.

ஒவ்வொரு நாளும் பார்க்கும் அன்றாட நிகழ்ச்சிகள் போல் கண்முன் நிற்கிறது.

எங்களைப் போன்ற வாசகர்களின் ஆர்வம் குறையாதிருக்க பெரிய கதைகளாக எழுதச் சொல்லுங்கள்" என்று **வசுமதி**, என்ற வாசகி எழுதியுள்ளார்.

மகிழ்ச்சி. உங்கள் விருப்பத்தை திருமதி. ரமணிசந்திரன் அவர்கள் நிச்சயம் நிறை வேற்றுவார்கள். படியுங்கள்.

அருணோதயம் அருணன்.

## உள்ளே


1. ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா... 5
2. முத்தின் ஒளி வீச்சினிலே 109


# ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா...



அன்று, நளினியைப் பார்த்ததுமே, வகுப்பில் ஒரே உற்சாகம்! "ஏய் நளினி வந்து விட்டாள்டி" என்று, அவளது வகுப்புத் தோழிகள் ஏழெட்டுப் பேர், அவளை ஆவலுடன் சூழ்ந்து கொண்டனர்.

"உன் வழக்கமான ஸ்பெஷல் பணியாரத்தைக் கொண்டு வந்திருக்கியல்லவா, நளினி?"

கண்ணில் சிரிப்புடன் உதட்டைப் பிதுக்கினாள் நளினி. "இல்லை என்று சொன்னால், அடித்து விரட்டி விடுவீர்கள் போலிருக்கிறதே! நானும், ஆஹா, நமக்குத்தான் எவ்வளவு பிரியமான சினேகிதிகள், இவ்வளவு ஆவலாக வரவேற்கிறார்களே, என்று ஒரு கணம் பூரித்து, பெருத்துப் போய் விட்டேன்! நல்ல வேளை, அப்படி ஒன்றும் இல்லை என்று உடனே காட்டி, என்னைக் குண்டாகாமல் காப்பாற்றினீர்கள்!" என்று கண் சிமிட்டிச் சிரித்தாள், அந்த நளினி!

"ஹூம், உனக்கென்னம்மா? நீ இன்னமும் குண்டானாலும், தாங்கும்!"என்னை மாதிரியா?" என்று பெருமூச்சு விட்டபடி, தன் இல்லாத இடுப்பைக் குனிந்து பார்த்தாள், அஞ்சலி. "எனக்கு ஒரு சந்தேகம்ப்பா! இந்தக் கம்பர், சீதையைப் 'பொய்யோ எனும் இடையாள்' என்று வர்ணிக்கிறாரே, அவளும் என்னைப் போலத்தான் இருந்திருப்பாளா? எனக்கும், இடுப்பு இருப்பதாகவே, தெரியவில்லை!" என்று அவள் தொடர்ந்து கூற, அங்கே ஓர் அவுட்டுச் சிரிப்பு வெடித்தது!

"இந்த மாதிரி, அந்த சீதையின் இடுப்பு இருந்திருந்தால், அவளைப் பார்த்ததுமே, ராமர், பின்னங்கால், பிடரியில் இடிபட,மிதிலையை விட்டு ஓடியிருப்பார்!"

அஞ்சலிக்குத் திருமணம் விரைவிலேயே நடக்க இருந்தது. அதுவும் காதல் திருமணம்! 'போடு தோப்புக் கரணம்' என்றால், 'இந்தா எண்ணிக்கொள்!' என்கிற ரகம் பையன்! எனவே, அவள் வருந்துவாளோ என்ற எண்ணமே இல்லாமல், எல்லாருமே, இலகுவாகக் கேலி பேசிச் சிரித்தனர். அவள் உட்பட!

திடுமென, நினைவு வந்து ஒருத்தி கத்தினாள். "நளினி, நீ இன்னும், எங்கள் கேள்விக்குப் பதில் சொல்லவேயில்லையே! உன் வீட்டு அந்தப் பலகாரம் கொண்டு வந்திருக்கிறாயா, இல்லையா? கொண்டு வந்திருந்தால் மூட்டையைப் பிரி!"

"ஷ்! இங்கே வேண்டாம்பா! வகுப்பில், எல்லோருக்கும் என்றால், போதாது! கம்மியாகிவிடும்! மதியம் 'கான்டீனு'க்குப் போகும் போது, தருகிறேன்! இங்கே பிரித்தால், உங்களுக் கெல்லாம், ஆளுக்குக் கால் பணியாரம் கூட மிஞ்சாது!"என்று நளினி அடங்கிய குரலில் கூற, ஒத்துக்கொண்டு எல்லோரும் வகுப்பில் அவரவர் இடத்துக்குச் சென்றனர்!

கூறியவாறே ஆளுக்கொரு கட்லெட்டையும், 'சாசை'யும் வாங்கிக் கொண்டு பெரிய மேஜையைச் சுற்றிலும் உட்கார்ந்த



தோழியர் அனைவரின் தட்டிலும், இரண்டிரண்டு பணியாரங்களை நளினி வைத்தாள்.

ரசித்து உண்டவாறே, "உன் வீட்டுப் பணியாரம், ஏனோ தனி ருசி நளினி! எங்கள் வீட்டிலும் அவ்வப்போது செய்வார்கள்! அதே பணியார மாவுதானே? ஆனால், இதுபோல வருவ தில்லை! இன்னும் இருக்கிறதாப்பா?" என்று வாயில் இருந்ததை விழுங்கியவாறே அஞ்சலி கேட்டாள்!

"கல்யாணப் பெண்ணுக்கு இல்லாததா?"என்று நளினி இன்னும் இரண்டை அவளிடம் எடுத்துக் கொடுக்க, "கல்யாணப் பெண்ணுக்கு இரண்டு கூடவா? அப்படியானால், பஸ் நிறுத்தத்தில் என்னைச் சுற்றுகிறதே அந்த அரைக் கிறுக்கிடம் சரியென்று சொல்லி விடட்டுமா?" என்று தருணா கேட்க, வெள்ளி மணியோசையாக எல்லோரும் நகைத்தனர்.

"உன் வீட்டுப் பணியாரத்திற்காக, அரைக்கிறுக்கைத் திருமணம் செய்கிற அளவுக்கு நான் போக மாட்டேம்பா! ஆனால் உலகத்திலேயே சிறந்த பணியாரம் உன் அம்மா செய்வதுதான்! அதை எல்லோரும் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும்!" என்றாள் ஒருத்தி!

எல்லோரும், அதை ஒப்புக்கொள்ள, நளினிக்கு, மிகவும் பெருமையாக இருந்தது! ஊருக்குச் செல்லும்போது, அம்மாவிடம் மறக்காமல் சொல்ல வேண்டும் என்று, மனதினுள் குறித்துக் கொண்டு, மற்றவர்களிடம் விவரம் சொன்னாள். "பணியார மாவு, அசத்தும்பா! ஆனால், இதைச் செய்கிற விதமே, ஒரு பணியாரத்துக்கான மாவை ஊற்றினால், அது வெந்து எடுக்கு முன், அடுத்ததற்கான மாவை ஊற்றுவது வெள்ளையப்பம் போல என்று, அம்மா சொன்னார்கள்! அதனால் தான் தனி ருசி என்று தோன்றுகிறது! ஆனால் பாட்டிக்குக் கும்பிடும் பூஜைக்காக என்று நூற்றியெட்டு

பணியாரங்களையும் செய்து முடிக்குமுன், குறைந்தது, இரண்டு மணி நேரம் ஆகிவிடும்! அம்மா அசந்து போவார்கள்! முதுகுவலியே வந்து விடும்!'' என்று விவரித்தாள்.

''அவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டு, அத்தனை செய்தாக வேண்டுமா? பெயருக்கு, ஒரு பத்துப் போலச் செய்து வைக்க வேண்டியதுதானே?'' என்றாள் ஒருத்தி!

''இதை, எங்கள் வீட்டில், எல்லாருமே, அம்மாவிடம் சொல்லிப் பார்த்து விட்டோம்! ஆனால், எங்கள் கொள்ளுப் பாட்டி பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? எந்தப் பட்டினம் கொள்ளை போனாலும் சரி, பொங்கலுக்கு மூன்றாம் நாள் இதைச் செய்தே தீருவார்கள்! செய்து, கொள்ளுப்பாட்டி சொன்னபடி, செய்து வைத்துக் கும்பிடுவார்கள். எங்கள் அப்பா வழித் தாத்தா இறந்து, தீபாவளி, பொங்கல் கொண்டாடாத போது கூட, அம்மா, இதை நிறுத்தவில்லை!'' என்றாள் நளினி.

அப்படியானால், இது உன் கொள்ளுப் பாட்டியின் இறந்த தினத்துக்காகச் செய்யப்படுவது என்று சொல்லு!''

''ஊகூம்! என் அம்மாவுடைய பாட்டியுடைய மாமியாருக் காகச் செய்வதாம். வாழும் தெய்வம், அம்மாவுடைய கொள்ளுப்பாட்டி, அவர்களுக்காக இந்தப்படையல் செய்வது, அந்தக் குடும்பத்தில் பிறந்த எல்லோருக்கும் நல்லது என்று, அம்மாவுடைய பாட்டி சொல்வார்களாம். அவர்கள் இருக்கிற வரை, செய்தார்களாம். அதையே, எங்கள் அம்மா தொடர்ந்து செய்கிறார்கள்! அவ்வளவுதான் கதை! இப்போது வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்தப் பணியாரங்கள், இன்னும் ஒரு சிலவே மீந்திருப்பதால், வேண்டியவர்கள் கேட்டு வாங்கிக் கொள்ளு மாறு, பணிவன்புடன் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்!'' என்று அறிவிப்புடன் பேச்சை முடித்தாள் நளினி!

''போதும்ப்பா! வயிறு 'டொம்'!'' ''பாதி பிட்டுக் கொடுப்பா!'' ''எனக்கு முழுசு!'' என்ற குரல்களின் இடையே, ''எனக்கு ஒரு



பணியாரம் தரமுடியுமா?'' என்று ஓர் ஆண் குரல் கேட்கவும், நளினியின் கதையிலும், பணியாரத்திலும் மூழ்கியிருந்த பெண்கள் அனைவரும் திடுக்கிட்டுத் திரும்பினர்.

செவ்வக வடிவில் இருந்த 'கான்டீனி'ன் நடுவில், எட்டுப் பத்துப்பேர் அமர்ந்து சாப்பிடக்கூடியதாய் இரு பெரிய மேஜைகளும், சுற்றிலும் சுவரை ஒட்டி, நாலு பேர் உட்கார்ந்து உண்ணும் அளவில் சிறு மேஜைகள் நிறையவும் உண்டு.

அடுத்த பெரிய மேஜையில் பல பையன்கள் சேர்ந்து அமர்ந்திருந்தனர். அவர்களில் ஒருவன் தான், எழுந்து வந்து, இப்போது பணியாரம் கேட்டது!

அவன் பெயர் மகேந்திரன் என்கிற அளவு அவளுக்குத் தெரியும்! ஆண் பெண் சேர்ந்து படிக்கும் கல்லூரி என்றால், சிறு சிறு சலசலப்புகள் இருப்பது இயல்புதான். ஆனால், அதில் தொடக்கத்தில் இருந்த ஆர்வம் குறைந்து, இந்தக் கடைசி ஆண்டில் கிட்டத்தட்ட மறைந்தே போயிருந்தது. உறுதியான பந்தங்கள் சிலது தவிர, மேம் போக்கான கேலி, கிண்டல்கள், சிலுமிஷங்கள் எல்லாமே, அனேகமாகக் காணாமல் போயிருந்தன!

எனவே, திடுமெனச் சக மாணவன் ஒருவன் வந்து நின்று பணியாரம் கேட்கவும், பெண்கள் சற்று யோசனையோடு நோக்கினர்.

புரிந்து கொண்டவனைப் போல, ''பாருங்கள், ஓசி அடிக்கிறேன் என்று எண்ண வேண்டாம்! பதிலுக்கு, எங்கள் வீட்டுப் பணியாரம் தருகிறேன். உங்களது போலவே, பொங்கலுக்கு மூன்றாம் நாள், அதாவது, நேற்று செய்தது!'' என்று பக்கத்து மேஜைக்குச்சென்று, ஒரு பணியாரத்தை எடுத்து வந்து, நளினியிடம் நீட்டினான், அந்த மாணவன் மகேந்திரன்!

அந்த மேஜையிலும், பணியாரம் பரிமாறியிருப்பது கண்ணில் பட, நளினி ஆச்சரியத்துடன் அவன் நீட்டிய பணியாரத்தை வாங்கிக் கொண்டாள்!

பாத்திரத்தில் மீதமிருந்ததில் ஒன்றை எடுத்து, ஒருத்தி நளினியின் கையில் கொடுக்க, அவளும், அதை, எந்தவிதப் பேச்சுமின்றி, மகேந்திரனிடம் நீட்டினாள்.

அவன், அதைக் கடித்துத்தின்று பார்த்துவிட்டு, "இது, எங்கள் வீட்டுப் பணியாரம் போலவே, இருக்கிறதே!" என்றான்.

அதே சமயம், மகேந்திரன் கொடுத்ததில் ஒருவிள்ளல் எடுத்து, வாயில் போட்டு மென்ற நளினியும், "இது எங்கள் அம்மா செய்ததுபோலவே, இருக்கிறதே!"

"ஊகூம் எங்களது போலவே, உங்களது!"

"இல்லை! எங்களது போலவே, உங்களுடையது!" என்றாள் நளினி பதிலுக்கு.

இருவரும், ஒருவரை ஒருவர் நேராகப் பார்த்துக் கொண்டு சில வினாடிகள் நின்றனர்.

பிறகு "சரி! இரண்டும் ஒரே ருசி என்று வைத்துக் கொள்வோம்!" என்றான் மகேந்திரன்

பேசாமல் தலையாட்டினாள், நளினி.

இருவருக்குமே, உள்ளூர ஒரே வியப்பு!ஒரே விதமான பழக்க வழக்கம், இருவர் வீட்டிலும் எப்படி இருக்கக் கூடும்? அதிலும், சற்றும் அறிமுகமற்ற இருவர் வீடுகளில்!

இதில் ஏதோ இருக்கிறது!

யோசித்தபடி நளினி நிற்கும்போதே, "உங்கள் கொள்ளுப் பாட்டியின் பெயர் என்ன?" என்று மகேந்திரன் விசாரித்தான்.

"ஏன் கேட்கிறீர்கள்?"

"நாம் உறவினராக இருக்கலாம்."

"ம்ம்ம்..." என்று யோசனையோடு, அவனைப் பார்த்தாள், நளினி.



இந்த மாதிரி, எத்தனையோ பேர் தொடங்கியிருக்கிறார்கள் தான், என்று அவள் எண்ணும்போதே, அவளுடைய தோழிகளின் பார்வையும், அதையே உறுதி செய்தது! ஆனால்... என்று, அவளுக்குக் குழப்பமும் இருந்தது.

அவளது தயக்கத்தைப் புரிந்து கொண்டவன் போல, "தப்பாக நினைக்க வேண்டாம்! ஆண்டுதோறும், என் வீட்டிலும், இதே கூத்து நடப்பது உண்டு! இப்போது, நான் சொல்வது உங்களோடு ஒத்துப் போகிறதா, பாருங்கள்! எங்கள் கொள்ளுப் பாட்டியின் பெயர், கனக சுந்தர வடிவு என்று மகேந்திரன் அறிவித்தான்!

விழிகள் விரிய, "எங்கள் கொள்ளுப் பாட்டி பெயரும், அதுவேதான்!" என்றாள் நளினி ஆச்சரியம் மிகுந்த குரலில்!

சிறு வயதிலிருந்து, நளினிக்கு, அவளுடைய குடும்பம் - அவளுடைய பெற்றோர், தம்பி, தங்கை தவிர, வேறு உறவு தெரியாது. ஜாதி விட்டு, ஜாதியில் காதல் திருமணம் செய்ததால், இருபக்க உறவும் விட்டுப் போயிற்று என்று பெற்றோர் பொதுவாகச் சொன்னதுதான்!

தந்தை வழிப் பாட்டனார், அடுத்த மகனால் அலட்சியப் படுத்தப்பட்டு, கஷ்டப்படுவதாகக் கேள்வியுற்றதும், அவளுடைய பெற்றோர் போய், அவரைக் கூட்டி வந்தார்கள்.

மூத்த மகன் மேலுள்ள கோபத்தை விசிறிவிட்டு சொத்து முழுவதையும் தங்கள் பெயருக்கு எழுதி வாங்கிக் கொண்டபின், இரண்டாவது மகனும், அவனுடைய மனைவியும், அவர்களது சுயரூபத்தைக் காட்டியிருக்கிறார்கள்!

கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத குறையாக விரட்டி விட்ட மூத்தவனை அணுகக் கூச்சப்பட்டுக் கொண்டு கோயில்களில் தரும் பிரசாதத்துக்குக் கையேந்திக் கொண்டிருந்த நிலையில்தான், பராசரனும் மனோகரியும், அவரை அழைத்து வந்தது.

மகனும் மருமகளும், எவ்வளவோ முயன்றும், அவரது கழிவிரக்கத்தைப் போக்க முடியவில்லை!

தான் வேண்டாம் என்று ஒதுக்கிய மருமகள், அவளும் சேர்ந்து வேலைக்குப் போய்ச் சம்பாதித்த பணத்தையும், ஒரு முணுமுணுப்பின்றித் தனக்காகச் செலவிடுவதைப் பார்க்கையில் ரொம்பவும் குறுகிப் போனார்!

அந்தக் குறுகலிலே, விரைவிலேயே இறந்தும் போயிருக்கக் கூடும்! கடைசி நாட்களில், நளினியின் கையைப் பிடித்து, "உன் அம்மாளைப் போல, ஒரு பெண் குடும்பத்துக்குக் கிடைப்பதற்குக் கொடுத்து வைக்க வேண்டும்!" என்று மறைமுகமாக மன்னிப்பும் கேட்டிருக்கிறார்.

எப்படியோ, தந்தையின் கடைசிக் காலத்தில், தன்னால் ஆனதைச் செய்தோம் என்கிற திருப்தி பராசரனுக்கு!

அந்தத் தாத்தாவோடு, அந்த வகை உறவு முடிந்து போயிற்று!

அம்மா வழியிலும்... தாயாருடைய பெற்றோர், அவளது சிறு வயதிலேயே இறந்து போனார்கள் என்பதால், அந்தப் பக்கத்து உறவும் அவ்வளவுதான் என்று தான், நளினி எண்ணியிருந்தாள்!

ஆனால், புதிதாகக் கொள்ளுப் பாட்டிக்குச் சொந்தம் கொண்டாடி, ஒருவன் பேசவும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது!

ஆனால், மகேந்திரனுக்குப் புதிதாக, ஓர் உறவைக் கண்டுபிடிக்கும் உற்சாகம் போலும்!

புன்னகையோடு, "இனி அடுத்த தலைமுறைக்கு வருவோமா?" என்று கேட்ட மகேந்திரன், தொடர்ந்து, "எங்கள் தாத்தா பெயர் சிவனணைந்த பெருமாள்!" என்று கூறியவாறு, அவளைப் பார்த்தான்.



முறுவலோடு, கையை விரித்தாள் அவள். "எங்கள் அப்பா வழித் தாத்தா பெயர் வேறு! அத்தோடு, அம்மாவினுடைய பெற்றோரும், அவர்களது, சிறு வயதிலேயே இறந்து போனார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள்! ஒருவேளை, அந்தக் காலத்தில், கனக சுந்தர வடிவு என்கிற பெயரில் மோகம் இருந்திருக்கும்! நம் இரண்டு பேர் கொள்ளுப் பாட்டிகளுக்கும் அதே பெயர் வைத்திருக்கக் கூடும்! அதனால் என்றவளை, மகேந்திரன் இடைமறித்தான்!

"அதே மாதிரி, இரண்டு கொள்ளுப் பாட்டிகளுக்கும், இந்தப் பூஜைப் பணியார மோகமும் இருந்திருக்குமாக்கும்?!"

"அது, கொஞ்சம் நம்ப முடியாத ஒற்றுமையாகத்தான் இருக்கிறது" என்று நளினியும் ஒத்துக் கொண்டாள்.

பிறகு அவளே, "காதல் திருமணத்தால், இருபக்க உறவும் விட்டுப் போய்விட்டதாக, அம்மா சொல்லியிருக்கிறார்கள்!" என்று தெரிவித்தாள்.

"அடேடே! அப்படியானால், சிறு வயதிலேயே , வீட்டைத் துறந்து சென்றதால் தொடர்பு விட்டுப்போன மனோகரி அத்தைதான் உன் அம்மாவாக இருக்க வேண்டும்! ஹை! அத்தை மகள் ரத்தினம்!" என்றான் அவன்!

சூழ்ந்து நின்ற சினேகிதப் பட்டாளம், உற்சாகக் குரல் எழுப்பிக் கைதட்டி, தங்கள் வியப்பையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார்கள்!

அந்தக் கூச்சலினூடே, "ஆ....மாம்! என் அம்மா பெயர் மனோகரிதான்" என்றாள் நளினி!

உடனேயே குழப்பத்துடன், "ஆனால்.." என்று இழுத்தாள்.

அடுத்து, வகுப்பு தொடங்குவதற்கான மணியடித்தது! எல்லாரும் கிளம்பினர்.

மகேந்திரன் நின்று, நளினியிடம் அவசரமாகப் பேசினான். "உன் குழப்பம் எனக்குப் புரிகிறது! அதன் விடையும் என்னிடம் இருக்கிறது!" என்று உற்சாகத்துடன் கூறினான் மகேந்திரன். "ஆனால், அதை, அத்தையின் வாய் மொழியாகவே அறிந்து கொண்டால்தான், உனக்கு நிம்மதியாக இருக்கும்! முதலில், அத்தையிடம், என் தாத்தா பெயரைச் சொல்லி, விசாரித்துப் பார்!" என்று, தன் 'செல்'லை அவளிடம் நீட்டினான்.

"இல்லை இப்போது வேண்டாம்!" என்று மறுத்தாள் நளினி, "அம்மாவுக்கு இப்போது வேலை நேரம்,மகேந்திரன்! எனக்கு வகுப்பு நேரம் என்பதும், அம்மாவுக்குத் தெரியும்! இந்த நேரத்தில் பேசினால், அவர்களுக்குப் பிடிக்காது! மாலையில், வீட்டுக்குப் போனதும் பேசுகிறேன்!" என்றாள், வகுப்பை நோக்கி நடந்தபடியே.

கூட நடந்தபடி, "செய்! அத்தோடு, உன் வீட்டு டெலிபோன் எண்ணையும் கொடு! வீட்டுக்குப் போனதும், அப்பாவிடம் கொடுத்து, அவரையும் பேசச் சொல்லுகிறேன்! அவருக்குத் தன் தங்கையிடம் மிகவும் பிரியம் என்பது, என் ஊகம்!" என்றான் மகேந்திரன்.

"நாம் இருவரும் சொந்தக்காரர்கள் என்பதில், உங்களுக்குச் சந்தேகமே இல்லை போலத் தோன்றுகிறதே!" என்றாள் நளினி.

"ஒரு சதவீதம்கூடக் கிடையாது!" கொஞ்சம் யோசித்தால், உனக்கும் அப்படித்தான் இருந்தாக வேண்டும்! அப்புறம், என்னை 'நீ என்றே சொல்லு! நாம் இருவரும் ஒரே வகுப்பில்தானே படிக்கிறோம்! அப்படியானால், வயதும், ஒன்றாகத்தானே இருக்க வேண்டும்? நீ ஒன்றும் எந்த வகுப்பிலும், 'தங்கி'ப் படித்தவள் இல்லையே!"

"ஃபெயிலா? நானா?" என்று முறைத்தாள் அவள்!

"நல்லவேளை! அப்படி ஏதும் நடந்திருந்தால், நீ மூத்தவளாக இருந்து, நான் உனக்கு மரியாதை தர வேண்டியதாகிப் போயிருக்கும்! உனக்குப் போய், மரியாதை கொடுத்துக் கொண்டு!"



"என்ன பெரிய விஷயம்? உங்கள் அம்மாவும், மிஞ்சி மிஞ்சி, உங்களுக்குக் காதளவுதானே, இருக்கக் கூடும்? மரியாதை கொடுப்பதில்லையா?"

"எத்தனை வயது வித்தியாசம்?! நீ அப்படியா?..."

வகுப்பை அடையும் வரை, இருவரும் இப்படியே பேசிக்கொண்டு போயினர்.

அன்று மாலையில் நளினி வீட்டுக்கு டெலிபோன் செய்தாள்.

அவளோடு பேசிய தாயின் குரல் நெகிழ்ந்திருப்பது போல, அவளுக்குத் தோன்றியது!

முதலில், அதைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று, அவள் திட்டமிடும் போதே, "நளினிம்மா, உன் வகுப்பு மகேந்திரனுடைய தந்தை, எனக்கு அண்ணன்தானம்மா! ஒன்றுவிட்ட அண்ணன்! பெரியப்பா மகன்! என்மேல் ரொம்பப் பிரியம்!" என்று, மேலும் குரல் தழுதழுத்தாள் தாயார்.

தந்தையை விடத் தாயார் அழுத்தம் என்று எண்ணியிருந்த நளினிக்கு, இந்த தழுதழுப்பு வியப்பூட்டியது! "என்னம்மா?" என்று, ஆச்சரியத்துடன் கேட்டாள்.

தொண்டையைச் செருமிக் கொண்டு, "ஒன்றும் இல்லைடா! சின்ன வயதிலேயே என் அப்பா, அம்மா இறந்துவிட்ட போதும், அந்தக் குறையை நான் அறிந்ததே இல்லை! பெரியப்பா வீட்டில், அவ்வளவு பிரியமாக வளர்த்தார்கள்! மூன்று அண்ணன்மாரும், நான் என்றால், உயிரைக்கூட விடுவார்கள்! அதிலும், பெரியண்ணன்...குடும்பம், பிள்ளைகள், வேலை என்று, அவர்கள் நினைக்கக்கூட இல்லாமல், இவ்வளவு காலம் இருந்து விட்டது... அது, கொஞ்சம் ஒரு மாதிரியாகி விட்டது! போகட்டும்!

கண்ணம்மா, அண்ணன், உன்னைத் தன் வீட்டுக்குச் சாப்பிடக் கூப்பிடுகிறார்! எல்லாரையுமே கூப்பிடுகிறார் ஆனால், சின்னதுகளுக்கு இந்த ஆண்டு, பொதுத் தேர்வை வைத்துக்கொண்டு, அங்கே, இங்கே, நான் நகர முடியாது! நீ மட்டுமாவது போய்வா! ஞாயிறன்று அனுப்பச் சொல்லி வார்டனிடம் அனுமதி கேட்டுத் தெரிவிக்கிறேன்! போய், அண்ணன் வீட்டில் எல்லோரையும் பார்த்து விட்டு வா!'' என்றாள் மனோகரி!

மறுநாள் கல்லூரிக்கு வந்த மகேந்திரன், முன்னே நடந்ததை, ஒரு சின்ன கதைச் சுருக்கமாகச் சொன்னான்!

நளினியுடைய தாயார் மனோகரியுடைய தந்தையும், மகேந்திரனுடைய அப்பாவுடைய அப்பாவும், உடன் பிறந்தவர்கள்! அதாவது, இருவருடைய தாத்தாக்களும் சகோதரர்கள். சின்னத் தாத்தாவும், அவர் மனைவியும் சிறு வயதில் இறந்துவிட, இளைய மகனுடைய மகளான மனோகரியை, அவளுடைய பாட்டி கனக சுந்தர வடிவு அம்மாள், அவள் வசித்த மூத்த மகன் வீட்டுக்கே கூட்டி வந்தாள்.

அங்கே மூன்று பையன்கள் மட்டுமே! எனவே, எல்லோருக்கும், மனோகரி செல்லப்பெண் ஆகிப் போனாள்! பெரிய தந்தையைக் கண்டு விரலால் ஆட்டி வைத்தானாம்!

"அதனால்தான், காதல் என்று அத்தை எதிர்த்துப் பேசவும், தாத்தாவுக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டதாம்! நம் கொள்ளுப் பாட்டி இறந்த புதிது வேறாம்! பேச்சுத் தடித்து, அத்தை வீட்டை விட்டு வெளியேறி விட்டார்களாம்! அப்பா, சித்தப்பாக்களுக்கு அத்தையிடம் மிகுந்த பிரியம் என்றாலும், தாத்தாவுக்குப் பயந்து, சும்மா இருந்தார்களாம்! அப்புறம் இங்கேயும், வீட்டில் கொஞ்சம் சொத்துத் தகராறு, சகோதரர்களுக்குள் பிரிவு, புதிதாகத் தொழில் தொடங்குவது, வளர்ப்பது என்று வந்துவிட, விட்ட உறவைத் தொடர்வது பற்றி, எதுவும் செய்யத் தோன்றாமலே போயிற்றாம்! இப்போது அந்த உறவை மீண்டும் கொண்டு வந்தேன் என்று



அப்பா எனக்குக் கிரீடம் சூட்டாத குறை தான்!'' என்று சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுக்கொண்டு மகேந்திரன் பெருமை காட்ட, "மெள்ள மெள்ள இழுப்பா, மச்சான்! சட்டைக் காலர் கிழிந்து விடப் போகிறது!'' என்று கேலியுடன், நளினி குதூகலமாகச் சிரித்தாள்!

கல்லூரியில், ஆண்- பெண் சேர்ந்து படித்தபோதும், மாணவ, மாணவியர் தங்கும் விடுதி, தனித்தனியாகத்தான் இருந்தது. தப்புத் தண்டா நடந்து, கல்லூரிக்குக் கெட்ட பெயர் வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில், கல்லூரி நிர்வாகம், மிகவும் கண்டிப்பாகவும் நடந்துகொண்டது!

ஆண்களாகட்டும், பெண்களாகட்டும், ஆறு மணிக்குச் சுற்று மதில் கேட்டை மூடுமுன்பாக அவரவர் தங்கும் விடுதிக்குள் வந்தாக வேண்டும்! அப்படி வரவில்லையென்றால், வராதவர் வீட்டுக்குப் புகார் கடிதம் போய்விடும்! இரண்டாம் முறை, பெற்றோர் கடிதத்துடன் வந்தால்தான் உள்ளே விடுவார்கள். மூன்றாவது பிழையோடு, கல்லூரி, டீசி கொடுத்து விடும்!

இதைப்போலவே, விடுமுறை நாட்களில், விடுதியிலிருந்து வெளியே போவதற்கும், கட்டுப்பாடு இருந்தது! கடை கண்ணிக்குப் போவது என்றால், இரண்டு மூன்று பேர் சேர்ந்துதான் போகலாம்! தனியே எங்கேயும் சுற்ற முடியாது!

எனவே, பெற்றோரான மனோகரியும், பராசரனும் சேர்ந்து சொன்ன பிறகுதான், பெண்கள் விடுதியின் வார்டன் நளினியை, அவளுடைய உறவினர் வீட்டுக்குச் செல்ல அனுமதித்தார். அப்போதும், மாலையில் கேட் மூடுமுன் திரும்பி வந்து விட வேண்டும் என்று கட்டளையுடன் தான்!

புதிய உறவினர்களைப் பார்த்துப் பழகப் போகும் பரபரப்புடன், நளினிக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது! இந்தப் புதிய உறவினர்கள் எல்லோரும், மகேந்திரனைப் போலக் கலகலப்பாகப் பழகுகிறவர்களாக இருந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்?!

அப்படித்தான் இருப்பார்கள் என்ற நம்பிக்கையும் அவளுக்கு இருந்தது! மற்றபடி, இவ்வளவு ஆவலாக அழைக்க மாட்டார்கள் அல்லவா?

நளினியை அழைத்துப் போக, மகேந்திரனுடன் வந்திருந்த, அவளுடைய 'தாயார் சரளாவையும், நளினிக்கு மிகவும் பிடித்துப் போனது!

வந்ததுமே, நளினியின் கையைப் பிடித்துக்கொண்டு, "இவன் அப்பாவே வந்திருப்பார் நளினிம்மா.. ஆனால், அவருக்குப் 'பைபாஸ்' அறுவை சிகிச்சை செய்ததில் இருந்து, அதிகம் அலட்டிக்கொள்ள விடுவதில்லை! மனோகரி என்றால் அவருக்குக் கொள்ளைப்பிரியம்! எனக்கும், நாத்தனார் என்ற எண்ணமே இருந்ததில்லை அவ்வளவு அனுசரணையாக இருப்பாள்" என்று பிரியமான குரலில் கூறினாள்.

"அப்படியானால், உங்களுக்கு அம்மாவைத் தெரியுமா, அத்தை?" என்று ஆவலாக கேட்டாள் நளினி.

"ம். நன்றாகவே மனோ கிளம்பும்போது, இவன் அண்ணனுக்கு மூன்று வயதிற்கு மேல் ஆகிவிட்டதே! ஆசையாகத் தூக்கிக் கொண்டு அலைவாளா, கொஞ்சநாள் அவனோடு, ரொம்ப சிரமப்பட்டோம்! பிறகு இரண்டு சித்திகள் வந்து, எல்லாருக்கும் பிள்ளைகள், பிறந்து, அந்த வீட்டை விட்டும் கிளம்பி... காலம், ஒரே ஓட்டமாக ஓடிவிட்டது! இப்போது கிளம்புவோமா? அங்கே உன் மாமா மிகவும் ஆவலோடு காத்துக் கொண்டிருப்பார்!"

மற்ற மாமாக்களைப்பற்றி கேட்க, நளினிக்குக் கொஞ்சம் யோசனையாக இருந்தது! சொத்துத் தகராறு, பிரிவினை என்றெல்லாம் சில வார்த்தைகளை, மகேந்திரன் பயன்படுத்தியிருந்தது நினைவில் இருந்ததால், முதலிலேயே மனதில் சிணுக்கத்தை ஏற்படுத்துவானேன் என்று எண்ணிப் பேசாதிருந்து விட்டாள்.



மலையடிவாரத்தில் அவர்களது கல்லூரி இருந்தது.

மகேந்திரன் குடும்பத்தாரின் எஸ்டேட் மலையில் சற்று உயரத்தில் இருந்தது. ஏலக்காய் எஸ்டேட் ஒன்று பெரியதாக இருந்தது. கூடவே, நூறு ஏக்கர் பரப்பளவில், காஃபித் தோட்டங்களும் இருப்பதாக,, மகேந்திரனின் வளவளப்பிலிருந்து அவளுக்குத் தெரிய வந்தது!

வளைந்து வளைந்து மலை மீது ஏறிய சாலையிலிருந்து, ஓர் இடத்தில் தனியாகப் பிரிந்த பாதை வழியே கார் திரும்பிச் சென்றது. மலைப் பாதைகளுக்கே உரிய பசிய அழகைப் பாதையின் இருபுறமும் கண்டு ரசித்தாள் நளினி.

மகுடம் சூட்டினாற் போலச் சென்னிறத் தளிர்களுடன் கூடிய ஒரு மரத்தைத் திரும்பித் திரும்பிப் பார்த்துவிட்டு, "நீங்கள் ரொம்பவும் அதிர்ஷ்டசாலி, மகேந்திரன்! தினமும், இதே வழியில் வந்து போகிறாயே! இருபுறமும் பார்க்கும் போதே, எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது!" என்றாள் அவள்.

"எங்கே? இதையெல்லாம், இந்த குரங்கு கண்ணைத் திறந்து பார்க்குமோ, என்னவோ?" ஏட்டுக்கீரை கறிக்காகாது என்பது போலத்தான் இவன். இந்த அழகை ரசிப்பதும்!"என்றாள் சரளா, மகனைச் செல்லமாக ஒரு தட்டுத் தட்டி!

"எங்கே பார்ப்பது? கிளம்பி போகும்போதெல்லாம், லேட்டாகி விடுமோ, பிரின்சியிடம் அனுப்பி விடுவார்களோ! என்று அதே படபடப்பு! கல்லூரி நேரம், கோச்சிங்,எல்லாம் முடிந்து திரும்பி வரும்போது, இருட்டத் தொடங்கிவிடும்! அப்புறம், பூனைக் கண்ணை மாட்டிக் கொண்டுதான், இங்கும் அங்கும் பார்த்து ரசிக்க வேண்டும்!" என்று பாவனையோடு மகேந்திரன் சொன்ன விதத்தில், இரு பெண்களும் நகைத்தனர்.

"அதெல்லாம், பட்டத்து இளவரசரின் தனியுரிமையாக்கும்! அதில், நான் மூக்கை நீட்டுவதாக இல்லை! ஆளை விடுங்கள்!"

என்று இருக்கையில் வசதியாக சாய்ந்து, கண்ணை மூடிக் கொண்டான் அவன்.

“சோம்பேறி!” என்று, சரளா சிரித்தாள்.

கூடச் சேர்ந்து முறுவலித்துவிட்டு, “அது யார் அத்தை, ‘பட்டத்து இளவரசர்?’ உங்கள் மூத்த மகனா?”, என்று நளினி விசாரித்தாள்.

“ஆமாம்மா! இங்கே, நல்ல நல்ல ‘வ்யூ பாயிண்ட்’கள் நிறைய இருப்பதாகச் சொல்லுவான் காட்டியும் இருக்கிறான். ஒருநாள் உன்னைக் கூட்டிப் போய்க் காட்டச் சொல்லுகிறேன்.”

“ஜாக்கிரதை, அம்மா! அப்புறம், ஐஸ் உறைய வைத்துவிடப் போகிறது” என்று மகன் எச்சரிக்க, “போடா, அரட்டை! வாயை வைத்துக் கொண்டு சும்மா இரு!” என்று மகனை அடக்கினாள் தாயார்.

‘என்ன என்ன’ என்று, மனம் குறுகுறுத்த போதும், அடக்கிக் கொண்டு பேசாதிருந்தாள் நளினி.

எல்லாரும் எதிர்பார்த்ததுபோலவே, மகேந்திரனுடைய தந்தை, நளினியை மிகுந்த அன்புடன் வரவேற்றார். தன் அருகிலேயே அமர்த்திக் கொண்டு,பார்த்துப் பார்த்து மகிழ்ந்தார். “அப்படியே, மனோ மாதிரியே இருக்கிறாயேம்மா! அவளே வந்து விட்ட மாதிரிதான் இருக்கிறது!” என்றுரைத்துக் கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

எதிர் சோஃபாவில் உட்கார்ந்து கொண்டு, மகேந்திரன் அளந்தான். “உனக்குத் தெரியுமா, நளினி? அன்றைக்கு, அப்பாவும், அத்தையும் பேசினார்களே, அப்படியே ‘பாச மலர்’ சினிமாதான். நான் கைக்குட்டையை இரண்டு தடவை பிழிந்து ஊற்றினேனாக்கும்! நானே இப்படி என்றால், அப்பா எப்படி என்று, நீயே ஊகித்துக் கொள்! இது நல்ல சிமெண்ட் கட்டிடம்! பலமான



அஸ்திவாரம், வேறு! இல்லாவிட்டால், அன்றைக்கே கண்ணீர் வெள்ளம் அடித்துக் கொண்டு போயிருக்கும்!”

எல்லோருடனும் சேர்ந்து, கலகலவென்று சிரித்தவாறே திரும்பிய நளினி சட்டெனத் திகைத்தாள்.

நல்ல பாட்டின் நடுவே அபஸ்வரம் தட்டினாற்போல, மகிழ்ச்சிகரமான அந்த சூழ்நிலைக்குச் சற்றும் பொருந்தாத விதமாகப் புருவ மத்தியில், சிறு முடிச்சுடன், அங்கே ஓர் இளைஞன் நின்று கொண்டிருந்தான்!

அவன் யாராக இருக்கக் கூடும் என்பதை எளிதாகவும், சரியாகவும் ஊகித்து விட்ட நளினிக்கு, நெஞ்சு படபடத்தது! இருந்திருந்து இவனா, இந்த அன்பான குடும்பத்தின் மூத்த மகனாக இருக்க வேண்டும்? கடவுளே எவ்வளவு ஆசையாக வந்தாள்!




அன்று ஒரு வெள்ளிக்கிழமை.

வழக்கம்போல, நளினி அவளது சிநேகிதி நஸ்ரீனை பஸ்சில் ஏற்றி விட்டு விட்டு, கல்லூரி வாசக சாலைக்குச் சென்றாள்.

அன்று பார்த்து, ஹாஸ்டல் தோழிகள் சிலரும், வாசக சாலைக்கு வந்திருந்தனர். அவர்களுக்கும், சில ‘ரெஃபரன்ஸ்’ புத்தகங்கள் வேண்டும் என்று கூற, அரட்டையடித்தபடியே புத்தகங்களை எடுத்துவிட்டுப் பார்த்தால், விடுதிக் கதவை மூட, இன்னும் பத்து நிமிஷங்கள்கூட இல்லை!

ஓடி, ஓடிச் சென்றால் கூடப் போய்ச் சேர முடியாது! ஒருத்தி, அழவே தொடங்கி விட்டாள்.

அவளுக்கு, மூன்று எச்சரிக்கை முடிந்து விட்டதாம்! எதிர் காலம் போய்விடும் என்றுதான் அழுகை!

இந்த மாதிரி நிலைமையில் இருக்கிறாளே, கொஞ்சம் கையில் கட்டியிருக்கும் கடிகாரத்தைப் பார்த்திருக்கக் கூடாதா?

ஆனால், அன்றைக்கு, அதையெல்லாம் பேசக்கூட, நேரமே இல்லை!

மொத்தமாய், ஆறு தோழிகளும் தண்டனைக்கு ஆளாகப் போவதை எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில், கடவுளே உதவிக்கு வருவது போலத் தூரத்தில், ஒரு கார் வரும் சத்தம் கேட்டது!

யாரானாலும், இந்த வழியாகத்தான் சென்றாக வேண்டும்!

உண்மையைச் சொல்லி, உதவி கேட்போம் என்று, நளினி சொன்னது யாருக்கும் பிடிக்கவில்லை!

கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவுகிற தன்மை எல்லாம், சேர., சோழ, பாண்டியர் காலத்தோடு, முடிந்துவிட்ட குணமாம்! இப்போது காரை நிறுத்தக்கூட மாட்டார்களாம்! தப்பும் அவர்கள் பக்கம்தானே?

எனவே, அவள் தன் யோசனையைச் சொன்னாள்!

அவர்களில் ஒருத்தி, பயங்கரமான வயிற்றுவலி போலக் கீழே உருண்டுவிட வேண்டுமாம்! மற்றவர்கள் சேர்ந்து காரை நிறுத்தி, கல்லூரி விடுதியில் இருக்கும், வைத்தியரிடம் காட்ட, அவர்களை அழைத்துச் செல்லுமாறு கெஞ்ச வேண்டும்!

ஆறு இளம் பெண்கள்! எந்த ஆண்மகனும் மறுக்க மாட்டான்!

ஓட்டுவது, பெண்ணாக இருந்தாலும், உதவத்தான் செய்வாள்!



ஆறு பேரில், அதிக அழகுடன் திகழ்ந்த நளினியிடம், வலியால் துடிக்கச் சொன்னார்கள்!

கார் சத்தம், அருகில்நெருங்கவும், அவளும், சட்டெனக் கீழே, தரையில் அமர்ந்து, 'அம்மா, அப்பா' என்று முனகலானாள்!

மற்றவர்கள் ஓடிப்போய், காரை வழி மறித்து நிறுத்தி, காரோட்டி வந்தவனிடம், நளினியைக் காட்டினார்கள்.

அவள் சுருண்டு உட்கார்ந்து முனகியதை, உண்மையென்று நம்பிய கார்க்காரன், அவளை, வைத்தியரிடம் அழைத்துப் போவதாகச் சொன்னான்!

இல்லையில்லை! விடுதியிலேயே ஒரு வைத்தியர் எப்போதும் இருப்பார் என்று, அவனை நம்ப வைத்து, நளினியைக் காரில் ஏற்றிவிட்டு, மற்றவர்களும் நெருக்கியடித்துக் கொண்டு, காரில் ஏறிக்கொண்டார்கள்.

'அய்யோ, இவளுக்கு வலிக்கிறதே! கொஞ்சம் வேகமாக ஓட்டுங்கள், சார்!'' ஆளாளுக்கு விரட்ட, அதற்குச் சரியாக, நளினியும் முனக... அவன் மிக வேகமாகக் காரை ஓட்டிச் சென்று விடுதியை அடைய...

அதுவரை, எல்லாம் சரிதான்!

'முன்னே பின்னே செத்தால் தானே, சுடுகாடு தெரியும்?' என்று ஒரு பழமொழி உண்டு! வாழ்க்கையில் எப்போதேனும், இப்படி நடித்து, மற்றவர்களை ஏமாற்றிப் பழகியிருந்தால், இப்போதும், கடைசி வரை எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று தெரிந்திருக்கும்!

ஆனால், கார் நிற்கும்போதே, அந்தப் பெரிய கேட்டை, வாயில் காப்போன் மூடத் தொடங்கவும், மற்றதெல்லாம் மறந்து, அவசரமாகக் கார்க் கதவைத் திறந்து முட்டி மோதிக் கொண்டு, விழுந்தடித்து இறங்கி, எல்லோருமாய்க் கல்லூரி வாயிலை நோக்கி ஓடலாயினர்.

"நல்ல வேளை! கேட் மூடு முன், சரியான நேரத்துக்கு வந்து விட்டோம்" என்ற கூச்சலுடன், கேட்டைத் தாண்டும் போதுதான், அழைத்து வந்தவனுக்கு நன்றி கூறவில்லையே என்று நளினி திரும்பிப் பார்த்தாள்.

காரை ஓட்டி வந்தவனின் முகத்தில் காணப்பட்ட அருவறுப்பும், கோபமும் நடந்ததை அவன் ஊகித்து விட்டான் என்பதை உணர்த்தியது! தன்னை முட்டாளடித்து விட்டார்களே என்கிற ஆத்திரம்!

செய்தது தப்பு என்பதைவிட, அவன் அதைப் புரிந்து கொண்டதுதான் நளினியை மிகவும் பாதித்தது. குறைந்த பட்சமாய் அவளாவது, கொஞ்சம் முக்கி முனகியபடியே வந்திருந்தால், இந்த 'ஏமாற்றப்பட்ட' உணர்வு அவனுக்குத் தோன்ற நேராமல் தவிர்த்திருக்கலாமே!

தான் ஏமாளியாக்கப்படுவது யாருக்குத்தான் பிடிக்கும்?

ஓடிப் போய், அவனிடம் மன்னிப்புக் கேட்கலாமா என்ற எண்ணம், அவளுக்குத் தோன்றி, உடனே மறைந்தது! ஒரு காரணம், "உள்ளார போ, பாப்பா! கதவை மூடணும்," என்று வாயிற்காவலன் கதவை மூடத் தொடங்கியது. அவனைக் கொஞ்சம் தாமதிக்கச் சொல்லிவிட்டு, மன்னிப்புக் கேட்கப் போகலாம் என்றால், அதற்கு வழியின்றி, அந்தக் காரும் சீறிக்கொண்டு கிளம்பிவிட ஒரு பெருமூச்சுடன் நளினியும் விடுதிக்குள்ளே சென்றாள்.

அதுபற்றித் தோழிகளிடம் அவள் வருத்தத்துடன் கூறியபோது, "அட போப்பா! ஒன்றும் இல்லாததைப் போய்ப் பெரியதாகக் கவலைப்பட்டுக்கொண்டு அந்த ஆள், இதற்குள் நம்மையெல்லாம் மறந்தே போயிருப்பான்! நாம் ஏமாற்றியதைக் கண்டுபிடித்திருந்தால்கூட, கெட்டிக்காரப் பெண்கள் என்று பாராட்டியிருப்பானே தவிரப் பெரிதாகத் தப்பாக நினைக்க, இதில்



என்ன இருக்கிறது? நாம் என்ன, அவன் பணத்தைத் திருடி விட்டோமா? அல்லது, பொருளைக் கொள்ளையடித்தோமா? அதற்கும் மேலாகக் கண்ணடித்துக் கெட்ட வழிக்கு இழுத்தோமா? ஒன்றுமே கிடையாதேப்பா! அத்தோடு, அவனை, நாம் யாரும், மீண்டும் சந்திக்கக்கூட வாய்ப்பில்லை! விட்டுத் தொலைப்பாயா..." என்று, இலகுவாகச் சொன்னார்கள்.

அவர்கள் எல்லோருமே, மனதில் உண்மையென்று நம்பித்தான் சொன்னார்கள்! ஆனால், ஆசையாக அவளை அழைத்து, அருமை பாராட்டும் இந்த அன்பான குடும்பத்தின் மூத்த மகனாக அல்லவா, அவனை, அவள் சந்திக்கும்படி ஆகி விட்டது!

அத்தோடு, அவளுடைய சிநேகிதிகள் சொன்னது போல, அன்றைய நிகழ்ச்சியை, அவன் மறந்தது போலவும், நளினிக்குத் தோன்றவில்லை! மறந்திருந்தால், அவனது புருவச் சுளிப்புக்கு அவசியமே இல்லையே!

நளினியின் உளைச்சலை அறியாமல், மகனை ஆவலாக அழைத்து, "பார் சுரேன், நளினி! உன் மனோகரி அத்தையுடைய மகள் நளினிம்மா, என் பெரிய பையன்! சுரேந்திரன்," என்று, இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்தார், சுந்தர வதனம்!

காட்டிக் கொடுப்பானோ என்று, சில கணங்கள் கவலையோடு கவனித்தாள், நளினி. ஆனால், அவன் அப்படி ஏதும் செய்யவில்லை! "ஹலோ!" சொன்னதோடு மனோகரி அத்தை நன்றாக இருக்கிறார்களா?" என்று, முறைப்படி குசலமும் விசாரித்தான்.

தந்தைக்கு இதமாக இருக்கட்டும் என்று விசாரிக்கிறானோ, என்ற சந்தேகம் இருந்ததால், நளினியால் இயல்பான கலகலப்புடன்பேச முடியவில்லை! பெரு முயற்சி செய்து, "உம், அங்கே எல்லோருமே நல்ல சுகம் தான் என்று அம்மா சொல்லச் சொன்னார்கள்!" என்று சாதாரணமாகப் பேசினாள்.

"நீதான் ஒல்லியாக இருக்கிறாயம்மா! சாயல், மனோ போலவே இருந்தாலும், அவள் இன்னமும் சற்றுப்பூசினாற்போல, நன்றாக இருப்பாள்! நீ, இன்னும் நன்றாகச் சாப்பிட வேண்டும், நளினியம்மா!" என்றார் பெரியவர்.

"எனக்கென்னவோ, நளினி ஆரோக்கியமாக இருப்பது போலத்தான் தோன்றுகிறது! நீங்கள் அண்ணன்மார் மூன்று பேரும் சேர்ந்து, இது நன்றாயிருக்கிறது, அது வெகு ருசி என்று, மனோவுக்குத் திணித்ததில், அவள்தான் சற்று குண்டாக இருந்தாள்! இந்த அண்ணன்மார் பண்ணுகிற வேலை, பூசனிக்காய் மாதிரி ஆகிவிடுவேனோ என்று, அவள் எவ்வளவு கவலைப்படுவாள் தெரியுமா?" என்றபடி, கையில் கொண்டு வந்திருந்த பழச்சாறை, மூத்த மகனுக்குக் கொடுத்தாள் சரளா.

யோசனையோடு பழச்சாறைப் பார்த்தபடி, சுரேந்திரன் சொன்னான். "அவ்வளவு பாசத்தையும் விட்டுவிட்டு,காதல் என்று மாமாவோடு, அத்தை போய் விட்டார்களே, அம்மா!"

பெரிய மாமனின் முகத்தைப் பார்க்கும் போது, பெற்றவள் செய்தது அநியாயம் போலத் தோன்றியது நளினிக்கு!

ஆனால், வேறு விளக்கம் கூறினாள் சரளா. "வாழ்க்கையில் யாருக்கு முதலிடம் என்று தெளிவு வந்து விட்டது, போய் விட்டாள்! உன் அப்பாவைவிட, திருச்சித் தாத்தா, மாமாக்களை, நான் பெரிதாகக் கருதுவேனா, என்ன?" என்று நாத்தனாருக்கு வக்காலத்து வாங்கினாள்.

"அதாவது... முக்கியமானதாக நினைப்பது எதுவோ, அதற்காக மற்றவைகளைத் தூக்கி எறிந்து விடுவது, பெண்களுக்கு வழக்கம் என்கிறீர்கள்! அன்பு, பாசம், நேர்மை, நியாயம்... எதை வேண்டுமானாலும் விட்டு விடலாம்! உனக்கும் அப்படியேதானா அத்தை மகளே?"



இது நேரடித் தாக்குதல்! அதேசமயம், மற்றவர்கள் எதையும் ஊகிக்க முடியாதபடி பொதுவாகப் பேசினாலும், இது தாக்குதலேதான்! அன்று, அவன் முகத்தில் தெரிந்த கோபம், இன்றும் அவனுள்ளே கொஞ்சமும் குறையாமல் எரிந்து கொண்டுதான் இருக்கிறது!

வெறும் 'வெள்ளைப் பொய்' என்று, அவன் அதை விட்டுவிடுவதாக இல்லை! தந்தையின் மகிழ்ச்சியைக் குலைக்க மனமில்லாததாலோ என்னவோ, வெளிப்படையாக, அவன் அவளைக் குற்றம் சாட்டவில்லை!

ஆனால் நேர்மை நியாயத்தை அவள் தூக்கி எறிந்து விட்டதாகச் சொல்லாமல் சொல்லி அவளுக்குப் புரிய வைக்கிறான்! இவனுக்கு என்னவென்று விளக்குவது?

'புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்', பொய்கூடச் சொல்லலாம் என்று, அந்த மாமனிதர் வள்ளுவப் பெருமானே, எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறாரே! அது மாதிரிதானே? ஆனால், இதை எடுத்துச் சொல்லுவது என்றால், அன்று நடந்ததையும், எல்லோருக்கும் விளக்கியாக வேண்டும்!

அப்படியின்றி, இல்லையென்று மறுத்தாலோ, அவனுக்கு ஏளனமாக இருக்கும்!

உடனடியாகப் பதில் சொல்லும் சிக்கலில் இருந்து, மகேந்திரன் அவளைக் காப்பாற்றினான்!

"அத்தை மகள் ரத்தினமா, அண்ணா? நான்கூட, அன்றைக்கு முதல் நாளன்று மனோகரி அத்தையுடைய மகளாக இவள் இருக்கக் கூடும் என்று தெரிந்ததும், இதையேதான் சொன்னேன்! என் சினேகிதர்கள், நளினியின் சினேகிதிகள் எல்லோரும், கை தட்டினார்கள்!" என்றவன், தொடர்ந்து, "ஹூம்! அண்ணன் மாதிரியேதான், நானும் நினைக்கிறேன், பேசுகிறேன்! ஆனால், நானும் புத்திசாலி தான் என்று, அப்பா ஒத்துக் கொள்வதே

இல்லை! இன்னும் கல்லூரிக்குப் போய் படிக்கச் சொல்லுகிறார்! என்ன அநியாயம் பார், நளினி!" என்று சோகமாகப் பெருமூச்சு விட்டு, எல்லோரையும் சிரிக்க வைத்தான், அவன்.

"அதன் காரணம் வேறு ஒன்றும் இல்லை, தம்பி, நான் 'அத்தை மக'ளோடு, அழகாக நிறுத்திக் கொண்டேன்! அதிகப் படியாக ஒரு 'ரத்தினத்தை'ச் சேர்த்துக் கல்லாக்கவில்லை. அந்த அதிகப்படியை விட்டுவிடு! நீயும் ஒரு மாதிரி கெட்டிக்காரனாகி விடலாம்!" சாதுவாக அண்ணன் சொன்னதற்கு, அந்த வீட்டில் எல்லோரும் நகைத்தனர்.

ஆனால், அவள் ஒன்றும் உயர்வான ரத்தினம் இல்லை. வெறும் கண்ணாடிக் கல் அவள் என்று, சொல்லாமல் சொல்கிறான் என்று, நளினிக்கு மட்டுமே புரிந்தது.

அன்று நடத்தப்பட்ட நாடகத்தின் காரணமும், விவரமும் தெரியும் வரை, சுரேந்திரன் இப்படியே குத்திக் கொண்டேதான் இருக்கப் போகிறான் என்று, நளினி புரிந்து கொண்டாள்.

இவனிடம் எப்படியாவது, அன்றைய விவரம் சொல்லவேண்டும்!

எப்படிப் பிறர் அறியாமல், இவன் குத்துகிறானோ, அதே போல..

வாய்ப்பைத் தேடி கொண்டிருந்தவள், உணவின் போது, 'இதைச் சாப்பிடு, வயதுப் பெண், இன்னும் கொஞ்சம் வைத்துக் கொள்...' என்றெல்லாம், மாமாவும், அத்தையுமாக உபசாரம் பண்ணவும் , அதையே சாக்காகக் கொண்டு, நளினி கல்லூரிப் பேச்சை எடுத்தாள்.

"இதுதான் அத்தை, இந்தக் கல்லூரிக்கும், வீட்டுக்கும் உள்ள வித்தியாசம்! நீங்கள் ஆசையாகச் சாப்பிடச் சொல்லுகிறீர்கள்.."



"என்ன கல்லூரி விடுதியிலும், பக்கத்தில் உட்கார்ந்து, சாப்பிடும்மா, சாப்பிடு என்று கெஞ்சிக் கொஞ்ச வேண்டும் என் கிறாயா?" என்று, சுரேந்திரன் கிண்டலாகக் கேட்டபோது, சொல்வதறியாமல், நளினி ஒரு கணம் திணறிப்போனாள். "அப்படிக் கேட்பது, கொஞ்ச அதிகப்படியாகத் தோன்ற வில்லை?"

அவளது முயற்சி புரிந்து, வேண்டுமென்றே, அவன் இப்படித் தட்டிப் பேசுகிறானா?

அவசரமாக யோசித்து, "சேச்சே! அப்படி யாராவது எதிர் பார்ப்பார்களா? அதெல்லாமில்லை! ஹாஸ்டலில் சாப்பிடுவது என்றால், கிட்டத்தட்ட, ஒரு ஹோட்டலில் உண்பதைப் போலத் தானே? பரிவு, பாசம் எல்லாம் அங்கே எதிர்பார்ப்போமா என்ன? ஆனால் ஒரு ஹோட்டலில் நமக்குப் பிடித்ததை வரவழைத்துச் சாப்பிட்டுக் கொள்ளலாம்! ஆனால், எங்கள் விடுதியில், போடுவதைத்தான் விழுங்கியாக வேண்டும்! பிடிக்காவிட்டால், வீட்டுக்குப் போ, என்று, வார்டன் இரக்கமற்றுக் கண்டிப்புக் காட்டுவார்கள்! தட்டில் மீதம் வைத்தலும், 'தேசீய வீண்டிப்பு' என்று திட்டு விழும்! எல்லாம், மணிப் பிரகாரம்... நிமிஷம் கூடத் தவறாமல் செய்ய வேண்டும்! இது, கல்லூரி ஹாஸ்டலே கிடையாது, ராணுவப்பயிற்சி முகாம் என்று கூடச் சில பேர் சொல்லுவார்கள்! ஆறுமணிக்கு வெளி கேட் மூடினால், அவ்வளவுதான்1 ஒரு நிமிஷம் தாமதமாக வந்தாலும், பிரின்சியிடம் போய் நின்று, வாங்கிக் கட்டிக் கொண்டுதான் உள்ளே போக முடியும்! வீட்டுக்கும், புகார் கடிதம் போய்விடும்!" என்று, சுற்றி வளைத்து, ஒரு வழியாகச் சொல்ல வேண்டிய விஷயத்துக்கு, நளினி வந்து சேர்ந்தாள்.

அப்போதும், "தாமதமாகப் போனால்தானே?" என்று மடக்கினான், சுரேந்திரன். "அந்தத் தப்பைச் செய்யாமல் ஒழுங்காக நடந்து கொண்டால், யார் யாரை, என்ன செய்ய முடியும்?"

பேச்சைக் கொண்டு செலுத்தும் வகையறியாமல், நளினி குழம்பினாள்.

சுரேந்திரன் கேட்டது நியாயம்தான்! ஆனால், அதை ஒத்துக்கொண்டால், பிரச்சனையை மீண்டும், இந்த மாதிரி அணுக முடியாது!

ஆனால், ஒத்துக் கொள்ளாவிட்டாலும், தப்பை ஆதரிப்பது போலத் தோன்றும்!

நளினி திணறியபோது, தன்னை அறியாமலே உதவி செய்கிறவனாகி,'' 'சில பேர் சொல்லுவார்கள்' என்றாயே, நீ சொன்னதில்லையா? அதாவது, நீ ஒரு நாளும், எதிலும் மாட்டியது இல்லையாக்கும்?'' என்று விசாரித்தான் மகேந்திரன்.

நிம்மதியோடு மூச்சு விட்டு, "ஊஹூம்! நான், சட்ட திட்டங்களுக்கு ரொம்பவுமே பணிந்து போகிறவளாக்கும்!'' என்று சாதுவாய் முறுவலித்து விட்டு, நளினி தன்னைப்பற்றிச் சொன்னாள்.

"எப்போதும் ஓர் ஐந்து நிமிஷம் முன்னதாகவே, இருக்க வேண்டிய இடத்தில் இருந்து, செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து முடித்தும் விடுவேன். ஆனால், வெள்ளிக்கிழமைகள் மட்டும் கொஞ்சம் திணறுவேன்.'' என்று நிறுத்தினாள்.

எதிர்பார்த்தது போலவே, 'ஏன்' என்று ஒருவருக்கு இருவராக மகேந்திரனும், சரளாவும் விசாரிக்க, அவள் விவரம் தெரிவித்தாள். "என் ஹாஸ்டல் சினேகிதி நஸ்ரீன், கொஞ்சம் பயந்த ரகம். அதனால், பஸ் ஏற்றிவிட, அவளோடு கூடப் போவேன். விட்டுவிட்டு,அப்படியே, வழியில் இருக்கும் கல்லூரி வாசக சாலையில் புத்தகம் எடுத்துக் கொண்டு திரும்பி வரும்போது, சில சமயங்களில், தாமதமாகிவிடும். என்னதான் விழுந்தடித்துக்கொண்டு ஓடினாலும், கேட் மூடுமுன் விடுதிக்குப் போய்ச் சேரப் பெரும்பாடாகி விடும்!'' என்று முடித்தவள்,



சரளாவிடம் திரும்பி, அன்றைய உணவு வகைகளைப் பாராட்டிப் பேசலானாள்.

வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல், எவ்வளவு சொல்ல முடியுமோ, அவ்வளவு சொல்லியாயிற்று! இதற்கு மேலும், சுரேந்திரன் முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றால், போகட்டும் என்று விட்டுவிட வேண்டியதுதான்.

ரோஜாவுக்காக, முள் குத்தாமல், கவனத்துடன் இருப்பதில்லையா? அது போல, மற்ற நல்ல உறவுகளுக்காக, இவனைப் பொறுத்துப் போக வேண்டியதுதான்!

சுரேந்திரன் அவள் பேச்சைச் கவனித்ததுபோலக் காட்டிக் கொள்ளவில்லை! ஆனால், அவளது விளக்கத்தை ஓரளவு ஏற்றுக் கொண்டதாலோ, என்னவோ, மற்றவர்களைப் போல, உருகிப் பேசாவிட்டாலும், அதற்குமேல் தன் மறைமுகப் பேச்சைத் தொடரவும் இல்லை! ஒருவேளை, குடும்பத்தின் மற்ற மூவரின் வெளிப்படையான பாசத்தைக் கண்டு, அவளைப் போலவே, அவனும், அவளைச் சகித்துக் கொள்ளவும் முடிவு செய்திருக்கலாம்!

உணவின்பின், சுந்தரவதனம் ஓய்வெடுக்க நளினி வீட்டைச் சுற்றிப் பார்த்தாள்.

பழைய கால, ஆங்கிலேய முறைப்படிக் கட்டப்பட்டிருந்த வீடு ஆங்கிலேயரால் கட்டப்பட்டது என்றார்கள். இவர்கள் கைக்கு வந்தபிறகு, பாதுகாப்பிற்காகச் சில வேலைகள் செய்திருந்தார்கள். இன்றைய வாழ்க்கை வசதிகளும், எல்லாமே இருந்தன!

வளவளவென்று பேசியபடியே, மகேந்திரன் விவரித்தான். "இதோ, இந்த ஹால்தான் முன்பு பால்ரூமாகப் பயன்பட்டதாம். ரொம்பப் பெரியதாக இருக்கிறது என்று, இடையில் சுவர் எழுப்பிச் சின்னதாக்கி விட்டோம்! ஒருபுறம் ஆபீஸ் அறை,

அப்பா, அம்மா அறை, இந்தப் பக்கம் பூஜையறை, ஒரு விருந்தினர் அறை என்று, மூன்று வரிசையாகப் பிரித்து விட்டோம்! பின்பக்கம் நாம் சாப்பிட்டோமே, அந்த அறை, அதையடுத்து, சாமான், சமையல் அறைகள்! மேலே, எனக்கு, அண்ணனுக்கு அறைகள், ஜிம், இப்படி!... பின்புறம் வீட்டுத் தோட்டம்... தோட்டத்தை, இன்னொரு தடவை வரும்போது, பார்ப்போமா? தோட்டத்தைச் சுற்றத் தொடங்கினால், நீ, நேரத்துக்குக் கிளம்ப முடியாது!"

"உங்கள் தோட்டத்தை நான் பார்க்க முடியாமலே போனால் கூடப் பரவாயில்லை! ஆறு மணிக்குள்ளாக, நான் கல்லூரியில் இருக்கவேண்டும், மகேன்!" என்றாள் நளினி!

அன்று மாலைச் சிற்றுண்டியைச் சீக்கிரம் முடித்துக் கொண்டு, நளினி கிளம்புவதாக ஏற்பாடு. ஆறுமணிக்குள்ளாக, மாணவியர் விடுதியில் இருந்தாக வேண்டும்!

அதற்காகவே, மாலை காஃபியை நாலு மணிக்கே தொடங்கினார்கள்.

மதிய உணவு வேறு, கொஞ்சம் கனமாக இருந்தபடியால், பெயருக்கு, ஒன்றிரண்டைக் கொறித்து தன் சிற்றுண்டியை முடித்துக் கொள்ள, நளினி முயன்றாள்.

புரிந்துகொண்டு, சரளா காஃபியைக் கொடுக்க சாதாரணமாகவே எல்லாம் முடிந்திருக்கக் கூடும்!

ஆனால், ஐஸ்வர்யா மாலைச் சிற்றுண்டியில் கலந்து கொண்ட புதிய விருந்தாளி, சுந்தர வதனத்தின் பண்ணையைப் போலவே, அந்தப் பகுதியில் இருந்த இன்னொரு பண்ணைக் குடும்பத்து வாரிசு, அப்படியே இருக்க விடவில்லை!

நளினியைவிட, ஓரிரு ஆண்டுகள், அவள் மூத்தவளாக இருக்கக்கூடும்! ஆனால், சின்னவளாகக் காட்டிக் கொள்ள விரும்பியது, நன்றாகவே தெரிந்தது. படபடவென்று



இமைகளைக் கொட்டுவது, அறியாப்பெண் போல், விழிகளை விரித்து விவரம் கேட்பது, குழந்தைக் குரலில் கொஞ்சலாகப் பேசுவது...எல்லாமே, நளினிக்கு விசித்திரமாக இருந்தது. இது போலெல்லாம் நடந்து கொண்டால், 'இதென்ன வீடா, நாடக மேடையா' என்று பிள்ளைகளை மனோகரி நன்றாகத் திட்டி விடுவாள்!

மிகவும் இயல்பாக வாழப் பழகியிருந்த நளினிக்கு, ஐஸ்வர்யாவின் செயல்கள் வேடிக்கையாகவும் இருந்தன! தகதகத்த, அவளது உடையும் அப்படித்தான்! ஏதோ ஒரு பார்ட்டிக்குப் போகிற மாதிரி,உடம்போடு ஒட்டித் தைத்திருந்த, ஐஸ்வர்யாவின் விலையுயர்ந்த ஆடையும், அதற்கேற்ற அணி கலன்களும்கூட, நாடகத்தில் நடிப்பவள் போல, அந்த இடத்துக்குப் பொருத்தமற்று இருந்ததும், அவளுக்கு வேடிக்கையாகத்தான் இருந்தன!

ஆனால், அந்த வேடிக்கையை ரசிக்க முடியாமல், ஐஸ்வர்யா, அவளையே குடைந்தது தான், நளினிக்கு எரிச்சலாக இருந்தது! ஆனால், அந்த ஐஸ்வர்யாவும், இந்தக் குடும்பத்துடைய விருந்தாளி ஆயிற்றே! எனவே, தாயாருடைய மதிப்புக் குரிய அண்ணன் குடும்பத்துக்காகப் பொறுமையை இழுத்துப் பிடித்து வைத்துக் கொண்டு பதில் சொன்னாள்.

நளினியுடைய அப்பா என்ன செய்கிறார்? அம்மா எப்படி?, உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்?

சுருக்கமாகப் பதில் சொன்ன போதும், நளினி எதையும் மறைக்கவில்லை! மறைக்கத் தேவை இருப்பதாகவும் அவள் எண்ணவில்லை!

பொதுவாக, நளினி, அனாவசியமாக யாருக்கும் அடங்கிப் போகிறவள் அல்ல! அப்படி அடங்கிப் போகும்படி, அவளுடைய பெற்றோர் அவளை வளர்க்கவும் இல்லை!

எனவே, குடைதலில் இருந்து, ஐஸ்வர்யா குத்தத் தொடங்கியதும், எரிச்சல் கோபமாக மாறத் திருப்பிக் கொடுக்கலானாள்.

ஐஸ்வர்யா, தனது குத்தலைத் தொடங்கியது, நளினியின் பொருளாதார நிலையைப் பற்றி! அதை என்றைக்குமே நளினி குறைவாகக் கருதியது இல்லை! தந்தை, தாய் இருவருமே சம்பாதித்தார்கள். ஓரளவு கை நிறையவே! எனவே, பிள்ளைகளின் எந்த நியாயமான ஆசையும் மறுக்கப் பட்டதில்லை! சிறந்த கல்வி, நல்ல ஆடை, அணிமணிகள், உணவு ஃப்ளாட், ஒரு சிறு கார்! நளினியும், அவளுடைய தம்பி, தங்கையும் திருப்தியாகத்தான் இருந்தார்கள்!

எனவே, அவர்கள் என்னவோ ஒன்றுமில்லாதவர்கள்போல, ஐஸ்வர்யா பேசவும், நளினிக்குப் பொறுக்கவில்லை!

மதியம் நிறைய உண்டுவிட்டதால், வயிறு டொம் மென்று இருப்பதாகச் சொல்லி, அடுத்த துண்டு பாதாம் பர்பியை நளினி மறுத்தாள். சரளாவும், அதை ஏற்று, கையில் எடுத்ததை, மீண்டும் பாத்திரத்தில் வைக்க, அத்தோடு, விஷயம் முடிந்திருக்கும்!

ஆனால், அதற்கு ஐஸ்வர்யா விடவில்லை!

என்னவோ நளினிக்கு வக்காலத்து வாங்குகிறவள் மாதிரி, "விட்டு விடுங்கள் ஆண்ட்டி! பாவம்! நெய்யும், கட்டித் தயிருமாக, இந்த மாதிரி உணவெல்லாம், அவள் சாப்பிட்டுப் பழகியிருக்க வழியில்லை. பாருங்கள்! மதியச் சாப்பாடே, தொண்டை வரை முட்டிக்கொண்டு நிற்கும்! அதற்கு மேலும், என்னதான் ஆசையாக இருந்தாலும், நெய்யும் பாதாமுமாக, இது வேறு, எப்படி வயிற்றில் இறங்கும்?" என்று சரளாவிடம் சொல்லி விட்டு, நளினியிடம் திரும்பினாள்.

"பாவம்! உன் அம்மாவும் வேலைக்குப் போகிறார்கள், இல்லையா? வேலையும் பார்த்து வீட்டையும் எப்படித்தான் பார்க்கிறார்களோ, பாவம்! ஆனால், தேவை என்று வரும் போது, சுகத்தைப் பார்க்க முடியுமா?" என்று, பரிவு காட்டிப் பேசினாள்!



'கருகரு' வென்று உள்ளே பொங்கிய கோபத்தை அடக்கிக் கொண்டு "அம்மாவுக்குத் திறமை அதிகம்! வீட்டில் சும்மா சோம்பியிருக்க மாட்டார்கள்! வெளி வேலை, வீட்டுப் பொறுப்பு இரண்டையுமே அவர்களை நம்பி, அலுவலகத்தில், அவர்களுக்குத் தலைமைப் பொறுப்பைக் கொடுத்திருக் கிறார்கள்! பொறுப்பை ஏற்று நடத்துகிறவர்கள்." என்றாள் நளினி பெருமிதமாக.

அப்போதும் விடாமல், எப்படியும், மாதம் முழுவதும், உழைத்துச் சம்பாதித்த பணத்தை, இந்த மாதிரியான உணவில், உடையில் செலவு பண்ண, எப்படி மனம் வரும்?" என்றாள் ஐஸ்வர்யா.

இந்தப் பேச்சை, மற்றவர்கள் எப்படி எடுத்துக் கொள்கிறார்கள் என்று அறிய, ஒருதரம் பார்வையைச் சுழற்றினாள் நளினி.

முன்பே சொல்லியிருந்தபடி, சர்க்கரையில்லாத டீயுடன், கணவரை எழுப்புவதற்காகச் சரளா சென்று விட்டிருந்தாள். முந்திரிப் பக்கோடாவில் இருந்த பச்சை மிளகாயைக் கவனத்துடன் அகற்றிக் கொண்டிருந்தான் சுரேந்திரன். பிறர் அறியா வண்ணம், மேஜைக்குக் கீழாகக் கட்டை விரலை உயர்த்திக் காட்டினான், மகேந்திரன்!

சின்னவனின் ஆதரவான செய்கையைவிட, மூத்தவனின் அலட்சியமே உசுப்பி விட, இனிய குரலில், " உங்கள் வீட்டில் அப்படி இருக்கலாம்! ஆனால், எங்கள் வீட்டில், பிள்ளை களுக்கான உடை,உணவுக்கோ, படிப்புக்கோ செலவழிக்க, என் "அம்மா கணக்குப் பார்க்க மாட்டார்கள்." என்றுரைத்துப் புன்னகை பூத்தாள் நளினி!

திகைத்து விழித்த ஐஸ்வர்யாவின் முகம் கன்றிக் கறுத்ததைத் திருப்தியுடன் கண்டுவிட்டு, காஃபிக் கப்பை எடுத்தாள்.

"எங்கள் வீட்டில், எதற்குமே கணக்குப் பார்க்கத் தேவையே கிடையாது! அந்த அளவுக்கு பணம் கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது. தெரியுமா?" என்று மற்றவள் திக்கித் திணற, சுரேந்திரன் நிமிர்ந்தான்.

"சாப்பிட்டு முடித்து விட்டால், காஃபிக் கப்போடு, ஹாலுக்குப் போய் விடலாமா. அப்பாவுக்கும், அங்கே அமர்வது, வசதியாக இருக்கும்!" என்று அவன் கேட்க, எல்லோருமே எழுந்தனர்.

திக்கிக் கொண்டிருந்த ஐஸ்வர்யாவுக்காகத்தான் இந்த ஏற்பாடு என்று, உணர்ந்த நளினிக்கு, வெற்றிப் பெருமிதத்துக்குப் பதிலாக, உள்ளூர ஆத்திரம்தான் அதிகரித்தது!

ஹாலுக்குச் சென்ற பிறகும் ஐஸ்வர்யா, தன் முயற்சிகளை விட்டாளில்லை!

இந்த முறை, நளினியுடைய தம்பி தங்கையரில், யார் முதலில் பிறந்தது என்பது வரை, தெளிவுபடுத்திக் கொண்டாள்.

"தங்கைதான் முதலில் பிறந்தவள். ஆனால்... "என்ற நளினியின் பேச்சில் குறுக்கிட்டு, "படித்து வேலை பார்த்த போதும், மனதளவில், நம்நாட்டில் நிறையப் பேர் பட்டிக்காடுகளாகத்தான் இருக்கிறார்கள்! எங்கள் வீட்டில், நான் ஒரே பெண்! பெண்ணானாலும்,இவள்தான் வாரிசு என்று, என் பெற்றோர் நிறுத்தி விட்டார்கள்! நம் நாடு, இருக்கும் நிலையில், ஜனத் தொகையைப் பெருக்கக் கூடாது என்ற முற்போக்கு எண்ணம்! ஒன்று உத்தமம்! இரண்டு என்றாலும் பரவாயில்லை! ஆனால், இரண்டு பெண்களைப் பெற்ற பிறகும், படிப்பறிவில்லாத பாமரர்களைப்போல, ஆண் குழந்தைக்கு ஆசைப்பட்டு, உன் பெற்றோர், மூன்றாவதாக ஒரு பிள்ளையை, நாட்டைப் பற்றிய பொறுப்புணர்வே இல்லாமல், எப்படித்தான் பெற்றார்களோ?!



என்னால், கற்பனை செய்து பார்க்கக்கூட முடியவில்லை!" என்று, வெகு நாசூக்காகத் தோளைக் குலுக்கி, உதட்டையும் பிதுக்கினாள் மற்றவள்.

"என்னால் முடிகிறது!" என்று, நளினி முறுவலித்தாள்! "ஏனென்றால், இரட்டைப் பிள்ளைகளில், ஒன்று பிறந்தபின், அடுத்ததைப் பிறக்கவிடாமல் நிறுத்தி வைப்பது, மருத்துவர்களால் கூட முடியாத காரியம் என்பது, என் அபிப்ராயம்! அதுபற்றி, உங்களுக்கு என்ன தோன்றுகிறது, ஐஸ்வர்யா?" என்று, வேண்டும் என்றே கேட்டாள்.

ஐஸ்வர்யா என்ன சொல்லுவாள், பாவம்! மலை மீது, அந்த மிதக் குளிரிலும், அவளுக்கு வியர்த்து வழியலாயிற்று!

முதல் தடவையாகச் சந்தித்த ஒருத்தியுடைய பெற்றோரை பாமரர்கள் என்று, சற்றும் நாகரீகமே இல்லாமல் சொன்னாயல்லவா? படு, என்று உள்ளூரக் கறுவியபடி, அடுத்தவளின் திணறலை, நளினி ரசித்துப் பார்த்தாள்.

வாயை இறுக மூடி, மகேந்திரன் சிரிப்பை அடக்க, சுரேந்திரன் எழுந்தான்!

"உன் அம்மாவுக்கு, ஏதோ போன் பண்ண வேண்டும் என்றாயே! வருகிறாயா? அப்பா வருமுன், அந்த வேலையை முடித்துவிடலாம்!" என்று ஐஸ்வர்யாவை அழைத்தான்.

ஒரு கணம் மலங்க விழித்தவள், உடனே விழுந்தடித்துக் கொண்டு எழுந்தாள். "உங்கள் ஆபீஸ் அறையில் பண்ணலாமா?" என்று ஹாலை விட்டு ஓட்டமும், நடையுமாக, வேகமாக வெளியேறினாள்!

இருவரும் கண் மறைந்ததும், எதிர் சோஃபாவில் அமர்ந்திருந்த மகேந்திரன், விழுந்துவிழுந்து சிரித்தபடி எழுந்து வந்து, நளினியின் அருகில் அமர்ந்தான்!

அவளது கையைப் பற்றிக் குலுக்கி, "வாழ்த்துக்கள், நளினி! இந்த மாதிரி ஒரு மூக்கறுப்பு, அந்த சூர்ப்பனகைக்கு அடுத்து, இவளுக்குத்தான் நேர்ந்திருக்கிறது! நடத்தி முடித்த வீராங்கனைக்கு மீண்டும் என் வாழ்த்துக்கள்!" என்று சிரிப்பின் நடுவே கூறினான்.

அவள் வியந்து நோக்கவும், "எனக்கும் அவளைப் பிடிக்காது! யாராவது 'நச்'சென்று ஒன்று வைக்க மாட்டார்களா, என்று அடிக்கடி நினைப்பேன்! இன்று, திவ்ய திருப்தி!" என்று அவன் விளக்க, நளினியும் சேர்ந்து நகைத்தாள்!

"ஒரே மகள் என்ற செல்லம் போல!"

"அது மட்டுமல்ல! அவள் தந்தை, இந்தப் பக்கத்து எஸ்டேட் முதலாளிகள் சங்கத் தலைவர். கொஞ்சம் பணமும் அதிகம்!" என்று விளக்கினான் மகேந்திரன். "அதைவிட முக்கியமான தகவலும் உண்டு!" என்று, மர்மக் கதை மன்னன் போலத் தொடர்ந்து சொன்னான்.

நளினி கேள்வியாக நோக்கவும், ரகசியம் பேசும் பாவனையில் அவள் காதருகே குனிந்து, " இந்த அல்லி ராணிதான் எனக்கு அண்ணியாக வரப் போவதாகப் பேச்சு! இவளிடம் அண்ணன் என்ன பாடுபடப் போகிறானோ!" என்று, மகேந்திரன் மேலும் சிரிக்க, ஏனோ, அவளுக்கு, அவனோடு சேர்ந்து சிரிக்க முடியாமல் போயிற்று!

அது மட்டுமல்ல!

பெரிய ஜோக்காக இதைக் கருதிச் சொன்னவனுக்காக, அவள் முயன்று முறுவலித்தபோது, அறை வாயிலில் அரவம் தெரிந்தது.

திரும்பிப் பார்த்தால், இவர்கள் இருவரையும் உணர்ச்சியற்ற பார்வையால் அளந்தபடி, சுரேந்திரன் அங்கே நின்று கொண்டிருந்தான்!






நளினி முதலில் நினைத்தது, அவளும் மகேந்திரனும் பேசிக் கொண்டிருந்ததை, சுரேந்திரன் கேட்டுவிட்டு, அதனால் இப்படிப் பார்க்கிறான் என்றுதான்!

ஆனால், அவனது பார்வை, அவர்களது இணைந்திருந்த கைகளில் இருப்பதைக் கண்டதும், தன்னையறியாமல் கையை உருவிக்கொண்டு எழுந்து விட்டாள்!

என்ன தப்பு? ஏன் எழுந்தோம், என்று தன் மீதே எரிச்சல் பட்டு, நேரமாவதால் தான் என்று ஒரு சாக்கும் சொல்லி, மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டு, அதையே வெளிப்படையாகவும் சொன்னாள். "மாமா விழிக்க நேரமாகுமா? நான் கிளம்ப வேண்டுமே!"

"அப்பா முன் வராண்டாவில் இருக்கிறார். அதைச் சொல்லி, உங்கள் இருவரையும் அங்கே அழைத்துப் போக வந்தேன்!" என்றான் சுரேந்திரன்.

வீட்டின் முன்புறம் படியேறியதும் அகலமான வராண்டாவும், அதில் பல வசதியான நாற்காலிகள், மோடாக்களையும் பார்த்த நினைவில், நளினி மடமடவென்று முன்னே நடந்தாள்.

அருகில் வந்ததும், "மெல்ல, எதற்கு ஓடவேண்டும்." என்றபடி, உடன் நடந்தான் சுரேந்திரன்.

சங்கடமாக உணர்ந்து, உதட்டைக் கடித்து, பின்னே திரும்பிப் பார்த்தாள் அவள்.

"வருவான்" மேலே நடக்குமாறு சைகை செய்தான் அவன்.

முதல் சந்திப்பின் காரணமாகவோ என்னவோ சுரேந்திரனின் அருகாமையில் எப்போதுமே சற்றுச் சங்கடமாகவே, அமைதியிழக்கச் செய்வதாக நளினி உணர்ந்தாள். இவனும், மகேந்திரனைப் போலப் பழகினால், எவ்வளவு நன்றாக இருக்கும்!

சுந்தரவதனத்தின் முன்னிலையில், ஐஸ்வர்யா சற்று அடக்கமாக, பவ்யமாக நடந்து கொண்டாள், எனவே, அனாவசியமாக எந்த உரசலும் ஏற்படவில்லை!

ஆனால், என்ன பேசினாலும், அவள் சுரேந்திரனை ஒரு தரம் பார்க்கவும், அவன்தான் எதுவும் சொல்லிக் கூட்டி வந்திருப் பானோ என்று, நளினி எண்ணினாள்! அவள் வார்த்தைக்கு அவ்வளவு மதிப்புக் கொடுக்கிறாளே, என்றும் தோன்றியது! மணக்கப் போகிறவர்கள் அல்லவா?

இதே யோசனையில் இருந்ததால், சுந்தரவதனம், அவளிடம் இரண்டாம் முறையாகக் கேட்க வேண்டியதாகி விட்டது!

அப்போதும் அவள்."என்ன மாமா?" என்று திகைக்கவும், "உன் அம்மாவினால் இங்கே எப்போது வர முடியும் என்று, அப்பா கேட்கிறார்!" என்று கேலிப் பார்வையுடன் விளக்கினான் சுரேந்திரன்.

"அதைத்தான், நானும் யோசித்துக் கொண்டிருந்தேன்! உங்களை, நேரில் பார்க்க, அம்மாவுக்கும் ரொம்ப ஆசை...!" என்று சமாளித்தவன், அதையே தொடர்ந்து, "பொதுவாக செப்டம்பரில்தான், அப்பாவும், அம்மாவும் சேர்ந்து மொத்த லீவை எடுப்பார்கள்! நவராத்திரி விடுமுறையில், எல்லோருமாக, ஏதாவது நல்ல சுற்றுலாத் தலத்துக்குப் போய், ஒரு பத்து நாள் ஆட்டம் போட்டுவிட்டு வருவோம்! இப்போது... எனக்குத் தெரியவில்லையே மாமா! பூபால், சித்ரா இருவருக்கும் பிளஸ்-2 தேர்வு சமயம், அது முடிந்தால், கல்லூரியில் இடத்துக்குப்



பார்க்க வேண்டும்! ஆனால், உங்களையும், அத்தையையும் சந்திக்க அம்மாவும் துடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்! அப்பாவும், அம்மாவின் விருப்பங்களை மறுக்கிறவர் அல்ல! அதனால், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக, அம்மா இங்கே வந்து விடுவார்கள்!" என்று முடித்தாள்.

"சித்ரா! நல்ல பெயர்! நேரில் பார்க்க வேண்டுமே! ஒன்றுக்கு, இரண்டு முறைப் பெண்களைப் பார்த்து வைத்துக் கொண்டால், சமயத்துக்கு நல்லதில்லையா?" என்று சிரித்தான் மகேந்திரன்.

"இதைக் கேட்டால், அம்மா உங்கள் உச்சி மண்டையிலேயே, ஒன்று போடுவார்கள்! சித்துவுக்கு, வயது பதினேழுதான் தெரியுமா?" என்று மிரட்டும் தொனியில் தெரிவித்த நளினி, உடனேயே திரும்பி, "சீக்கிரமே நான் கிளம்ப வேண்டுமே, மாமா, ஆறு மணிக்குள், நான் ஹாஸ்டலுக்குள் போயாக வேண்டும்!" என்று சுந்தரவதனத்திடம் கூறினாள்.

துள்ளி எழுந்து, "நளினியை; நான் கொண்டு விட்டு வருகிறேன், அப்பா!" என்றான் மகேந்திரன்.

"நீ வேகமாகப் போவாய், வேண்டாம்!" என்றான் சுரேந்திரன். "அவளை, நான்..." என்று அவன் மேலே சொல்லுமுன், "சுரேன்!" என்ற ஒரு கிரீச்சிடலுடன் ஐஸ்வர்யா குறுக்கிட்டாள். "இப்போது, நான் வேறு, எங்கள் வீட்டுக்குப் போக வேண்டுமே! நீங்கள் கொண்டு விட்டு விடுவீர்கள் என்று, என் காரை அனுப்பி விட்டேன்! அப்பாவும் உங்களிடம் ஏதோ பேச வேண்டும் என்றார்! நாமும் கிளம்புவோமா?" என்று எழுந்து, அவன் அருகே சென்று நின்றாள்.

மின் வெட்டும் நேரத்தில் சுரேந்திரனுக்கும், அவன் தந்தைக்கும் இடையே, பார்வைப் பரிமாற்றம் நடந்தது.

உடனேயே தம்பியிடம் திரும்பி, "எச்சரிக்கையோடு, நிதானமாக ஓட்டு! உன் அருமை முறைப் பெண், அத்தை மகள் ரத்தினத்தைப் பத்திரமாகக் கூட்டிப் போய்ச் சேர்ப்பிக்க

வேண்டும் என்பது நினைவிருக்கட்டும்!'' என்றவன், ஒரு கையசைவால் ஐஸ்வர்யாவை முன்னே நடக்கச் செய்துவிட்டு, எல்லோருக்கும் பொதுவான ஒரு குட்பையுடன் அவளோடு கிளம்பிச் சென்று விட்டான்!

'உன் முறைப் பெண்ணா? அவனுக்கு, அந்த உறவு இல்லையாமா?'

எதிலோ தோற்றுவிட்ட உணர்வு நளினிக்கு உண்டாயிற்று! அதைச் சிரமப்பட்டு மறைத்துக் கொண்டு, மகேந்திரனிடம் உற்சாகம் காட்டிப் பேசலானாள் அவள்! "என்ன மகேன், அத்தை மகள் ரத்தினம், முறைப் பெண் அது இது என்கிறீர்கள், எனக்கு மட்டும் சொல்வதற்கு, ஒன்றும் கிடையாதா? மாமன் மகன் மண்ணாங்கட்டி, மருக்கொழுந்து... இந்த மாதிரி...''

"மகா கனம் பொருந்திய முறைப் பையன்! என்னையா மண்ணாங்கட்டி என்றாய்? உன்னை...''என்று ஆத்திரப்படுவது போல, மகேந்திரன் நடிக்க, எல்லோரும் சிரிக்க, அப்படியே நளினியும் கிளம்பு விட்டாள்.

"அண்ணன் சொன்னது நினைவிருக்கட்டும். மெதுவாக ஓட்டு! பத்திரமாய்க் கொண்டு விட்டுவிட்டு, நல்லபடியாக வந்து சேர்!'' என்று, பெரியவர்கள் விடை கொடுத்து அனுப்பியபோது நளினிக்கு மனம் குறுகுறுத்தது.

அவளால் அல்லவா, இந்தப் பிரச்சனை!

இந்தப் பாடு ஏன்? வரும்போதுபோல, டிரைவரையே ஓட்டச் சொல்லலாமே என்று தோன்ற, "ஏன் மகேந்திரன், நாம் வரும்போது ஓட்டி வந்த டிரைவரை எங்கே, காணோம்?'' என்று விசாரித்தாள்!

"இன்று ஞாயிற்றுக் கிழமை! பாவம்... அரைநாள் விடுமுறையேனும் வேண்டாமா? ஏய்! என்ன? எல்லோரும் சொன்னதைக் கேட்டுப் பயமாக இருக்கிறதா? கவலைப்படாதே!



உன்னைப் பத்திரமாகக் கூட்டிப் போய் விட்டு விடுவேன்!'' என்றான் மகேந்திரன்!

"எனக்கு, அது பயமாக இல்லை! ஆனால், தனியே திரும்பி வரும்போது, அப்படி ஓட்டிவிடக் கூடாதே என்றுதான், கவலை!'' என்றாள் அவள். "அப்படி ஒன்றும் ஓட்டிவிட மாட்டாயேப்பா?'' என்று, அவள் கவலையுடன் கேட்க, "ஐயோ! நிச்சயம் மாட்டேன்பா! எனக்கும், என் உயிர் வெல்லம்தானே?'' என்றான் அவன்!

மகேந்திரன் நன்றாகவே காரை ஓட்டினான்.

அதுபற்றி கூறி, அவள் ஆச்சரியப்பட்டபோது, ஒரே ஒரு தரம், ஒரு சீண்டலில், காரை படு வேகமாக ஓட்டினது உண்மை! மற்றபடி, பிரச்சினைப் பட்டதே கிடையாது! ஆனால், அந்த 'ஒரு தடவை' யைப் பிடித்துக் கொண்டு, விடவே மாட்டேன் என்கிறார்கள்!''என்றபடி, மீண்டும் சாலையில்,தன் முழுக்கவனம் பதித்தான் அவன்!

கேட் மூடும் நேரத்துக்குச் சற்று முன்னதாகவே அவளை விட்டுவிட்டு, மகேந்திரன் வீட்டுக்குக் கிளம்பி விட்டான்!

ஆனால், அவன் கார் கண்ணுக்கு மறைந்ததும், நளினிக்கு மனம் உள்ளூர அலைபாயத் தொடங்கி விட்டது! ஒருவேளை, மகேந்திரன் காரை ஓட்டினால்? எல்லோரும் எச்சரித்தார்களே!

தன்னைக் கொண்டு விட வந்து, அவனுக்கு, ஏதேனும் ஆகிவிடுமோ?

நிம்மதியிழந்து தவித்தவள், மகேந்திரன் வீட்டுக்குத் திரும்பிச் செல்லும் அளவு நேரத்தைக் கணக்கிட்டு, உட்கார்ந்திருந்தாள். எதற்கும் இருக்கட்டும் என்று, மேலும் ஒரு பத்து நிமிஷம் கழித்து, மாமா வீட்டுக்கு டெலிபோன் செய்தாள்.

எடுத்தது, சுரேந்திரன்தான். என்னவோ ஆறுதலாக உணர்ந்து பெருமூச்சு விட்டாள் அவள்.

பேசுவது நளினி என்று தெரிந்ததும், "என்ன விஷயம்? எதையாவது விட்டு விட்டுப் போய் விட்டாயா? கைப்பை.. உடனே வேண்டுமா?" என்று விசாரித்தான், அவன்.

"அப்படியெல்லாம் இல்லை!" என்று அவள் கூப்பிட்ட காரணத்தைச் சொல்லவும், சற்று நேரம், அவன் பக்கமிருந்து சத்தமே இல்லை!

உடனே பதறிப்போய், "ஹலோ, ஹலோ, என்ன என்ன" என்று அவள் படபடக்கவும், "ஒன்றும் இல்லை! மகி பத்திரமாக வீடு வந்து சேர்ந்து விட்டான். அவனை வேண்டுமானால், கூப்பிடவா?" என்று நிதானமாகக் கேட்டான், சுரேந்திரன்.

"வேண்டாம்! நீங்கள் எல்லோரும், மகேன் வேகமாக ஓட்டுவது பற்றிக் குறிப்பிடவும், தனியாகத் திரும்புகிறாரே என்று, கொஞ்சம் கவலையாக இருந்தது. பத்திரமாக வந்து சேர்ந்து விட்டார் என்பதே போதும்!" என்று முடித்தவளுக்கு, அதற்குமேல் என்ன செய்வது என்று தெரியவில்லை!

விஷயம் தெரிந்துவிட்டபோதும், என்னவோ, பேச்சு அரைகுறையில் இருப்பது போன்ற உணர்வு! ஆனால் இன்னும் என்ன பேசுவது என்று புரியாமல், அவள் தயங்கியபோது, சுரேந்திரனே ஏதோ சொன்னான். "மகி தனியாக வருவது பற்றி, எங்களுக்குப் பயமில்லை! ஆனால், உன்னிடம் பெருமை காட்டவென்று, வேகமாக ஓட்டி விடுவானோ என்ற பயம்தான்!" என்றான் அவன்! அத்தை மகள், முறைப்பெண் என்ற பேச்சு வேறா?"

அப்போது நினைத்தது, சட்டென வாயில் வர, "அதெல்லாம் தம்பிக்கு மட்டும்தானா?" என்று கேட்டுவிட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள் அவள்.

"அப்படித்தான் என்று இல்லை! மண்ணாங்கட்டி மச்சானாக வேண்டியிருக்குமோ, என்று ஒரு சின்ன பயம்! அவ்வளவுதான்!"



என்ற அவனது குரலில் புன்னகை தெரிய, அவளுக்கு உற்சாகமாக இருந்தது!

"அதில் என்ன பயம்? ஊர்ப்பக்கம், மண்ணாங்கட்டி, குப்பை என்றெல்லாம் பெயர்கள் உண்டு என்று, என் அம்மா சொல்லியிருக்கிறார்கள், தெரியுமா?"

"உண்டுதான். ஆனால், அந்தப் பெயர்களின் பின்னணியில், உள்ள சோகம் தெரியுமா, உனக்கு?"

ஊஹூம், தெரியாதே! என்ன சோகம்?

"வரிசையாகக் குழந்தைகள் பிறந்து, இறந்து கொண்டே இருந்தால், இப்படி மண்ணாங்கட்டி, குப்பை என்று பெயர் வைப்பார்களாம். இந்தப் பிள்ளையைக் கொண்டு போக வருகிற எமன், இங்கே கிடப்பது, வெறும் மண்ணாங்கட்டி, குப்பை என்று நினைத்துக் கொண்டு, இந்தப் பிள்ளையின் உயிரைப் பறிக்காமல், விட்டுவிட்டுப் போய்விடுவானாம்! அதாவது, அந்த மாதிரிப் பெயர், முன்னே நடந்த பேரிழப்புகளைக் குறிப்பன, என்று கொள்ளலாம்!"

"அடடா!" என்றாள் அவள் வருத்தத்துடன்.

அந்தப் பெயர்களைத் தாயார் சொன்னபோது, அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது! ஆனால், இப்போது, மனம் கனத்தது!

அவளை உணர்ந்தவன் போல, "ஆனால், இந்தப் பெயர்களை, வெற்றிக்கு அறிகுறியாகவும் சொல்லலாம்! எமனை ஜெயித்து, உயிருடன் இருப்பவர்கள் ஆயிற்றே! உயிருடன் இருந்து, பெற்றோரை மகிழ வைப்பவர்கள்!" என்றான் அவன்.

மனம் லேசாகிவிட, "அப்படியிருந்தும், இந்தப் பெயருக்குப் பயப்படுகிறீர்களே! தம்பிக்கு உள்ள தைரியம் உங்களுக்கு இல்லை என்று தானே அர்த்தம்?" என்று மடக்கினாள் நளினி.

"இளம் கன்று பயமறியாது! அவன் சின்னப் பையன்தானே?" என்று, கோலத்தில் பாய்ந்தான் அவன்.

அவனோடு வாயாடும் உற்சாகத்தில், "சின்னப் பையனா? விட்டால், தொட்டிலில் போட்டு, ஆட்டுவீர்கள்போல இருக்கிறதே! ஆனால் ஒன்று! அப்படிப் போட்டு ஆட்டுமுன் பல்லைத் தட்டிவிட வேண்டும். அப்போதுதான் பொருத்தமாக இருக்கும்!" என்று விட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள். அதிகப்படியோ?

ஆனால், அவன் வாய்விட்டுச் சிரிக்கவும், அவள் முகத்திலும் புன்னகை விரிந்தது!

"இரு, இரு! அவனிடம் சொல்லுகிறேன்!" என்று அவள் சிரிக்க, தானும் சிரித்தவாறே "பை!" சொல்லி, ரிசீவரை வைத்தாள் நளினி!

ஏதோ பாட்டை முணுமுணுத்துக்கொண்டு போனவளை, வியப்புடன் நோக்கி, "என்னப்பா, அவ்வளவு சந்தோஷம்?" என்றாள், அவளுடைய அறைத்தோழி!

அடுத்த வெள்ளிக்கிழமை வரை, நளினியின் சந்தோஷம் நிலைத்திருந்தது!

வெள்ளிக்கிழமையன்று, தோழி நஸ்ரீனைப் பஸ் ஏற்றி விட்டுக் கல்லூரி வாசக சாலைக்குள் நுழைந்து, தேவைப்பட்ட புத்தகங்களை நேரத்தோடு எடுத்துக் கொண்டு வெளியே வந்தால், அங்கே காருடன் சுரேந்திரன் காத்திருந்தான்!

அதாவது, அவன், அவளை நம்பவில்லை! அவள் சொன்னது, உண்மையா, பொய்யா என்று சோதித்து அறிய வந்திருக்கிறான்!

எப்போதும் அவள் ரசிக்கும் அந்த மலையடிவாரம், சட்டென அழகிழந்து போயிற்று!






தன்னை ஒருவாறு சமன்படுத்திக் கொண்டு ஒரு பெருமூச்சுடன் நளினி மேலே நடந்தாள்.

காரின் அருகே சென்ற போது, சுரேந்திரனும் காரை விட்டு இறங்கி, அவளை நோக்கி, "ஹலோ!" என்று முறுவலித்தான்.

இந்த முறுவலில் ஒன்றும் குறைச்சல் இல்லை! இவனுக்கெல்லாம் பல்வரிசை, இவ்வளவு அழகாக இருந்து தொலைக்க வேண்டுமா? அது வேறு, பளீர் என்று, அடுத்தவரையும் சேர்ந்து சிரிக்க வைத்துக் கொண்டு!

தன்னை மீறி வந்த புன்னகையோடு காரை நெருங்கிய போது, கரு நீலக் கண்ணாடிக் கதவின் உள்ளே அசைவை உணர்ந்து அதிர்ந்தாள் நளினி.

வருங்கால மனைவியோடு, பவனி வந்தான் போலும்! நளினியைக் கண்ட பிறகும், மகாராணிக்கு கார்க் கதவை திறந்து, ஒரு ஹலோ சொல்லக்கூட மனம் இல்லை, மரியாதையும் தெரியவில்லை! அது இவனுக்கு உறைக்கவும் இல்லை!

சுத்த மோசம்! இவனும்!

அவள் உள்ளூர அர்ச்சனை செய்துகொண்டு இருப்பதை அறியாமல், "வா, உன்னைக் கல்லூரி விடுதியில் கொண்டு விடுகிறேன்" என்று சுரேந்திரன் அவளை அழைத்தான்.

உள்ளே இருக்கிற மகாராணிக்குப் பிடிக்குமா என்று, கொஞ்சமும் யோசிக்காமல் கூப்பிடுகிறானே! சில

விஷயங்களில், இந்த ஆண்கள் அடி முட்டாள்கள் என்பது சரிதான் போலும், என்று எண்ணியவாறு,

“இல்லை! நான் நடந்தே போய்க் கொள்ளுகிறேன். நேரம் இருக்கிறது!” என்று, மரியாதையுடனேயே மறுத்தாள் நளினி.

“நேரம் இருந்தால், நடந்தே ஆக வேண்டுமா? அத்தோடு, உன்னை என்ன, நானா சுமக்கப் போகிறேன்? கார்தானே! ஏறு” என்றான் சுரேந்திரன்.

அந்த ஐசின் அருகே அமர்ந்தால், பார்வையாலேயே, என்னை உறைய வைத்து விடுவாளே! அவள் அருகில் உட்காரப் பிடிக்கவே, பிடிக்காது! அப்படி, அவள் அருகில் அமர்ந்தது போவதற்கு, முட்டி போட்டு, முழங்காலால் நடந்து போகலாம்!

“அதற்கில்லை! எனக்காக, அனாவசியமாக, ஹாஸ்டல் வரை, வர வேண்டுமா? பெட்ரோல் விற்கிற விலையில்!”

“ஆமாம், உன் ஹாஸ்டலுக்குப் பத்து கிலோ மீட்டர், சுற்றியல்லவா, வரவேண்டும்! பெட்ரோல் செலவை, எங்களால் , தாங்க முடியுமா, என்ன? ரொம்பக் கஷ்டம் தான்!” என்றான் அவன் கேலிக் குரலில்.

“வேண்டாம், பெரிய அத்தான்! ஏசி கார்! சுத்தமாக வைத்திருக்கிறீர்கள்! நான்...நான் ஏறினால், அழுக்காகி விடும்!” என்று, வாயில் வந்ததைச் சொல்லி மறுத்தாள் அவள்.

“அப்படி அழுக்கானால், காரை ‘சர்வீசு’க்கு விட்டுக் கழுவ வைத்து விடுகிறேன். இப்போது, நீ அனாவசியமாகக் கவலைப்பட வேண்டாம்! அத்தை மகளாயிற்றே என்று அன்பாகக் கூப்பிட்டால், காரில் ஏறி உட்காராமல், பட்டிமன்ற மல்லவா நடத்திக் கொண்டிருக்கிறாய்! சொல்வதைக் கேட்டுப் பேசாமல், காரில் ஏறு! நீ பயப்படவும் வேண்டாம்! காரில்



இருக்கும் மகா மனுஷி, உன்னைக் கடித்துக் குதறி விடாமல், நான் பார்த்துக் கொள்ளுகிறேன்! ஒ தரியமாக ஏறு! வா” என்று, சுரேந்திரன் கூறிய போது, நளினிக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது!

இதைக் கேட்கும் போது, உள்ளே இருப்பவளுக்கு, எப்படி இருக்கும்? காரணமின்றியே, அவள் கடித்துக் குதறுகிறவள் தான்! என்றாலும், உண்மையைக் கேட்க, எத்தனை பேருக்குப் பிடிக்கும்? அதுவும் கட்டிக் கொள்ளப்போகிறவன் வாயால்! இன்னும் வெறி ஏறாதா? இதையெல்லாம், கொஞ்சம்கூட யோசியாமல் பேச, இவனால் மட்டும்தான் முடியும்!

இன்னும் மறுத்தால், இதற்கு மேலும், இவன் என்னென்ன பேத்துவானோ?

அத்தோடு, பேசிக் கொண்டே நின்றதில், ஓரளவு நேரமும் ஆகிவிட்டதை உணர்ந்து, காரின் பின்புறம் ஏறச்சென்றாள் நளினி.

அவளைத் தடுத்து நிறுத்தி, “முன்புறம் ஏறு!” என்றுரைத்து, அவளை வெகுவாகத் திகைக்க வைத்துவிட்டு, காரின் முன்புறக் கதவைத் திறந்து, குனிந்து, “பின்னே போ!” என்று ஆங்கிலத்தில் சொன்னான் சுரேந்திரன்.

நாயைச் சொல்வதுபோலச் சொல்லுகிறானே, என்று எண்ணியவாறு, அவன் திறந்துவிட்ட முன் கதவின் வழியாக ஏறி அமர்ந்தவள், அப்படியே திகைத்துப் போனாள்.

ஏனெனில், காரின் பின் இருக்கையில், நாக்கைத் தொங்கப் போட்டபடி அமர்ந்திருந்தது, மெய்யாகவே, ஒரு நாய்தான்! அடர்நிறக் கண்ணாடியின் பின்னே, மசமசவென்று, அசைவு தெரிந்ததே தவிர, உருவம் தெரியாது போய்விட, உள்ளிருப்பது, ஐஸ்வர்யா என்று, அவள் நினைத்து விட்டாள்!

நாயை, ஐஸ்வர்யா என்று நினைத்ததை எண்ணி, நளினிக்குச் சிரிப்பு பீறிட்டது! அவன் வேறு, 'மகாமனுஷி' என்றானே!

பொங்கிப் பொங்கி வந்த சிரிப்பை அடக்குமுன், அன்று நளினி அரும்பாடுபட்டுப் போனாள். சிரித்தால், சுரேந்திரனுக்குக் காரணம் சொல்ல வேண்டுமே!

கல்லூரி விடுதி கண்ணில் பட்டது! கேட் மூட இன்னும் ஏழெட்டு நிமிஷங்கள் இருக்கும் போதே, வந்தாயிற்று!

அருகில் வைத்திருந்த புத்தகங்களை அள்ளிக்கொண்டு, அவள் இறங்கத் தயாரான போது, கார் நிற்காமல், மேலே செல்லவும் நளினி திகைத்தாள்.

"என்ன அத்தான்?"

"இன்னும்தான் நேரம் இருக்கிறதே! ஓர் ஐஸ்கிரீம் சாப்பிட்டு விட்டுப் போகலாம்! நேரமாகிவிடும் என்று கவலைப்படாதே! உன்னை நல்லபடியாகக் கொண்டு சேர்ப்பது, என் பொறுப்பு!"

அவளது மறுப்பைக் கொஞ்சமும் சட்டை செய்யாமல், மறுபுறத்தில் சற்றுத் தள்ளியிருந்த ஐஸ்கிரீம் பார்லரில் காரை நிறுத்தினான் சுரேந்திரன்.

நளினியின் "ஐயோ, நேரமாகிவிடுமே!" யை, அவன் பொருட்படுத்தவே இல்லை!

"முதன் முதலாக, என்னோடு காரில் வருகிறாய்! அதைக் கொண்டாட, ஏதாவது செய்தே ஆக வேண்டும்!" என்று இரண்டு கசாட்டாவுக்கு அவன் ஆர்டர் கொடுக்கவும், இது கொண்டாடுதலா, அன்று வயிற்றுவலி என்று ஏமாற்றியதற்கான பழி வாங்கவா என்ற சந்தேகம், நளினிக்கு உண்டாயிற்று!

ஐஸ்கிரீமை அவன் ரசித்துச் சாப்பிட்ட விதம், அந்தச் சந்தேகத்தை உறுதிப்படுத்தியது.



ஒரு வழியாகப் பில் பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்தபோது, கல்லூரி விடுதி கேட் மூடியிருக்கவும் பழி வாங்கியே விட்டான், என்றே நிச்சயமாக எண்ணினாள் அவள்!

அவனைச் சமாதானப்படுத்தவென்று, விளக்கம் சொன்ன தெல்லாம், வீண்! வியர்த்தம்!

இனி, பிரின்சியிடம் போய் அனுமதி பெற்றுக்கொண்டுதான், ஹாஸ்டலுக்குள் போக முடியும்!

முகம் இறுக அமர்ந்திருந்தவளுக்கு, சுரேந்திரன் ஓரக் கண்ணால் நோக்குவதை உணர முடிந்தது!

எப்படித் தவிக்கிறாள் என்று பார்த்து, ரசிக்க வேண்டுமாக்கும்?

முயன்று, முகத்தில் அலட்சியப் பாவனையைக் கொண்டு வந்தாள் அவள். புத்தகங்களைத் திரட்டி எடுத்துக்கொண்டு, மீண்டும் இறங்கத் தயாரானாள்.

"என்ன அவசரம்?" என்று, புன்னகையோடு கடிந்தபடி, காரைத் திருப்பினான் அவன்.

இன்னும் என்ன என்று, அவள் உள்ளூர எரிச்சலுற்றபோது, கார் எதிர்ப்புறமாகச் சென்று, பிரின்சிபாலின் வீட்டின்முன் நிற்கவும், நளினி பிரமித்துப் போனாள்!

'குதிரை கீழே தள்ளியதோடு நில்லாமல், குழியையும் பறித்ததாம்!' என்கிற பழமொழி மாதிரி, அவளை அங்கும் இங்குமாக அலைக்கழித்து, தாமதமாக்கியது மட்டுமின்றி, தண்டனைக்காகப் பிரின்சிபாலிடமே கூட்டி வந்து விட்டானே!

அவ்வளவு ஆத்திரமா, அவள் மீது?

அவளால், நம்பக்கூட, முடியாததோடு, மிகவும் வருத்தமாகவும் உணர்ந்தாள்.

இவனோடு, போனில் கேலி பேசியதை, நினைத்து, ரசித்துக் கொண்டிருந்தோமே!

வேண்டாம்! இப்படி வருந்திக் கொண்டு இருப்பதைவிட, பிரின்சியிடம் எப்படிப் பேசுவது என்று யோசிப்பது மேல்!

''வா!'' என்ற அழைப்புடன் முன்னே சென்றவனை, சிறு கலக்கத்துடன் பின் தொடர்ந்து சென்றால், சுரேந்திரனைப் பிரின்சிபால் எதிர்பார்த்திருந்தது போலத் தோன்றியது!

நளினியை, அவர் கேள்வியாய் நோக்கவும், ''உங்கள் மாணவிதான், சார்! போன ஞாயிறன்று, உங்களிடம் அனுமதி பெற்று, அழைத்துப்போனோமே, எங்களுடைய நெருங்கிய உறவுக்காரி! கல்லூரி வாசக சாலையில் ஏதோ தேவைப்படுவதாக, அன்றைக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள். உங்களிடம் நேரிலேயே சொல்வது நல்லது என்று, என்னோடு அழைத்து வந்தேன்!'' என்று சரளமாகக் கூறி முடித்தான்!

''நீ என்னிடம் கல்லூரியிலேயே சொல்லியிருக்கலாமேம்மா!'' என்று பிரின்சிபால் கனிவாகக் கூறவும் நளினியால், மீண்டும் எதையுமே நம்ப முடிய்வில்லை! பிரின்சிக்கு, இவ்வளவு கனிவான குரல்கூட, உண்டா?

இதெல்லாம் கனவா, நினைவா என்று கூடக் கண்டுகொள்ள முடியாத திகைப்பு!

அந்தத் திகைப்பில், ''வாசகசாலையில் என்ன வேண்டும்?'' என்று பிரின்சி கேட்கவும் பதிலேதும் சொல்ல மாட்டாமல், பேந்த விழித்தாள்! அத்தோடு, அப்படி எதுவும் வேண்டும் என்று, எப்போதேனும் யோசித்திருந்தால்தானே, சட்டெனப் பதில் சொல்வதற்கு?

லேசாக முறுவலித்து, ''நானும்கூடப் படிக்கிற காலத்தில், உங்களிடம் இப்படித்தான் பயப்படுவேன் சார்! உங்கள் முன்னிலையில் வந்தாலே, நாக்கு, மேலண்ணத்தில் ஒட்டிக்



கொள்ளும்! வார்த்தையே வராது! இப்போதும், அதே மரியாதை உண்டு என்றாலும், அன்றையப்பயம் இன்றைக்கு நினைத்தால், எனக்கே ஆச்சரியம்தான்!'' என்றான் சுரேந்திரன்.

சமாளித்துக் கொள்ள, அவளுக்கு அவகாசம் கொடுப்பதற்கான பேச்சு இது என்று புரிய, நளினிக்கு அவமானமாக இருந்தது. அவசரமாக யோசித்து ''ரெ...ரெஃபரன்ஸ் புக், சார், இன்னும் இரண்டு செட் இருந்தால், எங்களுக்கு நன்றாக இருக்கும்! இப்போதெல்லாம் பாதிப் பேருக்குக் கிடைப்பதே இல்லை சார்!''என்றாள் அவள்.

மேஜை மேல் கிடந்த ஒரு சிறு நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொண்டு, ''நாளை பார்க்கிறேன்.'' என்றவர், சுரேந்திரனோடு, ஏதோ வாங்குவது பற்றிப் பேசத் தொடங்கினார்.

''எங்களுக்கு இதிலெல்லாம் லாபம் இல்லை என்று உங்களுக்கே தெரியும் சார் கல்வித் தெய்வத்துக்கு, நம்மால் ஆன காணிக்கை என்று செய்வதுதான். எவ்வளவு என்று, தெளிவாகக் கேட்டுச் சொன்னீர்கள் என்றால், அனுப்புவதற்கு, எங்களுக்கு வசதியாக இருக்கும்!'' என்றான் சுரேந்திரன். ''கார் கொண்டு வந்திருக்கிறேன். கூடவே வந்தீர்களானால் நளினியை விடுதியில் விட்டுவிட்டு,வார்டனிடமும் கேட்டுத் திரும்பி விடலாம்!'' என்று அழைத்தான்!

பிரின்சிபால், அவனோடு முன்புறம் அமர, பின்னே உட்கார்ந்த நளினிக்கு பக்கத்தில் இருந்த நாயைப் பார்த்தும் மீண்டும் சிரிப்பு பீறிட்டது! வாயைப் பொத்திக்கொண்டு, சத்தமின்றி குலுங்கினாள் அவள்!

பிரின்சியோடு சேர்ந்து உள்ளே வரும் போது, அவளிடம் யார் கேள்வி கேட்பது?

அத்தோடு, நன்கொடை மாதிரி, பாதிக்குப் பாதி சலுகை விலையில் கொடுக்கிற உறவினன் வேறு, கூடவருகிறான்!

கிளம்பும் போது, பிரின்சிபால் வேறு, "நாளைக்கே, பார்க்கிறேனம்மா!" என்று அவளைக் கூப்பிட்டுச் சொல்லி விட்டுப் போகவும், ஹாஸ்டலில் நளினியின் மதிப்பு மிகவும் உயர்ந்து விட்டது!

விடை பெறும்போது, "நம்பிக்கை வேண்டும், அத்தை மகளே! அடுத்த முறை, ஐஸ்கிரீமை இன்னும் அதிகமாக ரசித்துச் சாப்பிடுவாய் என்று நம்புகிறேன்." என்று முறுவலித்துவிட்டுப் போனான் சுரேந்திரன்.

அவள் முகத்தில் அசடு வழிந்தபோதும், எரிச்சலோ, வருத்தமோ தோன்றவில்லை அவளுக்கு!

அதிலும், ஐஸ்வர்யா என்று எண்ணித் தயங்கியதை நினைக்கையில் சிரிப்புதான் பொங்கியது! கட்டாயம், மகேந்திரனிடம் இந்த ஜோக்கைச் சொல்லி, அவனோடு சேர்ந்து சிரிக்க வேண்டும்! அவன் இதை ரசிப்பான்!

நல்ல வேளையாக, மறுநாள் வகுப்பு இருந்தது. ஆனால், இருவருக்கும் வகுப்புகள் அமைந்திருந்த விதத்தில், மதியம் வரை, மகேந்திரனை, நளினி சந்திக்க முடியவில்லை!

பிறகும், அவனுடைய பாடப்பிரிவு நண்பர்களோடு பேசியபடி, அவன் சாலையின் மறுபுறமாகச் செல்லவும், அவன் வீட்டுக்குக் கிளம்பி விட்டானோ என்ற எண்ணத்தில், "மகேந்திரன்!" என்று கூவி அழைத்தபடி, அவனை நோக்கி, சாலையின் குறுக்கே நளினி வேகமாகச் சென்றாள்.






ஓரளவு சாலையின் இருபுறம் பார்த்துவிட்டுத்தான், நளினி சென்றது!

சற்றுத் தொலைவில், சாலையின் இடப்புறமாகச் செல்லாமல்,வலப்புறமாகத் தப்பாக வந்து கொண்டிருந்த 'பைக்'இடையிலே, மறுபுறம் திரும்பிவிடும் என்று எதிர் பார்த்தாள்.ஆனால், அவன் அதிக வேகம் எடுத்து, அவள் மீது மோத வரக்கூடும் என்று அவள் எதிர்பார்க்க வில்லை! நல்ல வேளையாக அந்தப் 'பைக்'கைக் கவனித்துவிட்ட மகேந்திரன், சட்டென அவளைப்பிடித்து இழுத்துவிட, விபத்தில் மாட்டாமல் நளினி தப்பினாள்.

அவன் இழுத்த வேகத்தில் தடுமாறி விழப் போனவளைத் தூக்கி நிறுத்தி விட்டு,"அப்பா!" என்றான் மகேந்திரன்! "என்ன கனம் கனக்கிறாய்! எடை,ஒரு நூறு கிலோ இருப்பாயாப்பா?" என்று, பளு தாங்காமல் ஒடிந்து விழுகிற மாதிரி நடித்தபடி, அவன் கேட்ட விதத்தில், அவளுக்குச் சிரிப்பு வந்தது!

"ஐம்பது கிலோகூடத் தூக்க முடியாத நோஞ்சானாக இருந்து கொண்டு, பேச்சுவேறா?" என்றாள் அவள் பதிலுக்கு!

"ஐம்பதே கிலோவா? இது அநியாயப் பொய்! என்னண்ணா, நீ என்ன சொல்லுகிறாய்? இவள் இந்தக் குண்டு, ஐம்பது கிலோ தான் இருப்பாளாக்கும்?" என்று, மகேந்திரன் கேட்ட பிறகே, சுரேந்திரனும் அங்கே வேகமாக வந்து சேர்வதை, நளினி, கவனித்தாள்.

இவன் முன்னே, 'குண்டு' என்று விட்டானே! "நான் ஒன்றும் குண்டாக இல்லை! அன்றைக்கு, மாமாகூட, நான் ஒல்லியாக இருப்பதாகச் சொன்னாரே!" என்றாள் ரோஷத்துடன்.

"குண்டு என்றால் அழுது விடுவாயோ என்று பாவம் பார்த்திருப்பார்!" என்று, மீண்டும், சீண்டினான் மகேந்திரன்.

"ஷ், மகி, பேச்சு போதும்! முதலில், அவளுக்கு ஏதாவது அடிகிடி பட்டதா என்று, அதைப் பார்!" என்று தம்பியிடம் கூறினான் சுரேந்திரன். "என்ன நளினி, எங்காவது வலிக்கிறதா?" என்று, அவளிடம் விசாரித்தான்.

"எனக்கு ஒன்றும் இல்லை!" என்று அவள் முணுமுணுக்க, "அதற்குள்ளாகத்தான், இந்த நூறு கிலோவை, மாவீரன், இழுத்துப் போட்டு விட்டேனே!" என்று மார்தட்டினான் மகேந்திரன்.

"நான் ஒன்றும் நூறு...."

"ச்சு... விடு என்றேனே, மகேன்!" என்று தம்பியை அதட்டிவிட்டு, "சாலையைக் கடக்கும்போது, பார்த்து வருவதில்லையா? அப்படி என்ன அவசரம்?" என்று, சுரேந்திரன், அவளையும் கடிந்தான்.

"அதானே!" என்றான் சின்னவனும். "முறைப் பையனின் எழில் முகத்தைப் பார்க்க அளவு கடந்த ஆவலில் ஓடி வந்தாயா, அத்தை மகளே?" என்று, இல்லாத மீசையைத் தடவிப் பெருமையாகக் கேட்டான்.

"ஐயோ! இந்த மூஞ்சியைப் பார்க்க, யார் அப்படி ஓடி வருவார்களாம்? அதெல்லாம் ஒன்றும் இல்லைப்பா! ஒரு வேடிக்கை! உங்களிடம் சொன்னால் ரசிப்பீர்களே, என்று, அவசரமாக வந்தேன்!" என்றாள் அவள்.

"வேடிக்கையா? என்ன வேடிக்கை? என்னது, சொல்லு!" என்று பரபரத்தான் மகேந்திரன்.



எப்படிச் சொல்லுவது? பக்கத்தில், சுரேந்திரனும் நிற்கிறானே! ஐஸ்வர்யாவை மணக்கப் போகிறவன் காது கேட்க, நாயை அவள் என்று நினைத்ததைச் சொல்வது, அநாகரீகம் அல்லவா? வேண்டும் என்று, நாயோடு ஒப்பிடவில்லை ஆயினும், ஒரு நாயைப் போய், அவனுடைய வருங்கால மனைவி என்று அவள் தவறாக நினைத்ததை ரசிக்க... ஊகூம். அது முடியாத காரியம்!

எனவே, "இந்தக் களேபரத்தில், அது.. மமறந்து போயிற்று!" என்றாள் அவள்.

சுரேந்திரன் கூர் பார்வையாக நோக்க, "சிலசமயம் எனக்குக்கூட, அப்படி மறந்து போகும்!" என்றான் மகேந்திரன். "முக்கியமாகச் சொல்ல வேண்டும் என்று வாயெடுக்கிற நேரம், சின்னதாக வேறு ஏதாவது நடந்தால்கூடச் சொல்ல வந்தது, சட்டென மறந்துவிடும்... என்ன முயன்றாலும், அப்போதைக்கு நினைவே வராது! அது, தானாக நினைவு வரும்போது, சொல்வதற்கு, யாரும் இருக்க மாட்டார்கள்! ஆனால், உனக்கு எப்போது நினைவு வந்தாலும், போன் பண்ணியாவது, என்னிடம் சொல்லிவிடு, நளினி! நீ சொல்கிறவரை, எனக்கு மனம் குறுகுறுத்துக் கொண்டே இருக்கும்!"

அவள் தலையாட்டி வைத்தபோது, சுரேந்திரன் பேசினான், "ஹாஸ்டலுக்குக் காய்கறி கொடுக்க வந்தேன். அப்படியே இவனையும் அழைத்துக் கொண்டு, உங்கள் பிரின்சியிடம், உனக்காகக் கேட்கவும் வந்தேன். இந்த வாரமும், நீ வீட்டுக்கு வரவேண்டும், நளினி! அத்தையிடம் கேட்டு, பிரின்சியும் சம்மதித்து விட்டார்! ஆனால், இன்றைக்கே அனுப்ப மாட்டார்களாம்! நாளைக்கு உனக்கு, வேறு வேலை ஒன்றும் இல்லையே?" என்று வினவினான்.

அவளிடம் ஒரு வார்த்தை கேளாமல், பிரின்சிபால் வரை சுரேந்திரன் போனது, நளினிக்கு உள்ளூறக் கோபம்தான்! ஆனால், அவனுடைய பெற்றோரை, அவளுக்கு, பிகைப்

பிடித்துப் போயிருந்தது. அவர்களை மீண்டும் சந்திக்க ஒரு சந்தர்ப்பம் என்பதோடு, இப்போது மறுப்பது அவர்களைப் பிடிக்காத மாதிரியான தவறான அபிப்பிராயத்தையும் ஏற்படுத்தக் கூடும்!

ஆனால், "உன்னிடம் முதலிலேயே கேட்டிருக்க வேண்டும்! ஆனால், உன்னைப் பார்க்க வருவதாகச் சித்தப்பாக்கள் இருவரும் திடீரென்றுதான்... பத்து மணிக்கு மேல்தான் சொன்னார்கள். உன்னிடம் கேட்க நேரம் இல்லை! சாரி!" என்று அவன் சேர்த்துச் சொன்னபோது, அவளுக்கு ஒரு மாதிரியாகி விட்டது!

இவன் கோபமூட்டவும் செய்கிறான். ஆனால் கோபப் பட்டதே தப்பு என்றும் ஆக்கி விடுகிறானே என்றிருந்தது அவளுக்கு!" நாளை வேறு வேலை இல்லை" என்றாள் அவள் சுருக்கமாக.

"சித்தப்பாக்களா? என்ன திடீரென்று?" என்று கேட்டான் மகேந்திரன்.

"ஏன்? அவர்களுக்கும், மனோ அத்தை, பிரியமான தங்கைதானே? தங்கை மகளைப் பார்க்க வருகிறார்கள்!" என்றான் சுரேந்திரன். நளினியிடம் திரும்பி, சித்தப்பாக்கள் வரும்போது, அம்மா வீட்டை விட்டு வரமுடியாது. நாளைக்கு டிரைவரை அனுப்பினால், அவரோடு வந்து விடு" என்று முடித்தான்.

இந்த வீட்டினரைப் பிடித்துப் போன மாதிரி நளினிக்கு மற்ற மாமாக்களிடம் இயல்பான பிரியம் தோன்றவில்லை! பிரியமாகவே பேசினாலும், ஏதோ ஒரு குறை காணும் தன்மை, அவர்கள்இருவரிடமும் இருப்பதை,நளினி உணர்ந்தாள்.

இதனாலேயே, சரளா வீட்டிலேயே இருந்தாள் போலும்! விருந்துபசாரத்தில் புகாருக்கு இடமளித்து விடக் கூடாதே!



மனோகரியைக்கூட, 'அவ்வளவு பாசமாக இருந்தோம்! விட்டுவிட்டுப் போய் விட்டாளே!' என்பது போலத்தான் பேசினார்கள். அன்பு இல்லை என்றுசொல்ல முடியாது! ஆனால், தங்களை முதன்மையாக வைத்து, உணரப்பட்ட அன்பு! 'எனக்கு எப்படி இருக்கும் என்று யோசியாது போய் விட்டாளே' என்று எண்ணத் தோன்றியதே தவிர அவள் எப்படி உணர்ந்தாளோ. பாவம்' என்று நினைக்க வரவில்லை!

உறவுதான் என்றாலும் இதுபோல ஒட்டிக்கொள்ளும் விதம் அல்ல என்று நளினி உணர்ந்தாள்.

எல்லோருமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது திடீரென, "அந்த ஜோக் நினைவு வந்ததா?" என்று மகேந்திரன் நளினியைக் கேட்டுவிட பிறர் அறியாமல் அவன் காலை மிதித்து அவனை எச்சரித்தாள் அவள்.

அவள்தான் மறக்கவே இல்லையே! அவனிடம் சொல்லத் துடித்துக் கொண்டும் இருந்தாளே!

விருந்தினரை வாயில் வரை சென்று வழியனுப்பி வைத்தார்கள்.

அவர்கள் கார் அந்தப்பக்கம் திரும்பவும், மகேந்திரனின் தோளில் தட்டிவிட்டுத் தோட்டத்திற்குள் சென்றாள் நளினி.

குறிப்பறிந்து அவளைப் பின் தொடர்ந்தான் அவன்.

புல் தரையில் அமர்ந்து, நளினி தன் கதையைத் தொடங்கினாள்.

"காரில் பின்னாலே ஏறப்போனால், முன்புறம் ஏறச் சொல்லி விட்டு, 'பின்னே போ' என்று உள்ளே பார்த்து, விரட்டுகிறார். உள்ளே இருக்கும் 'மகா மனுஷி' குதறி விடாமல் பார்த்துக் கொள்வதாகப் பேச்சு வேறு! நான் வேறு இப்படி நினைத்துக கொண்டிருந்தேனா? ஐய்யோ! காரில் ஏறி, நாயைப் பார்த்ததும்,

சிரிப்பை அடக்க நான் பட்ட பாடு!'' என்று அவள் கூறவும், அவள் எதிர்பார்த்தது போலவே மகேந்திரன் விழுந்து, விழுந்து விலா நோகச் சிரித்தான்!

வயிற்றைப் பிடித்துக் கொண்டு ''ஐயோ, அப்பா! அம்மாடியோ! இனித் தாங்காதப்பா! ஆனால் இனி மோனியைப் பார்க்கும் போதெல்லாம் உனக்கு...'' என்று மீண்டும் சிரித்தான்.

''ம்!அதையும் அனுபவித்து விட்டேன்! பிரின்சியோடு ஹாஸ்டலுக்குச் செல்லும்போது, அதன் பக்கத்தில்தானே, உட்கார்ந்திருந்தேன்! வாயைப் பொத்திக் கொண்டு நான் சிரித்த சிரிப்பில் அது என்னைப் பைத்தியம் என்றே நினைத்திருக்கும்!

''இருக்காதா, பின்னே? எங்கள் மோனியைப் போய், ஏதோ ஒரு பிசா..'' என்று மகேந்திரன், எட்டிப் பார்த்துவிட்டு, ''வாண்ணா!'' என்றான் உரக்க ''வெள்ளியன்று மோனியை வெட்னரி டாக்டரிடம் கூட்டிப்போனாயே என்ன சொன்னார்?'' என்று தந்தையைக் கூட்டிப்போய் வீட்டினுள் விட்டு விட்டு வந்த அண்ணனிடம் விசாரித்தான்.

விழுந்து விழுந்து நகைத்ததினால், சிவந்து பளபளத்த முகங்களைப் பார்த்து விட்டு, ''ஒன்றும் இல்லையாம்! லேசான காய்ச்சல்! தானாகவே, சரியாகி விடுமாம்.. இன்னும் அரைமணி நேரத்தில் என்னோடு காரில் கிளம்பினால் உனக்கும் ஹாஸ்டலுக்கு நேரம் சரியாக இருக்கும்!'' என்றான் நளினியிடம் திரும்பி.

அவள் ஒன்றும் பேசாமல் தலையாட்டவும், ''ஓகே! இனி பட்டிமன்றம் தொடங்குவோமா? இப்போதே தொடங்கினால் தான் முடித்துவிட்டுக் கிளம்ப அவகாசம் இருக்கும்!'' என்று ஒரு நீண்ட வாக்குவாதத்துக்குத் தயாராக அவனும் புல் தரையில் அமர்ந்தான்.



பட்டிமன்றம் என்று மற்ற இருவரும் விழி விரிக்க அவன் சொன்னனான் ''அது தானே நானே போய்க் கொள்கிறேன், பெட்ரோல் விற்கிற விலையில் உங்களுக்குக் கட்டுப் படியாகாது ' நான் ஏறினால், கார் அழுக்காகி, விடும்' இத்யாதி காரணங்கள்! அப்புறம் அவைகளை நான் வெட்டிப் பேசிச் சமாதானம் செய்ய வேண்டும்!''

''எதற்கு அப்படியெல்லாம் சொன்னாய்?'' என்று அத்தை மகளைப் பார்த்தான் மகேந்திரன்.

அவள் உதட்டைக் கடித்துக்கொண்டு அமர்ந்திருந்ததைப் பார்த்ததும், அவனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. சிரிப்பும் வந்துவிட, முடிந்த அளவு அடக்கிக்கொண்டு, ''அம்மா கூப்பிடுகிற மாதிரி இருக்கிறது!'' என்று எழுந்து ஓடிவிட்டான்.

யோசனையோடு நோக்கி, ''காரில் ஏற அன்று ஏன் அப்படித் தயங்கினாய் நளினி?'' என்று கேட்டான் சுரேந்திரன். ''நீ சொன்ன காரணங்கள் எல்லாம் எவ்வளவு அசட்டுத்தனமானவை என்று உனக்கே தெரிகிறதில்லையா?''

ஏதோ இருக்கிறது என்கிறவரை, சுரேந்திரன் ஊகித்து விட்டான். அது என்ன என்று அவனிடம் சொல்வதும் தவறு! சொல்லாதிருந்து அவன் தப்பாக எதையும் அவனோடு செல்ல அவள் விரும்பாதது போலத் தவறாக எண்ணிக் கொள்ள விடவும் அவளுக்கு மனமில்லை!

அப்படியெல்லாம் அவன் நினைத்தானானால் அது முழுத்தப்பு! சரியாகச் சொல்லப் போனால், அவனோடு காரில் செல்லும் போதுதான் நளினி மிகவும் பாதுகாப்பாக உணர்வதே! சுகமாகவும்!

ஏதாவது சொல்லிச் சமாளிக்க வேண்டும் என்று எண்ணி, ''அது... அது வந்து, அத்தான் அன்றைக்கு...'' என்று தடுமாற்றத்துடன் தொடங்கியவள், சட்டென முடிவெடுத்து,

"அன்று காருக்குள் யாரோ இருப்பது போலத் தோன்றியது அத்தான். வேறு யாருடனோ வெளியே போக வந்து விட்டு, என்னைப் பார்த்ததும் திட்டத்தை மாற்றி விட்டீர்களோ என்று நினைத்தேன். நீங்களானால் எனக்கு உறவு! கூட வந்தவருக்கு எப்படி இருக்கும் என்று... அதனால்தான் காரில் ஏறத் தயங்கி அப்படியெல்லாம் சொன்னேன்!" என்று ஐஸ்வர்யாவின் பெயரைக் குறிப்பிடாமலே ஒருவாறு விளக்கம் கூறி முடித்தாள்!

அவளை ஒருதரம் ஆழ்ந்து நோக்கிவிட்டு எழுந்து அவளுக்குக் கை கொடுத்து அவளையும் எழுப்பினான். கிளம்புமுன், "அப்பாவிடம் சற்று நேரம் பேசிக் கொண்டிருவா!" என்று வீட்டுப்பக்கமாகக் கைகாட்டி நடக்கத் தொடங்கினான்.

"ஆக,இதுதான் உன் ஜோக்கா?" என்று கூட நடந்தவளிடம் கேட்டு அவளை ஒருதரம் அதிர வைத்தான்.

இதை என்னிடமும் சொல்லியிருக்கலாமே என்று கேட்டால், என்னவென்று பதில் சொல்வது? அதற்குமேல் ஐஸ்வர்யாவின் பெயரை எப்படி விடுப்பது?

ஆனால் கீழ்க்கண்ணால் அவளைப் பார்த்தவன் அப்படி ஏதும் கேட்டு, அவளைச் சங்கடப்படுத்தி விடவில்லை. மாறாக, "அப்படி யாருக்கும் சங்கடத்தை ஏற்படுத்தும் விதமாக நான் நடந்துகொள்ள மாட்டேன் நளினி. இதை எப்போதும் நினைவு வைத்துக் கொள்!" என்று அவன் கூறியது இன்னொரு விதத்தில் அவளுக்குச் சங்கடமாக இருந்தது!

அவனை மறுத்துப் பேசுவது இனிக் கடினம் ஆயிற்றே!

ஓரக்கண்ணால் அவனை நோக்கியவளுக்கு அப்படி அவனை மறுத்துப் பேசும் அவசியம் நேராது என்றே தோன்றியது! சுரேந்திரன் அவளுக்கு நல்லது செய்கிறவன்!



உள்ளூர நிம்மதியோடு, அவனுடன் இணைந்து நடந்தாள் அவள்!

உள்ளே சென்றதும் "என்னம்மா, உன் சின்ன மாமாக்களைப் பார்த்தாயே! என்ன தோன்றுகிறது?" என்று சுந்தரவதனம் விசாரித்தபோது தான் நினைத்ததைச் சொல்லி விட்டாள் அவள்.

"நீங்கள் வேறு மாதிரி மாமா! அம்மாவின் பிரிவு உங்களுக்கு வருத்தமாகத்தான் இருந்திருக்கும்! ஆனால் அம்மாவின் மகிழ்ச்சியை முன்னிறுத்திப் பார்த்து உங்கள் வருத்தத்தை ஒதுக்கி அவர்களிடம் பாசம் காட்டுகிறீர்கள்! உங்கள் வருத்தத்தை விட அம்மாவின் மகிழ்ச்சியைப் பெரிதாக நினைத்துச் செயல்படுகிறீர்கள்! உங்கள் அன்பின் அளவு அப்படி ஆனால் சின்ன மாமாக்கள் அப்படியல்ல! அவர்களுக்கு அம்மாவின் மகிழ்ச்சியை விட அவர்களது குறைதான் பெரிதாகத் தோன்றுகிறது!"

அவளது முகம் தடவி முத்தமிட்டு, "கெட்டிக்காரியடி நீ. உன் சின்ன மாமாக்களின் குணத்தை அப்படியே பிட்டு பிட்டு வைத்து விட்டாய். இதையே அவர்கள் இருவருக்குமே தன்னலம் அதிகம் என்பதை நான் சொன்னால் உன் மாமா ஒத்துக் கொண்டதே இல்லை!" என்று சந்தடி சாக்கில் கணவரின் காலை வாரினாள் சரளா!

அடுத்து சில வாரங்கள் கல்லூரி வளாகத்திலேயே கழிந்த போதும் நளினிக்குக் குறையேதும் தோன்றவில்லை. சொல்லப் போனால் மகிழ்ச்சியாகவே இருந்தது எனலாம்.

கேலியும், கிண்டலுமாக மகேந்திரனுடன் வாரத்துக்கு இரண்டு மூன்று தரமேனும் பேச முடிந்தது.

வாரம் ஒருமுறையேனும் ஏதாவது பலகாரத்தைச் செய்து எடுத்துக் கொண்டு, சரளா வந்தாள். சுந்தர வதனமும் போனில் பேசினார்.

விடுதிக்குக் காய்கறிகள் கொடுப்பது, கணக்குப் பார்ப்பது என்று சுரேந்திரனும் அவ்வப்போது வந்து போனான். வரும் போதெல்லாம் ஐஸ்கிரீம் பார்லருக்கு நளினியை அழைத்துப் போவது நிச்சயம்!

மொத்தத்தில் எல்லோருமாக அன்பைக் கொட்டி, நளினியை உச்சி குளிர வைத்துக் கொண்டிருந்தனர்! வழக்கமாகக் குடும்பத்தினரை எண்ணி அவ்வப்போது ஏங்குகிறவள் அவள்! ஆனால் இப்போது வீட்டைப் பற்றி அடிக்கடி பேசினாலும் கூட ஏக்க உணர்வின்றி மகிழ்ச்சியாகவே இருந்தாள்.

வழக்கம் போல வாரம் ஒருதரம் வீட்டினரோடு பேசும்போதும் கண்கலங்காமல் பேச்சை முடிக்க முடிந்தது!

எப்போதுமே அவள் துடிப்பான பெண்தான் என்ற போதும், இப்போது உள்ளம் ஒரேடியாகத் துள்ளாட்டம் போடுவதுபோல அவளுக்கே தோன்றியது!

இந்த உற்சாகத்தில் கடைசி செமஸ்டர் தேர்வுக்கு முந்திய 'ஸ்டடி ஹாலிடேசி'ன்போது, தங்கள் வீட்டில் தங்குமாறு சுந்தரவதனம் குடும்பத்தார் அழைத்தபோது நளினிக்கு மறுக்கத் தோன்றவில்லை! தாயார் சம்மதித்தால், தாராளமாக மாமன் வீட்டில் இருந்து கொள்ளலாம் என்று எண்ணினாள்!

சுந்தரவதனமே தங்கையிடம் "உன் மகளைப் பார்த்தால் உன்னைப் பார்ப்பது போல மனதிற்கு எவ்வளவோ ஆறுதலாக இருக்கிறது மனோ! நளினி அங்கே வந்து படிப்பதை இங்கே எங்களோடு இருந்து படிக்கட்டுமே!இரண்டு நாள் அலைச்சலும், களைப்பும் அவளுக்கு மிச்சம்! அவளைக் கேட்டால், அப்பா, அம்மாவைக் கேட்க வேண்டும் என்கிறாள்! மாப்பிள்ளையிடம் கேட்டு அவள் இங்கே தங்க அனுமதி வாங்கிக் கொடேன்மா!" என்று கேட்டுக் கொண்டார்!



ப்ளஸ்-டூ எழுதும் இரட்டையர்களை வைத்துக் கொண்டு மனோகரியும் படாதபாடுதான் பட்டுக்கொண்டிருந்தாள். வேலை வேறு! நளினியும் வந்து விட்டால் மூவருமாய் ஆட்டம் தான் போடுவார்கள்! எனவே நளினி அண்ணன் வீட்டிலிருப்பது மனோகரிக்கும் வசதியாகத்தான் இருந்தது! அண்ணன் மனைவியான சரளாவிடமும் அவளுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு! எனவே மகள் அங்கே இருப்பதற்கு அவள் சந்தோஷமாகச் சம்மதித்தாள்!

"யாருக்கும் இடைஞ்சல் இல்லையானால் தாராளமாக இருக்கட்டும்!" என்றாள் அவள்!

ஒரே ஒருவருக்கு இடைஞ்சல் இருக்கத்தான் செய்தது! ஆனால் நளினி இங்கே 'காம்யகவன'த்தில் தங்கலாமா கூடாதா என்று அந்த நபரிடம் அபிப்ராயம் கேட்பார்தான் யாரும் இல்லை!

ஐஸ்வர்யாவுக்கு முதல் பார்வையிலேயே, நளினியைப் பிடிக்காமல் போய் விட்டது! பொதுவாக அவளுக்கு இளவயதுப் பெண்கள் யாரையுமே பிடிக்காது! அதிலும் அழகாக இருந்தால் அடியோடு பிடிக்காது! அதே வகையில்தான் நளினி மீதும் முதலில் அவளுக்கு வெறுப்பு மூண்டிருந்தது.

முறைப்பெண் என்ற கேலிப் பேச்சு வேறு, அவளது எரிச்சலை அதிகப்படுத்தியிருந்தது. உறவினர்களுக்கு இடையேயான வெறும் கேலி என்று அதை ஒதுக்க அவளால் முடியவில்லை! குடும்பத்தினர் எல்லோரும் நளினியிடம் அன்பு காட்டிய விதத்தில் அவளுக்குப் பகீர் என்றது!

அவளுள் ஓர் அருமையான திட்டம் இருந்தது!

அந்தப் பகுதியில், பெரிய எஸ்டேட், அவளுடைய தந்தையுடையது! ஏலக்காய், காஃபி என்று எல்லாம் பணப் பயிர்கள்! பண்ணை முதலாளிகள் சங்கத் தலைவரும் அவர்தான்.

அந்தப் பகுதியில் இருந்த மணமாகாத ஆண்களில் சுரேந்திரனுக்குத் தனிச் சிறப்பு இருந்தது! தோற்றம், படிப்பு, அந்தஸ்து எல்லாவற்றிலும்! பண்ணையும் ஓரளவு பெரியதுதான்! அவளுடைய தந்தைக்கும், சுரேந்திரனை மிகவும் பிடிக்கும். கெட்டிக்காரன் என்று பாராட்டிப் பேசுவார்!

முதலில் அவனை மணந்து கொண்டு பிறகு ஏதாவது செய்து அவன் தம்பியையும், பெற்றோரையும் விரட்டி விட்டால்? அப்புறம் அந்தப் பகுதியில் அவள்தான் முடிசூடா ராணி! விரும்பினால், சுரேந்திரனும் மன்னனாக இருக்கலாம்!

இந்தத் திட்டத்தினாலேயே உறவுக்காரி என்ற பலமான அஸ்திவாரத்துடன் உள்ளே புகுந்திருந்த நளினியை அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்காமல் போயிருந்தது!

சுரேந்திரனின் வீட்டிலிருந்து அவளைக் கழுத்தைப்பிடித்து வெளியே விரட்டி விடத்தான் அவளுக்கு ஆசை! ஆனால் அப்போதைக்கு அதற்குரிய உரிமை அவளுக்கு இல்லாத காரணத்தால் அடிக்கடி வந்து தன்னால் ஆன மட்டும் நளினிக்கு எரிச்சல் மூட்டிக் கொண்டிருந்தாள்! அந்த எரிச்சல் தாளாமல் நளினி தானாக வெளியேறிவிட மாட்டாளா என்ற ஆசையில்!

ஆனால் நளினி அந்த மாதிரி வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடுகிற ரகமாகத் தெரியவில்லை!

நளினிக்குப் புரியாத ஆனால் சுரேந்திரன் குடும்பத்துக்குப் புரிகிற விஷயங்களைத் தேர்ந்தெடுத்துப் பேசுவாள் ஐஸ்வர்யா. பண்ணைப் பயிர்கள் விற்பனை சங்கக் கூட்டம் இப்படி!

ஆனால் அவளுக்கே புரியாத வண்ணம், பொது விஷயத்துக்குப் பேச்சு மீண்டும் வந்திருக்கும்!

இயற்கை அழகு, தட்ப வெப்பம், சினிமா, டி.வி, அரசியல்... என்று எல்லோரும் கலந்து பேசுகிற விஷயமாக மாறியிருக்கும் நாடு முழுவதும் சுற்றிப் பார்த்தவள்போல நளினி நிறைய



இடங்களைப் பற்றிப் பேச ஐஸ்வர்யாதான் வாயை மூடிக் கொண்டிருக்கும் படி ஆகிவிடும்.

தன் திட்டத்தையே நளினியும் கடைப்பிடிக்கிறாள் என்று எண்ணி இன்னமும் அதிக ஆத்திரப்பட்டாள் ஐஸ்வர்யா! ஏனெனில் அவள் வெற்றியடைகிறாளே!

ஆனால் அவளுடைய தந்தை அம்பலவாணரின் மீது கொண்டிருந்த மரியாதையின் காரணமாக மகளை மட்டம் தட்ட விரும்பாமல் சுரேந்திரன் இந்த வேலையை செய்கிறான். அவனுடைய தாய் அதற்குத் துணை செய்கிறாள் என்பதை ஐஸ்வர்யா கண்டு கொள்ளவே இல்லை. பட்டிக்காடு பழைய தலைமுறை என்று அவள் நினைத்துக் கொண்டிருந்த சரளா, இவ்வளவு யோசித்துச் செய்லபட்டாள் என்று யாரேனும் சொன்னால்கூட அவள் அதை நம்பியிருக்கவும் மாட்டாள்.

எனவே நளினி மீதுதான் அவளது வெறுப்பு வளர்ந்து கொண்டே போயிற்று! அவளை விரட்டும் வெறியும் வளர்ந்தது.

சொந்தம் பந்தம் என்று அழுத்தமாக உட்கார்ந்துவிட்ட நளினியை அடியோடு விரட்டுவது, அப்போதைக்குக் கடினம் என்று புரிந்தது. அத்தோடு இப்போதைக்கு நளினி சுரேந்திர னோடு ஒட்டி விடாமல் தடுப்பதுதான் மிகவும் முக்கியம் என்று எண்ணினாள்.

ஏனெனில் நளினியும், சுரேந்திரனுக்கு வலை வீசுகிறாளோ என்று ஒரு சந்தேகமும் அவளுக்கு வந்திருந்தது! அதற்கு ஒரு காரணமும் இருந்தது.

சுரேந்திரனின் வீட்டில் கீழ்த்தளத்தில் இரண்டு படுக்கை யறைகள் உண்டு. ஒன்றில் சுந்தரவதனம் தம்பதி இருந்து கொண்டு அடுத்ததை விருந்தினர் அறையாகப் பயன் படுத்தினர். இரவு தங்குகிற விருந்தினர் வந்தால் அதைத்தான் கொடுப்பது! இப்போதும் நளினி அதில் தங்குவதாகத்தான்

இருந்தது. ஆனால் அவள் என்னவோ மாய்மாலம் செய்து மாடியில் சுரேந்திரன் அறைக்கு எதிர் அறையில் இருந்த மகேந்திரனைக் கீழே இருந்த விருந்தினர் அறைக்கு வரச் செய்து விட்டு, அந்த அறையில் குடியேறி விட்டாள். ஒரு நாளைக்கு எத்தனை முறை அவனைச் சந்திக்கலாம்?

கௌரவமான குடும்பப் பெண் போல நடித்துக் கொண்டு அதிகமாகத் தரம் இறங்கி எதுவும்செய்ய முடியாது! ஆனாலும்...

நளினி தன் வேலையைத் தொடங்குமுன், அவளைப்பற்றி வேறு மாதிரி எண்ணும்படி, சுரேந்திரனைத் தயார் செய்துவிட வேண்டும்?

தீவிரமாக யோசித்தவளுக்கு அதற்கொரு வழியும் விரைவிலேயே தென்பட்டது!

மகேந்திரனுக்கும்நளினிக்கும் பொதுவான விஷயங்கள் பல இருந்தன! ஒரே கல்லூரி. இருவருமே கலகலப்பாகப் பேசுகிறவர்கள்! அருகருகே அமர்வதையோ, கையைப் பிடித்து தலையைத் தட்டி பிடித்துத் தள்ளி... இப்படித் தொடுவதையோ விகல்பமாக எண்ணாமல் பழகுகிறவர்கள். மகேந்திரன் சில மாதங்கள் பெரியவன் என்றாலும் சம வயதுக்காரர்கள்.

இருவரும் பழகுவதை வீட்டினர் யாரும் தவறாக எண்ணாத போதும், சில சமயங்களில் ஒரே பத்திரிகையை வைத்துக் கொண்டு இருவரும் அலசி ஆராயும்போது...சர்வ சாதாரணமாக நளினி, மகேந்திரனின் அருகே போய் அமரும்போது... இது போன்ற தருணங்களில் சுரேந்திரனின் கண்களில் யோசனை படிவதை ஐஸ்வர்யா கவனித்திருந்தாள்.

மகேந்திரன் சில மாதங்கள் பெரியவன் என்பதையும் அவர்கள் சரளமாகப் பழகுவதையும், வேறு விதமாகச் சுரேந்திரனுக்குக் காட்ட, ஐஸ்வர்யா முற்பட்டாள்.



தங்கள் விளையாட்டுத் தனத்தினாலேயே இந்த இருவருமே அதற்கு நிறைய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள்!

ஐஸ்வர்யாவை மகேந்திரன், நளினி இருவருக்குமே பிடிக்காது. எனவே அவளைக் கண்டதுமே, இருவரும் நழுவித் தோட்டத்திற்குள் காணாமல் போய் விடுவார்கள்.

" நாள் முழுவதும் சேர்ந்தே சுற்றுகிறார்களே! அப்போதும் தனிமை தேடுவதைப் பாருங்கள்!" என்று கண்சிமிட்டிச் சிரிப்பாள் ஐஸ்வர்யா!

"அன்று உங்கள் வீட்டுக்கு வந்தார்களாமே மிசஸ் நாதன்! மகியும், நளினியும் காதலர்களா என்று கேட்டார்கள்! அந்தம்மா எதனால் அப்படி நினைத்திருப்பார்கள்?" என்று யோசனை யோடு கேட்பாள்!

"சாப்பாட்டில் கூட இருவருக்கும் ஒரே ரசனையாமே! வாழ்க்கை நிம்மதியாக இருக்கும்!" என்பாள் ஒரு மர்மமான முறுவலுடன்.

நளினியைச் சரளா தேடினால், "மகேந்திரன் இருக்கும் இடத்தில் தேடுங்கள் ஆன்ட்டி!" என்று சொல்லிவிட்டு, சுரேந்திரனைப் பார்த்துச் சிரிப்பாள்!

மொத்தத்தில் மகேந்திரனும், நளினியும் ஒருவரை ஒருவர் நேசிக்கிறார்கள் என்று இன்னோரன்ன வார்த்தைகளால் நேரடியாகச் சொல்லாமல், அப்படி ஒரு மாயையை, சுரேந்திரன் மனதில் உண்டுபண்ண முயன்று ஐஸ்வர்யா ஓரளவு வெற்றியும் அடைந்தாள்.

இதற்கு வசதியாக "என்னைத் தனியாக விட்டுவிட்டுத் தாத்தா வீட்டுக்கு அம்மா மட்டும் கிளம்பிப் போய்விட்டதால், எனக்கு வீட்டில் போரடிக்கிறது. 'ஆன்ட்டி! போரடிக்குமே என்றால் ஆன்ட்டி வீடும் உனக்கு நம் வீடு மாதிரிதானே? அங்கே போய் இரு' என்று விட்டார்கள்! நான் வருவதால், உங்களுக்குத் தொல்லையில்லையே, ஆன்ட்டி?" என்று

சொல்லி நினைத்த நேரம் வந்து போவதற்குச் சரளாவிடம் அனுமதியும் பெற்றுக் கொண்டாள்.

தாயின் அழைப்பை மறுத்து, ஐஸ்வர்யா இங்கேயே தங்கினாள் என்பதை இங்கே யார் வந்து சொல்லிவிடப் போகிறார்கள் என்ற தைரியம்!

எனவே நினைத்த நேரத்தில் வந்து கண் கொத்திப் பாம்பு போல நடப்பதைக் கண்காணித்த வண்ணம், ஐஸ்வர்யா அந்த வீட்டில் வ்ளைய வந்தாள்!

ஆனால் ஐஸ்வர்யாவின் அடிப்படைக் கணிப்பில் சில தவறுகள் இருந்தன! முதலாவதாக, சுரேந்திரனை ஈர்க்க நளினி எந்தவிதத்திலும்முயற்சிக்கவில்லை! முதல்நாளே ஐஸ்வர்யா அண்ணியாகப் போகிறவள் என்று மகேந்திரன் கூறி விட்டிருந்தான். அது அவளுக்குப் பிடிக்கவில்லைதான். ஆனால் அவள் முடிந்த அளவு அவனிடமிருந்து ஒதுங்கித்தான் இருந்தாள். உறவு என்ற வகையில் பேசிச் சிரித்தாலும், மகேந்திரனிடம் போல இலகுவாகப் பழகுவதில்லை!

அதே போல மாடியறையும், கீழ் அறையில் அவள் தங்குவதாகத்தான் ஏற்பாடு! பெட்டியெல்லாம்கூட அங்கே தான் வைத்திருந்தாள். மாலையில் தோட்டத்தில் சுற்றிக் கொண்டிருந்த போது, ஜன்னல் ஓரமாக இருந்த ஒரு பூவைப் பறிக்கப் போனாள். அங்கே விரல் பருமனில் சுவரில் ஒட்டிக்கொண்டு இருந்த ஒரு புழுவைக் கண்டு அனிச்சைச் செயலாய் அவள் பின்னடைந்து தடுமாற, ஏந்திப் பிடித்தவன் சுரேந்திரன்!

"புழுவுக்குப் பயப்படும் வீராங்கனை! தோளில் தூக்கி வைத்துக் கொள்ளப்பா! புழு, இந்தப்பக்கம் திரும்பினால், மயக்கம் போட்டு விழுந்து விடப் போகிறாள்!" என்று கேலி செய்தான் மகேந்திரன்.

இன்னமும், சுரேந்திரன் மேல் சாய்ந்தபடியே நிற்பதை உணர்ந்து, நளினி நிமிர முயன்றபோது, புன்னகையோடு அவளைத் தூக்கி நடைபாதையில் விட்டு விட்டு, அந்தப் பூவைப் பறித்துக் கொடுத்தான் அவன்.



கூச்சத்துடன், "தாங்க்ஸ்!" என்று எங்கோ பார்த்து முணு முணுத்துவிட்டு, " நான் ஒன்றும் பயப்படவில்லை! சும்மா ஓர் அருவறுப்புத்தான்!" என்று மகேந்திரனுக்குப் பதில் சொன்னாள் அவள்.

அருவறுப்பானால், ஒரு குச்சியால் தூக்கிப் போட்டுவிட்டுப் பூவைப் பறிக்க வேண்டியதுதானே? அடேடே! இது உன் அறை ஜன்னல் ! இன்றிரவு, அந்தப் புழு, உன் அறைக்குள் வந்து உன்னை முழுங்கப் போகிறது பார்!" என்று கண்ணை உருட்டி மிரட்டினான் அவன்.

சிரித்தபோதும், நளினியின் பார்வை ஒரு தரம் அந்தப் புழுவின் பக்கம் பாய்ந்து மீள்வதைக் கவனித்துவிட்டு, அவள் அறையைச் சரளா மாற்றி விட்டாள்!

"ஐயோ, எனக்கு ஒன்றும் பயம் இல்லை அத்தை! அத்தோடு நான் ஜன்னலைச் சாத்திக் கொள்வேன்! அத்தான் அறையை மாற்ற வேண்டாம்!" என்றாள் நளினி!

"நீ சும்மா இரும்மா! ராத்திரியில் அந்தப் புழு அவனை முழுங்க வருகிறதா என்று அவன் விழித்துக் கிடந்து பார்க்கிறானா, இல்லையா என்று பார்ப்போம்!" என்று சிரித்தபடியே, பிடிவாதமாகச் சொல்லி விட்டாள் சரளா.

அவள் மனதில் என்ன இருந்ததோ?

ஆனால் இதையெல்லாம் அறியாமல் நளினியை மனதுள் கரித்துக் கொட்டிக் கொண்டிருந்தாள் ஐஸ்வர்யா!

நளினி காம்பகத்துக்கு வந்த இரண்டு தினங்களில், கடைசி ஆண்டு மாணவர்களுக்குக் கல்லூரியில், பிரிவுபசார விழா நடைபெற்றது! சும்மா என்றால் விழாவை முடித்துக் கொண்டு நளினி சென்னைக்கு ரயில் ஏறியிருப்பாள்!

பெண்கள் பட்டுச் சேலையும், ஆண்கள் பட்டு வேஷ்டி, சட்டையும் அணிவதாக முதலிலேயே பேசி வைத்திருந்தார்கள்.

அன்று அணிவதற்காக, தன் தாயின் சேலை ஒன்றைப் பொங்கலுக்குச் சென்றிருந்தபோது நளினி எடுத்து வந்திருந்தாள்!

அவளது மெல்லிய சங்கிலியைக் கழற்றிவிட்டு, பட்டுச் சேலைக்குப் பொருத்தமாகத தன் நகைகளில் ஒரு செட்டைச் சரளா அணிவித்துவிட நளினி ஜொலித்தாள்.

கெம்பும், மரகதமுமாக, இரட்டை அடுக்காய் அமைக்கப் பட்டிருந்த கழுத்தாரமும், பொருத்தமாகத் தோடு, மோதிரம் வளையல்களும் அடங்கிய இந்த நகைசெட் விலை உயர்ந்தது! குடும்ப நகை என்று சொல்லத்தக்க அந்த நகைகளை, சரளா நளினிக்குப் போட்டுவிட்டது ஐஸ்வர்யாவுக்குக் கொதிப்பு தான்.

ஆனால் அதைக் காட்டாமல் அடக்கிக் கொண்டு "பொண்ணு, மாப்பிள்ளை போல, ஜோடிப் பொருத்தம் என்ன பிரமாதமாக இருக்கிறது பாருங்கள்! உங்கள் தம்பிக்கு அவளை விட்டுக் கண்ணை எடுக்க முடியவில்லையே!" என்று சுரேந்திரனுக்கு ஏற்றி விட்டாள் அவள்!

இதை அறியாமல் மகேந்திரனும்,அப்போது "வாவ்!" நளினியைப் பார்த்து வியந்து கொண்டுதான் இருந்தான்! தலையில் சும்மா ஒரு 'பாண்டை'ப் போட்டுக் கொண்டு சுடிதார் செட்டில் சுற்றுமே, நளினி நளினி என்று ஒரு வால் அதை எங்கு தேடியும் காணாமே, நீ பார்த்தாயா?" என்று இங்குமங்கும் தேடுவதுபோலப் பாவனை செய்ய, அவள், 'கலீர்' என்று சிரித்தாள்!

வேலை இருப்பதாகச் சொல்லி அலுவல் அறைக்குள் சென்று சுரேந்திரன் கதவைச் சாத்துவதை மிகுந்த திருப்தியுடன் கண்டாள் ஐஸ்வர்யா!






தொடர்ந்து சில நாட்கள், பண்ணையைப் பார்வை யிடுவதும், கணக்கு வழக்குகளைப் பார்ப்பதுமாக சுரேந்திரன் பெரும்பாலும் வேலையிலேயே மூழ்கியிருந்தான்!

காலை, இரவு உணவு வேளை தவிர, அவனைக் காண்பதே மற்றவர்களுக்கு அரிதாக இருந்தது!

மகேந்திரனும் நளினியும், அவரவர் பாடங்களைத் தீவிரமாகப் படிக்கத் தொடங்கியிருந்தனர்.

எனவே, பொதுவாக வீட்டில் அமைதி நிலவியது!

ஐஸ்வர்யாவும் வந்து போரடித்துப் போய்க் கொண்டிருந்தாள்.

ஒருநாள் உணவின் போது, இந்தப் படிப்பு முடிந்தபின் என்ன செய்வது என்ற பேச்சு எழுந்தது!

"என்ன படிப்பு வேண்டும் என்றாலும், கலந்து பேசிச் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்!" என்றாள் நளினி.

"நான் மேல்படிப்புக்கு யு.எஸ் போகப் போகிறேன். என் நண்பர்கள் இரண்டு, மூன்று பேருக்கு அதே ஐடியாதான்" என்றான் மகேந்திரன்.

தந்தை எதையோ சொல்ல வாயெடுத்துவிட்டுப் பேசாதிருப்பதைக் கவனித்து விட்டு, "மேல் படிப்பை முடித்துவிட்டு, என்னடா செய்யப் போகிறாய்?" என்று தம்பியிடம் சுரேந்திரன் கேட்டான்.

"நமக்கு வேறே என்னண்ணா, தொழில்? நம் பண்ணையை வளர்ப்பதுதான்" என்றான் சின்னவன்.

"அதற்கு அமெரிக்காவுக்குப் போய்ப் படிக்க வேண்டுமா? இங்குள்ள விவசாயத்தை இங்கே படிப்பதுதானே மேல்?" என்றான் சுரேந்திரன்.

மகேந்திரன் பேசாதிருக்கவும், "பேசாமல் இங்கேயே படி! எது வேண்டுமானாலும்தான் இப்போது இங்கேயே படிக்க முடிகிறதே!" என்று முடித்தான்.

பிறகு பேச்சு மாறி விட்டது!

சற்றுப் பொறுத்து மகேந்திரன், நளினியை அழைத்துப் பேசினான். "என் சிநேகிதர்களிடம் ஜம்பமாகச் சொல்லி விட்டேன் நளினி. இப்போது இப்படியில்லை என்றால் செலவுக்குப் பார்ப்பதாக எல்லோரும் என்னைக் கேலி செய்வார்கள்! எனக்காகக் கொஞ்சம் அண்ணனிடம் பேசுகிறாயா? அண்ணன் சரியென்று விட்டால் அப்பா, அம்மாவும் ஒத்துக் கொள்வார்கள்! எனக்காகச் செய்கிறாயா?" என்று வேண்டினான்.

"நான் சொல்லி... நான் சொன்னால் அவர் கேட்பாரா மகேன்?" என்று நளினி சந்தேகமாகக் கேட்கவும், "என்ன அம்மையார் ஜோக்கடிக்கிறீர்களா?" என்று சிரித்தான் அவன்.

"நளினிம்மா விருப்பம்தான், இனி இங்கே!" என்று சுந்தரவதனம் அடிக்கடி கூறுவார். இன்றைக்கு என்ன சாப்பாடு, என்ன சிற்றுண்டி என்றெல்லாம் யோசிக்கும்போது அவர் அப்படிச் சொல்வது வழக்கம்! அந்த அடிப்படையில் சுரேந்திரனும், அவளது விருப்பத்தை இந்த விஷயத்தில் கூட ஏற்பான் என்று இவன் எதிர்ப்பார்க்கிறானா? என்ன பைத்தியக்காரத்தனம்?!



சின்னப் பையனாகத்தான் இருக்கிறான்!

ஏனோ அன்றிரவு, நளினிக்குச் சரியாகத் தூக்கம் வர மறுத்தது!

அவள் ஒன்று சொல்லி, சுரேந்திரன் கேட்பது என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்?!

ஆனால் இந்த விடுமுறை நாட்கள் முடிந்து விட்டால், அப்புறம் இந்த அன்பான உறவுகளைப் பார்ப்பதுகூட அரிதாகி விடும்! அதிலும் சுரேந்திரனுடைய மனைவியாக, ஐஸ்வர்யா ஆகிவிட்டால், நிச்சயமாக இந்த உறவை வெட்டியே விடுவாளே!

இதமான இந்த மிதக்குளிரிலும், அறைக்குள் அவளுக்கு இறுக்கமாக இருந்தது! வெளியே நிலவின் வெளிச்சம் இருப்பது ஜன்னல் வழியே தெரிந்து, 'வா' என்று அழைத்தது!

மொட்டை மாடிக்குச் சென்று சற்று நேரம் சிலுசிலுவென்று காற்றில் நின்றுவிட்டு வந்தால் தூக்கம் வரக்கூடும் என்று எண்ணி எழுந்து சென்றாள் அவள்.

அங்கே அவள் கண்ட தோற்றம் அவளைத் திகைக்க வைத்தது!

அவளுக்கு முன்னதாக மொட்டை மாடிக்குச் சென்று, அங்கே நின்று கொண்டிருந்தவன், சுரேந்திரன்தான். கைப்பிடிச் சுவரில் லேசாகச் சாய்ந்த வண்ணம், நிலவைவெறித்துக் கொண்டிருந்தான். கைதேர்ந்த சிற்பியால் செதுக்கப்பட்டசிலை போல, அவனது பக்கவாட்டுத் தோற்றம் அவள் மனதில் ஆழமாகப் பதிந்தது!

எவ்வளவு நேரம் தன்னை மறந்து, அவனைப் பார்த்துக் கொண்டு நின்றாளோ, அவளுக்கே தெரியாது! ஏதோ ஓர் இரவுப் பறவையின் குரல் ஒலியில், அவளது அந்த மோன நிலை கலைந்தது.

சுரேந்திரனுக்கும் அப்படித்தான் இருந்ததோ நிமிர்ந்து உட்புறம் செல்லத் திரும்பியவன், அவளைக் கண்டதும் திகைத்து நின்றான். "எ... என்ன வேண்டும்?" என்று வினவினான்.

என்ன வேண்டும்? அவளுக்கு, இப்போது என்ன வேண்டும்?

அவசரமாக யோசித்து, "அது.. வந்து உங்கள் தம்பி... ம... மகேன் பற்றிப் பேச வந்தேன்!" என்று ஏதோ காரணத்தை ஒரு வாறு சொல்லி வைத்தாள்.

"என்ன சொல்ல வேண்டும்?" என்றான் அவன் உணர்ச்சியற்ற குரலில்.

"அது... வந்து... பாருங்கள் அத்தான்! காலம் இப்படியே இராது! சின்ன அத்தானுக்கும் திருமணம் ஆகும்! குறைப்படுகிற மாதிரி இல்லாமல் இயல்பாகவே, இந்த வெளிநாட்டு விவகாரத்தை அவளிடம் அவர் சொன்னால் அவள் உங்களைப் பற்றித் தப்பாக எண்ண மாட்டாளா?"

மேலே என்ன சொல்லுவது என்று நளினி யோசிக் கையில், "உனக்கு என்ன தோன்றுகிறது?" என்று, அவளைக் கேட்டான் அவன்.

அவள் சுரேந்திரன் பக்கம்தான்! ஆனால் பணம் இருக்கும் போது தப்பு இல்லாத ஓர் ஆசைக்குத் தடை போடுவானேன்?

அதையே அவனிடம், "இல்லாதவர்கள் என்றால், உங்கள் பேச்சு சரிதான் ஆனால் வேண்டிய வசதி இருக்கும்போது, படிப்புக்காக இல்லாவிட்டாலும், உலகத்தை அறியும் வாய்ப்பாக வேனும் அனுப்பி வைக்கலாம்தானே? பல நாட்டு மாணவர்கள் கூடும் இடம் அது! அவர்களோடெல்லாம் பழகும்போது, அனுபவ அறிவு எவ்வளவோ விருத்தி ஆகும் தானே? அத்தோடு மகேன் தப்பு வழி போக மாட்டார். என்று எனக்கு



நம்பிக்கை இருக்கிறது! அதனால் அனுப்பலாம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது" என்றாள் அவள்!

"அனுப்பலாம்தான். ஆனால் அப்பாவுக்காகத்தான் யோசித்தேன். இந்த சிகிச்சைக்குப் பிறகு அவருக்கு, எங்களில் யாரையும் விட்டுப் பிரிய மனம் வருவது இல்லை! அதிலும் அவன் கடைக் குட்டி! ஒரு தடவை காரைக் கொண்டு மோதி விட்டான் என்று அவன் காரை எடுத்தாலே, அவ்வளவு பயப்படுவார்... அவருக்காகத்தான் மறுத்தேன்.. சரி, இப்போது அப்பாவிடம் பேசி ஏற்பாடு செய்கிறேன்!" என்றான் சுரேந்திரன்.

சிறு அமைதிக்கு பின், "ரொம்பத் தாங்க்ஸ்" என்றாள் நளினி.

அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு, "என் தம்பிக்காக, நீ நன்றியுரைக்க வேண்டுமா?" என்று கேட்டபோது, அவன் குரலில் வருத்தம் வருத்தம்போல் ஏதோ இருந்தது.

யோசனையோடு,அவள் அவன் முகத்தை ஆராயுமுன், "இதை நாளைக்குப் பேசியிருக்கலாமே! இதற்காக இந்தப் பனியில் வருவார்களா? உடம்புக்கு ஒத்துக் கொள்ளாமல் ஏதாவது வந்து விட்டால்? தேர்வு வேறு வருகிறது!" என்று அவளது நலத்தில் அக்கறை காட்டிக் கூறினான்.

சட்டெனக் கண்கள் பளபளக்க, "ஓகோ! இந்த ஊர்ப்பனிக்கு திருவாளர் சுரேந்திரனின் உடம்பை மட்டும் பாதிக்கவே கூடாது என்று ஏதேனும் உத்திரவு, கித்தரவு இருக்கிறதா என்ன? நான் வரும்போதே, நீங்களும் இந்தப் பனியில் தானே நின்று கொண்டிருந்தீர்கள்?" என்று சிரித்தாள் நளினி.

அவள் சிரித்து முடிக்கும்வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "பழக்கம் இல்லாதவர்களுக்கு இது ஒத்துக் கொள்ளாமல் போகலாம். எனக்கு சிறு வயதிலிருந்து பழகியதுதானே? சரி சரி, மேலே பனியில் நில்லாமல் உள்ளே போய்ப் படுத்துக்கொள்.

எதற்கும் கணப்பைப் போட்டுக்கொள். பாதிப்பு இராது'' என்று அவளை அனுப்ப முயன்றான் அவன்.

அதாவது, அவளைப் பொறுத்தவரை பேச்சு முடிந்தது. அவள் போகலாம் என்கிறான்! போ என்றே சொல்லுகிறான்!

ஆனால் ஏதோ முழுவதும் பேசி முடிக்காததைப் போன்ற உணர்வு முன்போலவே அவளுக்கு அப்போதும் உண்டாயிற்று. ஆனால் வேறு எதுவும் சொல்லவும் தோன்றாததால், வெறுமனே தலையாட்டி விட்டு உள்ளே போனாள் அவள்.

உள்ளே சென்று படுத்தவளால், உடனே உறங்கவும் முடியவில்லை! என்னென்னவோ எண்ணங்கள், ஒன்றுக்கொன்று தொடர்பற்றுத் தோன்றி, அவள் மனதைக் குழப்பின. நிலவின் ஒளியில், உறுதியான சிலைபோல, சுரேந்திரன் நின்ற தோற்றமே, திரும்பத் திரும்ப மனதில் தோன்றியது. அமைதியைக் கலைத்த, அந்தத் தோற்றமே, பார்க்கப் பார்க்க அமைதியையும் தர, அதே நினைவுடன் அப்படியே உறங்கலானாள்.

நளினிக்கு வாக்குக் கொடுத்தது போலவே, மறுநாள், தந்தையிடம் பேசி, அவரைச் சமாதானம் செய்துவிட்டு சுரேந்திரன் தம்பியை அழைத்தான்!

வெளிநாடு போவதற்குத் தந்தை சம்மதித்துவிட்டதைத் தெரிவித்தான். வியந்து விழி விரித்தபோதும், சாதித்துவிட்ட பெருமையும், மகேந்திரன் முகத்தில் தெரிந்தது! மகிழ்ச்சியோடு ''நளினி உன்னிடம் பேசினாளா, அண்ணா?'' என்று விசாரித்தான்.

தம்பியின் முகத்தையே பார்த்திருந்த பெரியவன், ''ம்... பெரிய சிபாரிசுதான் பிடித்து வைத்திருக்கிறாய்! பரவாயில்லை! ஆனால் போகிற இடத்திலும், நல்ல பெயர் வாங்கிச் சாதனை புரிய வேண்டும்'' என்றான்.

''நிச்சயம் சாதிப்பேன் அண்ணா! நான் சிபாரிசு பிடித்த விதம் பார்த்தாயல்லவா? யார் பேச்சை மறுக்க முடியாதோ, அந்த



ஆளின் சிபாரிசு பிடித்தேன். இதே என் கெட்டிக்காரத்தனத்தை உனக்குத் தெளிவாக நிரூபித்திருக்கும்! இதே கெட்டிக்காரத் தனத்தைப் படிப்பிலும் காட்டுவேன், பார்!'' என்று சூளுரைத்தான் மகேந்திரன்!

தன்னை மீறி வந்த பெருமூச்சை அடக்கிக் கொண்டு, ''செய்!'' என்று வாழ்த்தினான் அண்ணன்!

இது பற்றிய பேச்சு குடும்பத்தாருக்கு இடையே மீண்டும் வந்தது.

பாஸ்போர்ட், விசா போன்ற வேலைகளைப் பார்ப்பதற்காக தான் அடிக்கடி சென்னைக்கு வருமாறு இருக்கும் என்று மகேந்திரன் சொன்னான்.

''அப்படி வரும்போது எங்கள் வீட்டில் தான் தங்க வேண்டும், மகேன்! வேறு எங்கேயும் தங்குவது பற்றி நினைத்தால் கூட எனக்குப் பொல்லாத கோபம் வரும் நினைவிருக்கட்டும்!'' என்று எச்சரித்துவிட்டு, நளினி எழுந்தாள். ''அடுத்த 'போர்ஷன்' தொடங்கி விட்டேன். படிக்க வேண்டும் போகிறேன் அத்தை!'' என்று மாடிக்குப் போய் விட்டாள்.

புன்னகையோடு, அவளையே பார்த்திருந்துவிட்டு, யூஎஸ்ஸுக்கெல்லாம் போவது; என்றாலும் அதற்கு முன் இவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைத்து, அப்புறமாக அனுப்புங்கள்'' என்றாள் சரளா.

''ஆஹா! அருமருந்தன்ன இளைய மகனிடம் அம்மாவுக்கு, எவ்வளவு நம்பிக்கை!'' என்றான் மகேந்திரன்.

''ஏன்? அன்பான அம்மாவிடம் நம்பிக்கை வைத்து, அவள் சொல்வதை, அந்த அருமருந்தன்ன திருமகனார் கேட்டால் என்னவாம்?'' என்று சரளா பதில் கொடுக்கவும், பிள்ளை முகம் சுளுக்கினான்.

"என் வெளி நாட்டுப் பயணத்தைக் கெடுக்க, இப்படி ஓர் ஏற்பாடாகும்?'' என்று எரிச்சல்பட்டான் மகேந்திரன். இன்னும் அண்ணன் திருமணம் முடிந்து, அப்புறம் எனக்கு நடந்து... அதற்குள், இந்த வெளிநாட்டுப் பயணத்தையே, நான் அடியோடு மறந்துவிடுவேன் என்ற ஐடியா! அதுதானே? நீங்கள் நினைப்பதுதான் எனக்கு நன்றாகத் தெரியுமே...'' என்று முணுமுணுத்தபடி எழுந்து, தோட்டத்துப் பக்கமாய் வெளியே சென்றான்.

"உளறுவதைப் பார்!'' என்றாள் சரளா.

"நான் போய்ப் பார்க்கிறேன், அம்மா!'' என்று, தாயிடம் முறுவலித்துவிட்டுத் தம்பியைப் பின் தொடர்ந்தான் சுரேந்திரன்.

முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்ற மகேந்திரனின் தோளைத் தட்டி, இதோபார்! நீ வெளிநாடு செல்வதில், எந்தவிதத் தாமதமும் நேராது! அதற்கு நான் பொறுப்பு!'' என்றான்.

"அதெப்படி? அம்மா சொல்வது போல என்றால், திருமணத்துக்குப் பெண் பார்க்கவே, எத்தனை மாதங்கள்.. ஆண்டுகளே ஆகக் கூடுமே!'' என்று எரிச்சல் பட்டான் தம்பி.

"ஆகாது! எனக்கு, இப்போது அந்த மாதிரி ஆசை கொஞ்சம்கூட இல்லை! அதனால், எனக்காக, நீ காத்திருக்க வேண்டாம்! எப்போது வேண்டுமானாலும், எனக்கு முன்னதாகவே மணந்து கொள்ளலாம்!... உனக்குத்தான் பெண் தயாராயிற்றே!'' என்ற சுரேந்திரனை, அவன் தம்பி அதிசயமாகப் பார்த்தான்!

தனக்காக, அண்ணன் திருமணத்தையே தள்ளிப் போடுகிறானே என்று தம்பி அதிசயப்படுகிறான்! ஆனால், அண்ணன் கல்யாணம் செய்து கொள்ளப்போவது இல்லை என்று தெரிந்தால், என்ன சொல்லக்கூடும்? அவனும், திருமணத்தை மறுத்துவிடுவானோ?

செய்தாலும் செய்வான்! ஏனெனில், அவர்கள் குடும்பத்தின் அன்புப் பிணைப்பு, மிகவும் அழுத்தமானது!



எனவே, தன் திருமணம் பற்றி மேற்கொண்டு சுரேந்திரன் எதுவும் கூறவில்லை! அதை விடுத்து, "உண்மைதானடா உங்கள் திருமணத்தை , நானே நடத்தி வைக்கிறேன். அப்பா அம்மாவிடமும், இது பற்றிப் பேசி, நளினியை உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்!'' என்று, தம்பிக்கான, தன் திட்டத்தை விவரித்தான்.

சட்டெனக் கண்கள் பளபளக்க, "ஓகோ! இந்தக் கதை, அப்படிப் போகிறதா?'' என்றான் மகேந்திரன். உடனேயே, சற்று யோசித்து , "இல்லை அண்ணா! இந்த விஷயம், நானே பார்த்துக் கொள்கிறேன். அம்மா அப்பாவிடமும் நானே பேசி வேண்டிய ஏற்பாட்டைச் செய்து முடிக்கிறேன்! நீ ஒன்றும் செய்ய வேண்டாம்! தனியே, வெளிநாட்டுக்குப் போகப் போகிறவன், இதற்கெல்லாம், அண்ணன் பின்னே ஒளிந்து கொள்வது, நன்றாயிராது, பார்! அதனால், முழுக்க முழுக்க என் பொறுப்பாய், எல்லாமே நானே பார்த்துக் கொள்ளுகிறேன்! நீ ஒரு வார்த்தை, யாரிடமுமே மூச்சு விட வேண்டாம்!'' என்றான் அவன், குரலில் ஒரு துள்ளலுடன்!

உள்ளடக்கிய பெருமூச்சுடன் தலையாட்டிவிட்டு, சுரேந்திரன் போக, விழுந்து விழுந்து சிரித்தான் சின்னவன்! சிரித்து முடித்துவிட்டுத் தன் பெற்றோரைத் தேடிச் சென்றான்!




செமஸ்டர் பரீட்சையும் ஒருவாறு முடிந்து போயிற்று!

நளினி 'காம்யக' த்து வந்து, எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டுக் கிளம்பினாள்.

சுரேந்திரன் ஏதாவது சொல்ல மாட்டானா என்று, அவனைப் பார்த்தால், அவன் எங்கேயோ பார்த்துக் கொண்டு நின்றான்.

இனிமேல், அவள் இங்கே வர முடியாமலே கூடப் போய்விடலாம்! இவன் ஒன்றுமே சொல்லமாட்டேன் என்கிறானே, என்று ஏக்கத்துட ன் நினைத்தாள், அவள்.

ஆனால், "உன் பெற்றோருடன் பேசியிருக்கிறேன். எப்படியாவது, எல்லோருமாய், இங்கே வந்து ஒரு வாரமாவது தங்கிப் போக வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். விடுப்பு கேட்டு, வர முயற்சிப்பதாய்,அம்மா சொன்னாள்! நீயும், எங்கள் சார்பில் வற்புறுத்தி, அவர்களை அழைத்து வாம்மா!" என்று வழியனுப்பினார் சுந்தரவதனம்!

அப்போதும், கூப்பிட வேண்டியவன், ஒரு வார்த்தை, 'வா' என்று அழைக்கவில்லையே என்றுதான் வாடினாள் அவள்.

ஆனால், கீச்சுக் குரலும், உரத்த சிரிப்புமாக, ஐஸ்வர்யா வரவும் சட்டெனப் புரிந்தது! அவன் எப்படி அழைப்பான்? அவளை, மணக்கப் போகிறானே!

ரயில் நிலையம் வரை வந்து வழியனுப்பியவன் மகேந்திரன்தான். ஒட்டி வைத்தது போல், அவன் முகத்திலிருந்த புன்னகை ஆத்திரமூட்ட, "எங்கேனும், இளிச்சவாய்க் காரர்களுக்கு என்று, ஏதேனும் போட்டி நடத்தப் போகிறார்களா? இளித்துக் கொண்டே இருக்கிறீர்களே!" என்று எரிந்து விழுந்தாள்!

அவன் அதற்கும் சிரித்தான்!

'வள்' என்று விழுந்த உடனேயே, அவளுக்கு மனம் சுட்டது! முன்பானால், பஸ் பிடித்துப் போய், ரயிலில் ஏறவேண்டும். தோளிலும் கையிலுமாகச் சாமான்களை வேறு, தூக்கிச் சுமந்து, தோள் இற்றுப் போகும்! சென்னைக்குப் போய்விட்டால், தம்பி, அப்பா எல்லோரும் வந்து விடுவார்கள் என்றாலும், இங்கே, அவள்தானே செய்தாக வேண்டும்? அதெல்லாம் இல்லாமல், காரில் கொண்டு விடுகிறான்! பூபால் மாதிரி, பைகளை வேறு, தூக்கிக் கொள்கிறான். அவனிடம் போய் எரிந்து விழுவதா?



உடனேயே, "எல்லோரையும் விட்டுப் போவது, ஒரு மாதிரி இருக்கிறது, மகேன்! அதில், கொஞ்சம் கோபமாகப் பேசி விட்டேன்! சாரி" என்று மன்னிப்புக் கேட்டாள்.

ஆனால், "மன்னித்தோம்! ஆனால், எல்லோரையுமா? அல்லது, குறிப்பாக யாராவது ஒருவரை மட்டுமா?"... என்று அவன் கேட்கவும் திடுக்குற்றுப் போனாள்.

இவன் எதையும் கண்டு பிடித்து விட்டானா?

அவசரமாகச் சமாளித்து, "அப்படிக் குறிப்பாகச் சொல்லும் படி, யார் இருக்கிறார்களாம்?" என்று மிடுக்காகக் கேட்டாள்.

"ஏன், நான் இல்லை?" என்றான் அவன் அவளை விட மிடுக்காக! "நம் இருவருடைய குடும்பங்களும் ஒன்று சேர்ந்ததன் மூல காரணமே, நான்தானே? எனக்கு ஒரு சிறப்பு மரியாதை, எல்லோருமே, தந்தாக வேண்டாமா?" என்று, அவன் அதிகாரமாகக் கேட்க முயன்று முறுவலித்தாள் அவள்!

உண்மைதான்! இவன் மட்டும், அன்று அந்தப் பணியாரத்தைக் கேட்டிராவிட்டால், இந்த உறவு மீண்டும் தொடர்ந்தே இராது! ஆனால், சேர்ந்த பிறகு, பிரிவது எப்படி?

சென்னை வந்தடைந்த பின்னரும், முன்பு போல அவளால் மனம் விட்டு நகைக்க முடியவில்லை.எந்நேரமும் உள்ளே ஏதோ பளு அழுத்திக்கொண்டே இருக்கையில் சிரித்துக் கலகலப்பது எப்படி?

விடுமுறையைக் கழிப்பதற்காக ஏகப்பட்ட திட்டங்களுடன் காத்திருந்த பூபாலும் சித்ராவும் பொறுமையற்றுக் குதித்தனர்.

"கடைசி செமஸ்டர் அல்லவா? அக்கா, தங்க மெடலுக்காக விழுந்து விழுந்து படித்திருப்பாள்! அந்த இறுக்கமாயிருக்கும்! அப்படித் தானேடா?'' என்று மனோகரி விசாரித்தாள்.

தலையாட்டிவிட்டு ஒரு வாரம் நன்றாகத் தூங்கப் போகிறேன் அம்மா! அதற்குள் எல்லாம் சரியாகிவிடும்!'' என்று அறைக்குள் புகுந்து கொண்டாள் மகள்!

அப்படி ஆகிவிடத்தான் அவள் ஆசைப்பட்டதும்! உற்சாகமான குடும்பத்தில், ஒருவர் உம்மென்று இருந்தாலும், மொத்தப் பேர் கலகலப்பும் கெட்டுப் போய்விடும். அந்த மாதிரி உம்மணாமூஞ்சியாக, தான் இருப்பது நளினிக்கே பிடிக்க வில்லை! எனவே தனக்குத்தானே புத்தி சொல்லித் தன்னைத் தானே, தேற்றிக்கொள்ள முயன்று கொண்டிருந்தாள். ஏனெனில் இது மற்றவரிடம் ஆலோசனை கேட்கும் விஷயமாக, அவளுக்குத் தோன்றவில்லை!

அத்தோடு, பெற்றவர்கள் ஒருவார விடுமுறை எடுத்துக் கொண்டு விரைவிலேயே எல்லோருமாக 'காம்யகவன' த்துக்குச் செல்வதாகத் திட்டம் போட்டுக் கொண்டிருந்தனர். அங்கே செல்லுமுன், நளினி பழைய மாதிரி ஆகிவிட வேண்டாமா?

புன்னகையைப் பூசிக்கொண்டு நளினி நடமாட, எல்லோருமாகச் சுரேந்திரன் வீட்டுக்குக் கிளம்பிச் சென்றார்கள்!

வாழ்வில் முதல் முறையாகப் பராசரனுக்கு மாப்பிள்ளை உபசாரம் நடந்தது! "மாமனார் ஆகப் போகிற வயதில், எனக்கே மாப்பிள்ளை உபசாரமா? சும்மா சகஜமாக இருங்கள்!'' என்று அவர் சொன்னது, அங்கே எல்லோருக்கும் பிடித்தது!

மகேந்திரன் சொன்னது போல, சுந்தரவதனமும், மனோகரியும் 'பாசமலர்' அண்ணன் தங்கையாகக் கொஞ்சம் கண்ணீர் உகுத்தனர். சரளாவும் அதில் சேர்ந்து கொள்ள, இந்த உணர்ச்சிகளின் சங்கமம், சின்னவர்களுக்கு வியப்பாகவும், நெகிழ்ச்சியாகவும் இருந்தது!



சற்று நேரத்தில் எல்லாம் சரியாகிவிட, எல்லோருக்கும் மகிழ்ச்சி மட்டுமாக இருந்தது!

அறிமுகப் படலம் முடிந்ததும், "இவ்வளவு பிரியமான உறவினர்கள் நமக்கு இருக்கிறார்கள் என்பதே, மிகவும் நன்றாக இருக்கிறதம்மா!'' என்றான் பூபால்!

வழக்கம் போல, அவனுக்கு ஒத்துப் பாடினாள் சித்ரா!

"என்னோடு வருகிறீர்களா? இங்கே உள்ள, நல்ல நல்ல இயற்கைக் காட்சிகள் எல்லாம் காட்டுகிறேன். பேரிக்காய், ப்ளம்ஸ் பழத் தோட்டங்கள் எல்லாம் பார்க்கலாம்!'' என்று, சின்னவர்களை அழைத்தான் மகேந்திரன்.

"அம்மா, அம்மா, மகேன் அத்தானோடு போகிறோம்!'' என்று அறை வாயிலில் நின்று அறிவித்து விட்டு, அவர்கள் இருவரும் மகேந்திரனின் வாலாய், அவன் பின்னே ஓடினார்கள்.

எப்போதும், வீட்டில் சின்னவனாக இருந்தே பழகியவனுக்கு, அவனை விடவும் சில ஆண்டுகள் சின்னவர்களான இருவர், அத்தான், அத்தான் என்று அவன் பின்னே சுற்றுவது மிகவும் பிடித்திருந்தது! நிறைய இடங்களுக்குத் தன்னோடு கூட்டிக் கொண்டு அலைந்தான்! உணவு நேரம் தவிர, அவர்கள் மூவரையும் கண்ணிலேயே காணமுடியாமல் போயிற்று!

நளினியால், இவர்களோடு கலந்து கொள்ள முடியாது போயிற்று! என்னவோ, அவர்கள் மூவரும் விளையாட்டுச் சிறார்கள் போலவும், தான் ரொம்பவும் பெரியவள் போலவும் உணர்ந்தாள். எனவே, அந்த வீட்டில் ஏற்கனவே பழகிய ஆளாகச் சரளாவுக்கு உதவுவதும், அவ்வப்போது, தாயின் அருகே சென்று அமர்வதும், பெரியவர்கள் பழைய கதை பேசும் போது தோட்டத்தில் சுற்றுவதுமாக, நேரம் போக்கினாள்.

ஐஸ்வர்யா, வழக்கம்போல, வருவதும் போவதுமாக இருந்தாள்.

நளினியுடைய தாய் வேலைக்குப் போகிறவள் என்று அறிந்திருந்ததால், கூலிக்கு மாரடிக்கும் கூட்டத்தைச் சேர்ந்த ஓர் அன்றாடம் காய்ச்சியை எதிர்பார்த்திருந்தவளை, மனோகரியின் அமர்ந்த தோற்றம், சற்றே மிரள வைத்தது எனவே கொஞ்சம் விலகியிருந்து வேவு பார்த்தாள்!

வெளி வராண்டாவில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது ஒருநாள், "கிட்டதட்ட உறவே இல்லாமல் வளர்ந்து விட்டார்கள், பெரியண்ணா! அப்பா வழித்தாத்தாவைக் கொஞ்ச நாள் தெரியும். அவ்வளவுதான். நம் பக்க உறவுதான் அடியோடு விட்டுப் போய் விட்டதே!" என்று பிள்ளைகளைப் பற்றிச் சொல்லி, விழி நீரைச் சுண்டியெறிந்தாள் மனோகரி.

"பிரிந்ததுதான் ஒன்று சேர்ந்துவிட்டதே! பிறகு ஏன் கலங்குகிறாய், மனோ!" என்று, நாத்தனாரின் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்தாள், சரளா.

"அண்ணனை விடவும், நான் உங்களை அதிகம் நினைத்திருக்கிறேன், அண்ணி! கூடப் பிறந்தவள் போல, ஒரு நல்ல அண்ணி கிடைத்திருப்பதால், இந்த உறவு, பிரியவே பிரியாது என்று நினைத்திருந்தேன்! ஆனால், இருபது ஆண்டுகளுக்கும் மேலாக, இருக்கிறோமா, இல்லையா என்பது கூடத் தெரியாத அளவுக்குத் தொடர்பே விட்டுப் போயிற்று! இன்னும் எதிர்காலம், நமக்கு என்னவெல்லாம் வைத்திருக்கிறது என்று யாருக்குத் தெரியும்?" என்று, மனோகரி வேதாந்தம் பேசினாள்!

"ஒன்று சேர்ந்துவிட்ட இந்த அன்பு, இனி அப்படிப் பிரியக் கூடாது, பிரிய விடக்கூடாது என்பதற்காக, நானும், உன் அண்ணியும், ஓர் அருமையான திட்டம் தீட்டியிருக்கிறோம்!" என்று, மர்மக்கதை சொல்வது போல, சுந்தரவதனம் தொடங்கினார்!



"என்ன அண்ணா?" என்று ஆவலோடு கேட்டாள் அவருடைய தங்கை.

"நம் நளினியை எங்கள் மூத்த மருமகளாக்கிக் கொள்வது தான் அது!" என்றுரைத்து இந்தப் பேச்சு காதில் விழும் தூரத்தில், ஏதோ செய்து கொண்டிருந்த இளைய தலை முறையினர் இருவரையும் அதிர வைத்தார், சுந்தரவதனம்!

பூஜாடியில் அடுக்குவதற்காகத் தோட்டத்திலிருந்து பூக்களை பறித்துக் கொண்டு வந்த நளினி, கையிலிருந்த பூவைத் தவற விட்டுப் பிடித்தாள்!

தோட்டக்காரனிடம் சில இடங்களை சுத்தம் செய்யச் சொல்லி விட்டு, வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த சுரேந்திரனும், பக்கவாட்டிலிருந்து வராண்டாப் படியேறும் தருணத்தில், இந்தப் பேச்சு காதில் விழ, 'பிரேக்' போட்டது போல நின்றான்.

சுரேந்திரனுக்கும் அவளுக்குமா? ஆனால், ஐஸ்வர்யா? இதற்குச் சுரேந்திரன் சம்மதிப்பானா? அல்லது, ஐஸ்வர்யா பற்றிய பேச்சு, அப்படி ஒன்றும் முடிவானது அல்லவோ? யோசனையோடு, அவனை ஆராய்ந்தாள் நளினி!

மகேந்திரனைத்தானே, நளினி விரும்புவது? அப்படியிருக்க, இதை, அவள் எப்படி ஏற்பாள்? அல்லது, முன்பு நினைத்தது தவறாக இருக்குமா?" அவளைப் போலவே, அதே ஆராய்ச்சிக் கண்ணால், அவளைப் பார்த்தான், சுரேந்திரன்.

விடை கிடைக்காத சோர்வுடன், இருவரும் அவரவர் வேலையைப் பார்க்கப் போனார்கள்!

பக்கத்து அறையில் இருந்து, இவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த, ஐஸ்வர்யா, இந்தப் பார்வை நாடகத்தையும் பார்த்து நெஞ்சு கனன்றாள்.



# 8

கைக்குச் சிக்காமல், சுரேந்திரன் வழுவி விடுவானோ என்ற பயம், கொஞ்ச நாட்களாகவே, ஐஸ்வர்யாவுக்கு, மிகவும் அதிகமாகி இருந்தது! அது இப்போது நிஜமாகி விட்டது!

ஊசிக் காதுக்குள் ஒட்டகத்தை நுழைக்கிற மாதிரி, ஒரு சின்ன பணியாரத்தைச் சாக்கு வைத்துக் கொண்டு, உள்ளே வந்த நளினி, இப்போது, குடும்பத்தையே கூட்டி வந்து, சம்பந்தம் வேறு, பேசத் தொடங்கி விட்டாளே!

அவளை மட்டும் கழுத்தை நெறித்துக் கொல்ல முடியுமானால்.. சிங்கம் புலிகள், மான் மாடுகளைக் கழுத்தைக் கடித்துக் கொல்லுமே, அது போல, அவளையும் சாகடிக்க முடியுமானால்...

அப்படிக் கொல்வதற்கு,இது பழைய கற்காலமாக இல்லையே என்று, சற்று நேரம் வருத்தப்பட்டாள் ஐஸ்வர்யா.

இன்று வந்தவள்! அதற்குள் பெற்றோரும் உடன் வந்து, திருமணம் பேசத் தொடங்கி ஆயிற்று!

தாயிடம் சொல்லித் தந்தையிடமும் காதில் போட்டாயிற்று!

ஆனால், என்னிடம் உள்ள மரியாதையில் பழகுகிறார்கள்! மற்றபடி, அவர்களுக்கு அந்த எண்ணமே இருப்பதாகத் தெரியவில்லையே! நாமாகப் போனால், நன்றாயிராது! அவர்களின் சமூகப் பழக்கங்களும், ரொம்ப வித்தியாசம்.... இப்படி, அப்படி என்று, ஜவ்வு இழுத்துக் கொண்டிருக்கிறார், அவளுடைய தகப்பனார்!



இத்தனைக்கும், ஒரே மகள்!

அவள் ஆசைப்படுகிறாளே என்றாவது, தோன்ற வேண்டாம்?

அடுத்து, அந்த சுந்தரவதனம்?

எப்போது பார்த்தாலும், இந்தப் பெண் இங்கேயே பழி கிடக்கிறாளே, இவள் மனதில் என்ன இருக்கிறதோ என்று யோசிக்க வேண்டாம்?

பண்ணை முதலாளிகள் சங்கத் தலைவருடைய மகள் என்று அறிமுகப்படுத்துகிறானே, வருங்கால மருமகள் என்று சொல்வதற்கென்ன? பத்து சென்டிமீட்டர் உயரம் குறைந்தா போய்விடுவான்?

அம்பலவாணர் மரியாதைக்குரிவராம்! வாய் கிழியச் சொல்லுகிறானே! அவர் மகளுக்கு மட்டும், மரியாதையைத் தரவேண்டாமா? மருமகளாக்கி மரியாதை கொடுக்கத் தெரியவில்லையே! அதில்லாமல், வீட்டில் மட்டும் சுற்ற விடுகிறான்!

அவன் வீட்டு நாய் மோனி என்று நினைத்தானா? அதை, வீட்டுக்கு வெளியே சுற்ற விடுகிறான். இவளை, உள்ளே! அவ்வளவுதான் வேறுபாடா? இவனையெல்லாம், கண்ணைப் பிடுங்க வேண்டும்!

அவன் மனைவி சரளா? 'என்னை உன் மருமகளாக்கிக் கொள்,' என்று அவளிடம்ம ஐஸ்வர்யா நேரடியாகக் கேட்க வில்லை! அவ்வளவுதானே! மற்றபடி, ஜாடை மாடையாக, எத்தனை முறை அதை உணர்த்த முயன்றிருப்பாள்? இவளை யெல்லாம், புழுக்கும் அறைக்குள், ஏலக்காய்க்குப் பதிலாக வைத்து அதிகச் சூடேற்றிப் பொசுக்க வேண்டும்!

யாரைக் கடித்துக் குதறுவது என்றில்லாமல் உள்ளம் கொதித்த படி, வெகு நேரம், ஐஸ்வர்யா அப்படியே உறைந்துபோய் நின்று கொண்டிருந்தாள்.

அதன் பிறகுதான், இது அடுத்தவர் வீடு என்பதே, அவளுக்கு நினைவு வந்தது!

நல்லவேளை, இவ்வளவு நேரம் யாரும், அவள் முகத்தைப் பார்த்து விடவில்லை! பார்த்திருந்தால், நன்றாக இருந்திராது என்று எண்ணும் போதே, இப்போதெல்லாம், அந்த வீட்டில், யாரும் அவளை ஒரு பொருட்டாய் மதித்து நடப்பதே இல்லை என்பது, நினைவு வந்தது. "வந்தாயா, வா! போகிறாயா, போ!" அவ்வளவுதான்!

'வா வா' என்று வருந்தி அழைப்பதும் இல்லை! 'இப்போதே போகாதே, இன்னும் சற்று நேரம் இரு' என்று வேண்டுவதும் இல்லை!

எல்லாம் அந்த நாய் நளினியால் வந்தது! அவளைக் கல்லால் அடித்துக் கொல்ல வேண்டும்! இல்லை! பெரிய குடும்பத்துப் பெண்கள் காரியம் சாதிக்கும் முறை அது அல்லவே!

யோசிக்க வேண்டும்! எதையும் யோசித்துச் செய்ய வேண்டும்! ஆனால், ஏதாவது செய்தே ஆகவேண்டும்! ஆனால், எப்படியும் இந்தக் கல்யாணத்தை நடத்த விடவே கூடாது! அதை மட்டும் அவளால் தாங்கவே முடியாது!

வீட்டிற்குச் சென்று தனியே உட்கார்ந்து, ஐஸ்வர்யா வெகு நேரம் யோசித்தாள்!

பொறி தட்டினாற் போல, சுரேந்திரனும், நளினியும், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட பார்வை, அவளுக்கு நினைவு வந்தது! ஆராய்ச்சிப் பார்வை! தெளிவற்ற நிலை! அதாவது, அவர்களிடையே இருப்பது குழம்பிய குட்டை! இதில் மீன் பிடிப்பது எளிது!

மீனைப் பிடித்துவிட்டால் என்ன செய்ய வேண்டும் என்று, அவளுக்கு நன்றாகவே தெரியும்!



செய்து விட்டால், என்னதான் நீதி, நேர்மை என்றாலும், ஒரே மகளான அவளை, அவளுடைய தந்தை விட்டுக் கொடுத்துவிட மாட்டார்!

அங்கே குட்டை தெளிய இடம் கொடுத்துவிடக் கூடாது என்று எண்ணியவளாய், அவசரமாகக் 'காம்யக'த்துக்கு மீண்டும் ஓடினாள் ஐஸ்வர்யா!

அங்கே, நளினியைத் தேடிச் சென்று, அவளோடு அட்டையாக ஒட்டிக் கொண்டாள்!

"இந்த வீட்டு மருமகள் ஆகப் போகிறாயாமே...! வாழ்த்துக்கள்!" என்று, பற்கள் அத்தனையையும் காட்டினாள்.

பதிலுக்கு முறுவலிக்கு முன், நளினியின் தயக்கத்தை, உள்ளே குறித்துக் கொண்டாள்.

"நாம் இருவரும், இங்கே சேர்ந்து வாழப் போகிறவர்கள்! அதனால், அன்போடு பழகலாம். என்ன?" என்று குழைந்தாள்.

நளினி வெளிப்படையாகவே திகைத்தாள்!

ஐஸ்வர்யாவை 'அண்ணியாகப் போகிறவள்' என்று, மகேந்திரன் ஒரு தரம் சொன்னதுண்டு. இப்போது, சுந்தரவதனம் வேறுமாதிரிப்பேசி, வெற்றிலை பாக்கே மாற்றப் போவதாக ஏற்பாடு நடந்து கொண்டு இருக்கிறது! இந்த நேரத்தில் இவள் இப்படிக் கூறுகிறாளே!

இது ஒன்றும் இரு தாரம் கட்டுகிற காலம் அல்லவே! அத்தோடு, அது போன்ற பங்கு போடல்கள் எல்லாம், அவளாலும் ஒரு போதும் முடியாதே!

சற்றுத் திணறிவிட்டு, "நீ நீங்கள் சொல்வது, எனக்குப் புரியவில்லை .... அன்போடு பழகுவது பற்றிச் சொல்லவில்லை! ஆனால், சேர்ந்து வா வாழ்வது என்றால்..." என்று நிறுத்தினாள்.

கலகலவென்று சிரித்தாள் ஐஸ்வர்யா. என்ன சுரேந்திரனைப் பங்கு போட வந்து விடுவேனோ, என்று பயந்துவிட்டாயா? சேச்சே! அந்த மாதிரிப் பாகப் பிரிவினைகள் எல்லாம் எனக்குப் பிடிக்காது! அங்கிள்தான் என் அப்பாவிடம், 'ஐஸ்வர்யா என் வீட்டுப் பெண்' என்று ஏதோ சொல்லுவாராம் அது எந்தப் பையனுக்காக என்று எனக்குத் தெரியாது! அப்படி ஏதும் இல்லாவிட்டாலும், அதுபற்றி, எனக்கு ஒன்றும் பிரச்சினை கிடையாது! நா..ன் சொன்னது... என் அப்பாவுக்கு நான் ஒரே பெண். அவருடைய வாரிசாக இந்த மலைப் பகுதியிலேயேதான் இருந்தாக வேண்டும்! நீ இந்த வீட்டு மருமகள் என்றால், நீயும் இங்கேதான் இருப்பாயா? அதைத்தான் சொன்னேன்!'' என்று அவள் கூறவும், நளினிக்குப் பாதிக் கவலை தீர்ந்தது போல இருந்தது!

இவள் ஒன்றும் தவறாகப் பேசவில்லை!

ஐஸ்வர்யா, அதற்கு மேலும் போனாள்.

"நீ வந்த புதிதில் நான் நடந்து விதத்தை நினைத்து எனக்கு அவமானமாக இருக்கிறது நளினி! எங்கள் வீட்டிலும் சரி, இங்கேயும் சரி, நான் ஒரே பெண்ணாகச் செல்லமாக இருந்து விட்டேனா? உன்னை... இன்னொரு பெண்ணைக் கண்டதும், போட்டிக்காரிபோலத் தோன்றி விட்டது! அதனால் தான்...வந்து... அதையெல்லாம், மன்னித்து மறந்துவிடுகிறாயா? கல்லூரிகளில் 'ராகிங்' பண்ணுவார்களே, அதுபோல மறந்து விடுகிறாயப்பா?'' என்று அவள் வெகு பவ்வியமாகக் கேட்கவும், நளினி தன்னை மறந்து, தலையாட்டி விட்டாள்.

'சிறுத்தை தன் புள்ளிகளை ஒருபோதும் மாற்றிக் கொள்வது இல்லை' என்ற பழமொழி, ஏனோ, அவளுக்கு அப்போது சற்றும் நினைவு வரவே இல்லை! அது நினைவு வந்தபோதோ காலம் வெகுவாகக் கடந்து விட்டிருந்தது!



ஆனால் அப்படி ஏதும் யோசிக்கக்கூட விடாமல் ஐஸ்வர்யா என்னென்னவோ பேசிக்கொண்டே இருந்தாள்.

"எங்களிடம் ஏலக்காய் பதம் பண்ணுகிற இடம் இருக்கிறது! பார்க்கிறாயா? என்றவள், "ஆன்ட்டி, நளினியைக் கொஞ்சம் வெளியே கூட்டிப் போய் வருகிறேன், ஏலக்காயைத் தரம் பிரித்து சூடு அறைக்குள் புழுக்கி, பதப்படுத்துவதைக் காட்டி வருகிறேன்'' என்று சரளாவிடம் சொல்லிவிட்டுக்கூட அழைத்துப் போனாள்.

"ஏலக்காயைப் பறித்து, வெறுமனே, காயப் போட்டு, சைஸ் வாரியாகப் பிரித்து விற்கிறார்கள், என்று நினைத்தேனே! நீங்களானால், வேக வைப்பதாகச் சொல்லுகிறீர்களே!'' என்று நளினி அதிசயப்பட்டாள்.

"வேக என்று வைப்பதில்லை! ஆனால் அறையின் வெப்ப நிலையை மெல்ல உயர்த்துவார்கள். அதன்பிறகு ஏலக்காய், அப்படியே இருக்கும்! இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் படித்துக் கொள்! அப்படியானால்தான் இங்கே சமாளிக்க முடியும்!'' என்று ஐஸ்வர்யா விளக்கவும், அவளைப் பற்றிய முதல் அபிப்பிராயம் நளினிக்குக் கிட்டத்தட்ட மாறிவிட்டது!

முன்நாளின் நிழலாய், ஒரு சின்ன ஒதுக்கம் மட்டும்!

அத்தோடு ஒருவர் நன்றாகப் பழகும்போது நாமாக முகம் திருப்புவானேன், சரளாவுக்கும், இந்த சுமூகமான சூழ்நிலை நிம்மதி தந்தது.

"அவள் தந்தை, இந்தப் பக்கம் பெரிய மனிதர்! நல்லவரும் கூட. அரசியல் செல்வாக்கும் உண்டு! ஆனால், உன்னிடம் ஒரு மாதிரி நடக்கவும், எனக்குப் பிடிக்காமல் போய் விட்டது! முகத்தில் அடித்தாற்போலப் பேச வேண்டியதாகி விடுமோ, என்று கொஞ்சம் கவலைதான்! நல்ல வேளை! எப்படியோ,

இப்போது நல்லவிதமாக மாறித் தெரிகிறாள். இப்படியே இருக்கட்டும்! ஏனென்றால் இங்கே இருந்து கொண்டு அந்த வீட்டைப் பகைத்துக் கொள்வது நல்லதல்ல!'' என்றாள் நளினியிடம்.

நல்லவேளை, மாறினாள் என்று நளினியும் நினைத்துக கொண்டாள்.

ஆனால் இதையெல்லாம் பின்னுக்குத் தள்ளும்படியாக அவளது திருமண விவகாரம் இருந்தது. இருவரின் பெற்றோருமாக முறைப்படி வெற்றிலை, பாக்கு மாற்றும் நாள்வரை குறித்துவிட்டார்கள்.

மனோகரியும், பராசரனும் முயன்று லீவை, மேலும் நாலு நாட்கள் நீட்டித்தார்கள்! மகளின் திருமண விஷயம் என்பதால் மட்டுமே, இந்த நீட்டிப்பு கிடைத்ததாகச் சொன்னார்கள்.

இருதினங்களில் நிச்சயதார்த்தம் என்று முடிவு செய்தபின், அன்று மாலையில் சுரேந்திரன் நளினியிடம் பேசினான்.

முன்பானால் எதிர்எதிர் அறையில் இருந்தார்கள். வீட்டினரின் எண்ணிக்கையும் குறைவு.

எனவே நினைத்த நேரம் பேசும் வசதி இருந்தது! மனதில் எந்த விதக் குழப்பமும் இல்லாமலும் இருந்ததால், தயக்கமற்று, இருவராலும் பேசவும் முடிந்தது!

இப்போது, பல்வேறு காரணங்களால் இருவருமே பேசத் தயங்கினர். இந்த மாதிரி விஷயம் என்று பரவிவிட்டதால் எல்லோர் கண்ணும் தங்கள் மீதே இருப்பது போல இருவருக்குமே ஒரு பிரமை. வேலையாட்கள், வெகுசுவார சியமாக அவர்களை உற்று கவனித்தனர். தம்பி, தங்கையர் இஷ்டம்போல் சுற்றிக் கொண்டிருந்தனர்.

பெரும்பான்மை நேரம் ஐஸ்வர்யாவும், நளினியுடைய மெய்க் காப்பாளனி போல அங்கேயே இருந்தாள்.



இதற்கு நடுவிலும் முயன்றால் இருவரும் பேசியிருக்க முடியும்தான். ஆனால் பேசவில்லை. ஓரிரு முறை சுரேந்திரன் அவளை நெருங்கி வந்ததுபோலத் தோன்றினாலும் நளினி அதைக் கண்டுகொள்ளாததுபோல அகன்று போய் விடுவாள்.

அவளுக்கு ஒரு பயம்! ஒரு வேளை, சுரேந்திரன் அவளை மணக்க முடியாது என்று அவளிடம் சொல்லி விடுவானோ?

இந்தப் பயம் தோன்றும் போதுதான், சுரேந்திரனை தான் எவ்வளவு நேசிக்கிறோம் என்பது அவளுக்கு வெகு தெளிவாகத் தெரியும்! இந்தப் பயத்தினாலேயே அவள் விலகி விலகி, ஓடிக் கொண்டிருந்தாள்!

இரண்டு நாட்களில் நிச்சயம், சுரேந்திரனுடைய சித்தப் பாக்களையும் பராசரனுடைய ஊரில் வரக்கூடியவர் களையும் அழைப்பதற்காக மனோகரியும், பராசரனும் மறுநாள் கிளம்பு கிறார்கள் என்று ஆனபின், அன்றிரவு உணவு முடிந்து, நளினி கைக்கழுவி கொண்டிருந்த போது, திடுமென அவள் அருகே தோன்றி ''கை கழுவியதும் வராண்டாவுக்கு வா, உன்னிடம் பேச வேண்டும்'' என்று சொல்லிவிட்டு, வந்த மாதிரியே சுரேந்திரன் காணாமல் போனான்!

வேறு வழியின்றிப் பலியாடு மாதிரி, முன்புறம் சென்றாள் அவள்.

அவளைக் கண்டதும் தோட்டத்திலிருந்து வேகமாக வந்து, ''பார், நளினி, இந்தக் கல்யாணத்துக்கு உன்னிடம் சம்மதம் கேட்டார்களா, என்றே எனக்குத் தெரியவில்லை! எல்லோரும், சொல்லுகிறார்கள் என்று, நீ, இதற்குத் தலையாட்டியிருக்கக் கூடும்! இப்போது, ஒரேடியாகத்தாமதம் ஆகிவிடவில்லை உனக்கு.. உனக்குப் பிடிக்காவிட்டால் சொல்லிவிடு'' என்று உருப்போட்டவன் போல வேகமாக ஒப்பித்து முடித்தான்.

அவளது சம்மதத்தைத்தானே பெரிதாகப் பேசுகிறான் என்று, ஒரு கணம் நளினியின் மனம் துள்ளத்தான் செய்தது! ஆனால், உடனேயே 'உனக்கு பிடிக்காவிட்டால் சொல்லிவிடு' என்றானே, அதற்கு என்ன அர்த்தம்?




நளினி திகைத்து நோக்கவும், அவள் பேசுவாளோ என்று, சில வினாடிகள் உதட்டைக் கடித்துக் கொண்டு காத்திருந்தவன், அவள் சும்மாவே நிற்கவும், "சும்மாசொல்லிவிடு, நளினி, பிடிக்கவில்லை என்றால், தைரியமாகச் சொல்லி விடு..!" என்று, அவளை ஊக்கினான்.

நளினி பேசாமலே நிற்கவும்," யார் மனம் நோகுமோ என்று யோசித்துக் கொண்டு இருக்க வேண்டாம்! பிடிக்காவிட்டால், சும்மா துணிந்து சொல்லி விடு!" என்று மீண்டும் சுரேந்திரன் செல்லிக் கொண்டிருக்கும்போது, "இந்த வாசல் வராண்டாவில் உட்காருவது, எப்போதுமே சுகமாக இருக்கும்.! ஒரு ஷாலைச் சுற்றிக்கொண்டு உட்கார்ந்தால்..." என்று சுந்தரவதனத்தின் குரல் நெருங்கி வரவும் மீண்டும் சுரேந்திரன் அந்தர்த்தானம் ஆகிப் போனான்..!

நளினியைப் பார்த்ததும், "அடேடே! நீ ஏற்கனவே, இங்கே வந்துவிட்டாயாம்மா? மருமகள் ஆகப்போகிறவள் இல்லையா? இந்த வீட்டு சுகங்கள் அதற்குள் தெரியத் தொடங்கிவிட்டன! உட்காரம்மா..!" என்றார் சுந்தரவதனம்..!

"இல்லை, மாமா! இந்தக் காற்று சுகத்தில், அதற்குள் எனக்குத் தூக்கம் வந்துவிட்டது..! நான் தூங்கப் போகிறேன்..! என்று,



உள்ளே சென்றவள், நேரே அறைக்குள்ளும் சென்று, இழுத்து மூடிக்கொண்டு, படுத்துவிட்டாள்!

ஆனால், மனம்தான் உளைந்தது.!

'பிடிக்காவிட்டால் சொல்லிவிடு, பிடிக்காவிட்டால் சொல்லிவிடு' என்று திரும்பத் திரும்பச் சொன்னானே..! பிடிக்கவில்லை என்று சொல்லும்படி, அவளிடம் சொல்லாமல் சொல்லுகிறானா?

அவளால் எப்படி?, அப்படிச் சொல்ல முடியும்?
"கடவுளே.! இந்தக் கல்யாணத்தை எப்படியாவது நடத்திக் கொடுத்து விடுப்பா.. இல்லாவிட்டால், என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாதே.. எப்படியாவது நடத்திக்கொடு.." என்று மீண்டும், மீண்டும் வேண்டியவாறே தூங்கிப் போனாள் அவள்!

மறுநாள் காலை உணவின்பின், நளினியுடைய பெற்றோர் கிளம்பி போனார்கள். சித்ராவும் பூபாலும், சொந்த ஊர் பார்க்கவென்று, பெற்றோருடன் சென்றார்கள்.

அவர்கள் கிளம்பும்போதே, ஐஸ்வர்யா வந்துவிட்டாள்.

நல்லவேளையாக வந்தாள் என்று, நளினி நினைத்தாள், ஏனெனில், அவள் கூட இருக்கும்போது, சுரேந்திரன் அருகில் வந்து ,சொந்த விஷயங்கள் எதுவும் பேச மாட்டான்!

ஐஸ்வர்யா மேல் வைத்த ஆசையினால், இன்றைய நிலையில், அருகில் வரத் தயக்கமோ, என்று ஓர் எண்ணம் தோன்றி ஒரு கணம் தோன்றி, அவளை வருத்தியது. ஆனாலும்,அவனுக்கு ஐஸ்வர்யாவிடம் உண்மையான காதல் இருந்தால், அவன் இதையெல்லாம் பார்த்துக்கொண்டு, சும்மா இருக்க மாட்டான். என்று, தன் மனதைச் சமாதானமும் செய்து கொண்டாள்.

நளினியுடைய பெற்றோர் செல்லும் வரை, காத்திருந்து விட்டு, சுரேந்திரன் சற்று நேரம் குறுக்கும் நெடுக்கும் அலைந்து

பார்த்தான். ஐஸ்வர்யாவின் விருப்பப்படி தோட்டத்தில் சேர்ந்து உலவிக் கொண்டிருந்த போது, அங்கேகூட வந்தான்.

நெஞ்சு படபடக்க நளினி பார்த்தபோது, "உங்கள் நளினியோடு, அப்புறமாய் ஆசை தீரப்பேசுங்கள். இப்போது, என் தோழிக்கும் எனக்கும் இடையே வராதீர்கள்!" என்று ஐஸ்வர்யா சொல்லிவிட, வேறு வழியின்றி அவன் தன் வேலையைப் பார்க்கப் போனான்.

நளினியும் சற்றே நிம்மதியாக மூச்சு விட்டாள். ஆனால், திருமணம் முடியும் வரை, நிச்சயமற்ற இந்த படபடப்புதான், அவளது தலைவிதி போலும்!

நிச்சயதார்த்தத்துக்கான மேளம் போன்ற சில ஏற்பாடுகளுக்காகச் சின்ன மகன் மகேந்திரன் சென்றான்.

ஐஸ்வர்யா, அன்று நளினியைத் தன் வீட்டுக்கு அழைத்தாள்.

நளினி முதலில் சற்றுத் தயங்கிய போதும், அவளுடைய தந்தையைப் பற்றி, சரளா கூறியது நினைவு வர, சரியென்றாள்.

"அத்தையிடம் சொல்லிவிட்டுப் போகலாம்," என்று அவள் சொன்னபோது, ஐஸ்வர்யா, அந்தப் பக்கம் சென்று கொண்டிருந்த ஒரு வேலையாளை , அழைத்து, "நாங்கள் இருவரும் வெளியே போகிறோம். சீக்கிரம் திரும்பி வந்து விடுவோம் என்று ஆன்ட்டியிடம் சொல்லிவிடு," என்று பணித்தாள்

பிரியமாகப் பற்றியிருந்த கையை விடாமலே, நளினியை வெளியே அழைத்துச் சென்று, அவளது காரில் ஏற்றிக் கூட்டிப் போனாள்.

பெரியபெரிய கண்ணாடி ஜன்னல்களுடன், ஒரு சிறு அரண்மனை மாதிரி வீடு இருந்தது! பழைய காலத்தில் வெள்ளையர் யாரோ கட்டியது என்று, ஐஸ்வர்யா சொன்னாள்.

ஆனால், ஐஸ்வர்யாவின் வீடு பெரியதாக இருந்தாலும் காலியாகத் தோன்றியது.



அதை, நளினி குறிப்பிட்டபோது சற்றுத் தயங்கிவிட்டு, "அம்மா இங்கே இல்லாததால், நிறையப் பேர், விடுமுறையில் போய்விட்டார்கள்!" என்றாள் அவள்.

"சற்று இரு!" என்று உள்ளே போய், ஒரு சாவிக்கொத்தை எடுத்து வந்தாள்.

"எங்கள் வீட்டின் பெரிய விந்தையை காட்டுகிறேன் வா!" என்று நளினியை அழைத்துப் போனாள்.

"இதுபோல, நீ.பார்த்தே இருக்க மாட்டாய்! 'வைன் செல்லர்' என்று படித்திருக்கிறாயா? பாதாள அறையில், மதுபான பாட்டில்களை அடுக்கி வைத்திருப்பார்கள் ஆண்டுகள் அதிகம் ஆகஆக, அவைகளுக்கு அதிக மதிப்பு! நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது கூட, அப்பா இன்னமும் வைத்திருக்கிறார்.ஒரு பாட்டில் ஐம்பது ஆயிரம் கொடுத்து வாங்குகிறார்கள்!" என்று, அவள் சொல்லச் செல்ல, நளினிக்கு ஆச்சர்யமாக இருந்தது!

"உன் அப்பா மதுபானம் தயாரிக்கிறாரா? இங்கேயா?" என்று வியப்புடன் கேட்டாள்.

"முட்டாள்!" என்றாள் ஐஸ்வர்யா! "அந்த மாதிரி திராட்சை இங்கே ஏதடீ? வெளி நாட்டிலிருந்து, மது பாட்டில்களை வாங்கியவை முன்பிருந்தே இருப்பதை, அப்பா விற்றுக் காசாக்குகிறார்!

'ஓ?'

அவள் குரலில், ஏதோ நளினியை உறுத்த, "சீக்கிரம் போக வேண்டும், ஐஸ்வர்யா" என்றாள்.

உடனேயே மாறி, "இதோ! 'செல்லரை' உள்ளே போய்ப் பார்த்துவிட்டு, உடனே போய்விடுவோம்!" என்று குழைவுடன் கூறி, ஓர் அறையைத் திறந்து உள்ளே சென்றாள் ஐஸ்வர்யா அங்கே தரையோடு பதித்திருந்த சதுரக் கதவொன்றின் பூட்டைத் திறந்து, கதவை தூக்கி நிறுத்தினாள்.

உள்ளே தரையின் கீழ் சென்ற படிக்கட்டில் இறங்கிச் சென்றால், வெளிநாட்டுப் படங்களில் வருகிற மாதிரி அங்கங்கே பாட்டில்கள் அடுக்கியிருந்தன.

பாட்டில்கள் குறைவான எண்ணிக்கையிலேயே இருந்தன. "மூளையில்லாமல் கேட்கிறாயே! விற்க விற்கக் குறையத்தானே செய்யும்!" என்றாள் அவற்றின் உரிமைக்காரி.

என்னவோ சரியில்லாதது போல, ஒரு சில்லிப்பை நெஞ்சுக்குள் உணர்ந்து, "போவோமா?" என்று திரும்பினாள் நளினி!

சட்டென, அவள் கையைப் பற்றி நிறுத்தி, "அதற்குள் போக வேண்டும் என்றால் எப்படி? அதோ, அந்தக் கடைசியில் உள்ள பாட்டில்களை எடுத்து விட்டு வா! அப்புறம் போகலாம்!

எல்லாவற்றிலும் தயாரிப்பு தேதி இருக்கும். சில பாட்டில்கள் இருநூறு ஆண்டுகளுக்கும் முந்தித் தயாரித்ததாக்கும்! போ! பார்த்துவிட்டுவா. உடனே போய்விடலாம்!" என்று, சற்று வற்புறுத்தலான குரலில் கூறினாள் மற்றவள்.

மதுவை வைத்திருப்பதில் பெருமை வேறா, என்று எரிச்சல் உண்டான போதும், போய்ப் பார்க்காவிட்டால் விடமாட்டாள், போலிருக்கிறதே, பார்த்துத் தொலைத்து விட்டுச் சீக்கிரமாக இந்த இடத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்று எண்ணியவாறே, அறையின் மறு கோடிக்குச் சென்று, அங்கிருந்த பாட்டில் ஒன்றை கையில் எடுத்துப் பார்த்தாள்.

இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று லேபிளில் பார்த்தபோது, அவளுக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது!

அன்று அதைத் தயாரித்திருக்கக் கூடிய விதம் தன்னையறியாமல் மனத்திரையில் ஓட, சிறு முறுவலுடன்,



"உங்கள் வீட்டு விந்தையை நன்றாகவே பார்த்துவிட்டேன்! இனிப் போகலாமா?" என்று விளையாட்டாகக் கேட்டபடியே பாட்டிலைக் கவனத்துடன் பழைய இடத்தில் வைத்தாள் நளினி.

"முடியாதே!" என்ற குரல், சற்றுத் தூரத்தில் இருந்து வர,திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தால், மறு கோடியில் இருந்த படிக்கட்டில் ஐஸ்வர்யா பாதி ஏறிக் கொண்டிருந்தாள்!

திடுக்குற்று, "என்ன ஐஸ்வர்யா?" என்று படிகளை நோக்கி விரைந்தாள் நளினி.

"என்னவா? இந்தப் பக்கம் ஏன் வந்தோம், சுரேனை ஏன் பார்த்தோம், என்று அழுதழுது நீ சாகும் வரை, இங்கிருந்து வெளியேற முடியாதுடி! சுரேனோடு கல்யாணமா கேட்கிறது, உனக்கு?" என்ற போது அவள் படியேறி முடித்திருந்தாள்!

"அப்படி ஒன்றும் செத்துவிட மாட்டோம் என்று நினைக்காதே! தெரியாமல் மாட்டிக் கொண்ட என் நாய் இங்கேயே செத்துப் போயிருக்கிறது! அதன் கதிதான் உனக்கும்! "செல்லர் சமாதி!" என்றபடி, மின்னலாய் விரைந்து வந்த நளினி பாதிப்படி ஏறிக்கொண்டிருக்கும்போதே, கனமான 'செல்லர்' கதவை, அறைந்து சாத்திப், பூட்டும் போட்டாள்.

நினைத்ததை நிறைவேற்றிய திருப்தியுடன் திரும்பிச் சென்றாள்!

திருமணம் நிச்சயமாக நின்றுவிடும்! கல்யாணப் பெண்தான், இங்கே செத்துக் கொண்டே இருக்கிறாளே!

தந்தை வந்து செல்லரைத் திறக்க வாய்ப்பு கூட இல்லை. மீதி இருப்பது மகளின் திருமணத்தின் போது, ஸ்பெஷல் விருந்துக்கு என்று சொல்லியிருக்கிறார்!

வேகமாகப் படியேறிக் கொண்டிருந்த நளினியின் தலை, மூடிக்கொண்டிருந்த அந்தக் கனமாக கதவில் பலமாக முட்டிக்

கொள்ள, தன்னுணர்வை இழந்து, மயங்கிக் கீழே சரிந்தாள் அவள்!

மதிய உணவுக்கு நளினியைத் தேடியபோதுதான், அவள் இன்னமும் வரவில்லை என்பது சரளாவுக்குத் தெரிந்தது.

ஐஸ்வர்யாவுடன் சென்றது நினைவு வர, அவள், வீட்டுக்கு போன் செய்து பார்த்தாள்.

"நளினியை, அப்போதே வீட்டு வாயிலில் இறக்கி விட்டு விட்டேனே!" என்றாள் அவள்.

நளினி வேறு, எங்கே சென்றிருக்க முடியும்?

மூத்த மகன் இரண்டு நாட்களாக, வருங்கால மனைவியின் தரிசனத்துக்காகச் சுற்றிக் கொண்டிருப்பது, அவள் கண்ணில் பட்டிருந்தது. இருவருமாக, எங்கேனும் தனியே பேசிக் கொண்டிருக்கக்கூடும் என்று எண்ணி விஷயத்தைப் பெரிது படுத்தாமல் கணவரின் சாப்பாட்டைக் கவனித்தாள்.

எடுத்து வைப்பது, பரிமாறுவது என்று, சரளாவின் வேலைகளில் உதவுவது நளினியின் வழக்கம்!

எனவே, சுந்தரவதனமே, நளினி பற்றிக் கேட்டபோதும், "இந்த வயது கடந்துதானே நாமும் வந்திருக்கிறோம்!" என்று சிரித்து மழுப்பிவிட்டாள்.

ஆனால், சுந்தரவதனம் ஓய்வெடுக்கப் போய்ச் சிறிது நேரத்தில், சுரேந்திரன் தனியாக வரவும், சரளா பயந்து போனாள்!

அவனும் ஒரு முறை, ஐஸ்வர்யாவிடம் பேசிப் பார்த்தான்.

சரளாவிடம் சொன்னதையே திரும்பப் படித்தாள் அவள். சிறு தயக்கத்துடன், "என்னவோ, எதுவும் பிடிக்காத மாதிரிப் பேசிக் கொண்டிருந்தாள்! அப்போது நான் அதைப் பெரிதும் நினைக்க வில்லை! ஒரு வேளை, திருமணம் பிடிக்க வில்லையோ?" என்று சின்னக் குரலில் வருத்தமாகக் கேட்டாள்.



இடிந்து போய் அமர்ந்த சுரேந்தரிடம், "என்ன? என்னடா, என்ன?" என்று சரளா பதறிக் கொண்டிருந்தபோது, விசிலடித்துக் கொண்டு மகேந்திரன் வந்தான்.

வீட்டில் கண்ட காட்சி அவனையும் திகைக்க வைத்தது!

அவனிடம் விவரம் சொல்லிவிட்டு, "நளினியைத் தேட ஏற்பாடு செய்ய வேண்டுமே! பூச்சி பொட்டு கடித்திருக்குமோ? வீட்டில் விட்டேன் என்கிறாளே! பின் பக்கத் தோட்டத்தில் பார்க்கச் சொல்லுகிறேன்." என்று சென்றாள் சரளா.

மூத்தவன் முகத்தைப் பார்த்து விட்டு, "என்ன விஷயம்?" என்று கேட்டான் மகேந்திரன்.

கண்களை இறுக மூடித் திறந்து, "அவளுக்கு, இந்தத் திருமணம் பிடிக்கவில்லையடா! போய் விட்டாள்!" என்றான் வேதனையுடன்.

"உளறல்!" என்றான் சின்னவன் பட்டென்று.

"நிஜம்தானடா! நேற்று எத்தனை முறை கேட்டேன் தெரியுமா? பிடிக்கிறது என்று, அவள் சொல்லவே இல்லை! அவளுக்கு உள்..."

"ஷட் அப்!" என்று அதட்டினான், அடுத்தவன். "இந்த அசட்டுத்தனத்தை நீ விடவே இல்லையே? எங்களுக்கிடையே, அந்தமாதிரி உணர்வுகள் ஒற்றுமை கிடையாது! பூமாலும், நானும் நளினிக்கு ஒன்றுதான்! நீங்கள் இருவரும் எப்படி என்று, ஊருக்கெல்லாம் தெரிகிறது! நீ அறைக்குள் வந்தால், நளினி முகம் மலர்வதும், அவளை நீ பார்க்கும் பார்வையும்.. இது தெரியாமல், நம் பெரியவர்கள் இந்தத் திருமண ஏற்பாட்டைச் செய்வார்களா? அதிலும், மனோ அத்தை? மகள் மனம் இப்படித்தான் என்ற நிச்சயம் இல்லாமல், இதில் ஓர் எட்டு எடுத்து வைத்திருப்பார்களா? சென்னைக்குப் போன பிறகு, நளினி, டல்லாக இருந்ததையும், உன் பேரைச் சொன்னாலே முகம்

சிவந்து முறுவலித்ததையும் அன்று அத்தை சொல்லிச் சிரித்ததை, நீ கேட்டிருக்க வேண்டும்!.."

எழுந்து குறுக்கும் நெடுக்குமாக இருதரம் நடந்துவிட்டு, "பின்னே ஏன், எனக்குப் பதில் சொல்லவில்லை? திருமணம் பிடிக்கிறதா, என்று எத்தனை முறை கேட்டேன்! சம்மதம்போலத் தலையைக் கூட ஆட்டவில்லையே!" என்று இன்னமும் தவித்தான் பெரியவன்.

"அது ஏன் என்று, பிறகு நளினியிடம் நேரில் கேட்போம்! எனக்குத் தெரிந்தவரை, முதலில் இருந்தே அவளுக்கு, உன்னிடம்தான் ஓர் இது! உன்னிடம் உரிமை கொண்டாடுகிறாள் என்று, நளினிக்கு ஐஸ்வர்யாவைப் பிடிக்காது தெரியுமா? அதே போலத்தான் ஐஸ்வர்யாவுக்கும்... கடவுளே!"

"அவளோடுதானே, நளினி சென்றதாக, அம்மா சொன்னார்கள் அவள்! ஏதேனும் செய்து விட்டாளா? நளினி மேல் உள்ள பொறாமையில் மலையிலிருந்து உருட்டி, கிருட்டி விட்டிருப்பாளா?" என்று மகேந்திரன் பதறினான்.

"சே! அந்த மாதிரி அவள் உருட்டுவதற்கு வசதியாக அவளோடு மலையேறிச் செல்ல, நளினி முட்டாள் அல்ல! ஆனால்... ஒரு சந்தேகத்தில், நானும், ஐஸ்வர்யாவிடம் கேட்டேனடா ஆனால், அவள்..." என்று, ஐஸ்வர்யாவுடன் பேசிய விவரம் சொன்னான் பெரியவன். "இப்போது பார்த்தால் என்னைக் குழப்பி விட முயன்றது போலத் தெரிகிறதே!"

"பின்னே? நீ கேட்டு, அந்த ராட்சசி சொல்லுவாளா? நீ கேட்டாய் என்பதே, அவளுக்குக் கொதிப்பாக இருக்குமே! அந்தப் பிசாசுக்கு, உன்னிடம் பைத்தியம்!"

"சேச்சே! நளினியின் அழகைப் பார்த்து பொறாமையாக இருக்கும்! ச்சு! அது எப்படியோ தொலைகிறது! இப்போது, நளினி எப்படி, எங்கே இருக்கிறாளோ, தெரியவில்லையே!" என்று கலங்கினான் சுரேந்திரன்.



மகேந்திரனுக்கும் என்ன செய்வது என்று புரியவில்லை!

ஏனென்றால், தப்பு செய்துவிட்டு, அதை ஒத்துக்கொள்கிற ரகம் அல்ல ஐஸ்வர்யா!

"எதற்கும், ஐஸ்வர்யாவிடமே, இன்னொருதரம் கேட்டுப் பார்போமா? உன் வேலைதான் என்று தெரியும் என்று மிரட்டிப் பார்ப்போமா?"

அவனே நம்பிக்கை இல்லாமல்தான் கேட்டான். அதற்கேற்ப சுரேந்திரனும் மறுப்பாய்த் தலையசைத்தான்.

"இல்லைடா! இவ்வளவு பேசிவிட்டு, இனி நம்மிடம் ஒத்துக் கொள்ளமாட்டாள்... ஆனால்..." என்று, அவன் யோசனையோடு சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, சரளா கவலையுடன் வந்தாள்.

"தோட்டத்திலும் நளினியைக் காணோமேடா! இன்னும் அரை மணி நேரத்தில், அப்பா எழுந்து மருமகளைக் கேட்பார். இது தெரிந்தால் பதறிப் போவாரே! நாளைக்கு மனோ! எல்லாவற்றையும் விட, இவள் என்ன மாதிரி நிலைமையில் எங்கே இருக்கிறாளோ, தெரியவில்லையே! என் மருமகளை நான் மீண்டும் பார்ப்பேனா?"என்று கேட்கும்போதே, அவள் கண்களில் நீர் வழியத் தொடங்கிவிட்டது!

சொல்வதறியாமல் மகேந்திரன் திகைத்து நிற்க, சுரேந்திரன் தாயைத் தேற்றினான்.

"ஷ் என்னம்மா,இனி நளினிக்கு ஒன்றும் நேராது. நீங்கள் தைரியமாக இருங்கள்! எனக்குக் கிட்டத் தட்டத் தெரிந்துவிட்டது! நானும் மகியும் கொஞ்சம் வெளியே போகிறோம்! திரும்ப வரும்போது உங்கள் அருமை மருமகளுடன் வருகிறோம். கவலைப்படாதீர்கள்!" என்று சொல்லிவிட்டுத் தம்பியை அழைத்துக்கொண்டு சென்றான்.

"அம்மாவிடம் நன்றாகவே கதை விட்டாய்! இப்போது, நளினியை எங்கிருந்து கொண்டு வரப்போகிறாயாம்?" என்று கவலையும் கோபமுமாக, மகேந்திரன் கேட்டான்.

"வெறும் கதை அல்லம்மா! எனக்கே, ஒரு நம்பிக்கைத்தான். நம்மிடம் தானே, ஐஸ்வர்யா மறுப்பாள்? நாம் அவளுடைய தந்தை அம்பலவாணரிடம் போவோம். இந்த மாதிரி என்று விஷயத்தைச் சொல்லுவோம்! அவர் நல்லவர், நேர்மையானவர்! என்னிடம் பிரியம் உள்ளவரும்கூட! அவர் பார்த்துக்கொள்வார்! நம்மிடம் போலப் பெற்றவரிடம், அவளால் ஆட முடியலா தில்லையா? அவள்தான் என்றும் நிச்சயப்பட்டுவிட்டதால் எனக்கு நம்பிக்கை தான்" என்றான் சுரேந்திரன்.

கடைசியாக அவன் சொன்னதுதான் நடந்தது!

முதலில், அவரிடமும், "இல்லை, இல்லை!" என்று ஐஸ்வர்யா சொல்லித்தான் பார்த்தாள்.

ஆனால், வீட்டு வேலையாட்களை அகற்றியிருந்ததும், பெரிய சாவிக்கொத்தைக் கேட்டு வாங்கியிருந்ததும், அவளைக் காட்டிக் கொடுத்தன.

"நீயாகச் சொல்லுகிறாயா? அல்லது, போலீசுக்கு போக, இவர்களுக்கு அனுமதி கொடுக்கட்டுமா?" என்று கடுகடுவென்ற முகத்துடன் அம்பலவாணர் கேட்கவும், ஐஸ்வர்யா பணிந்து விட்டாள்.

புடைத்திருந்த முன்னந்தலை தவிர, வேறு பாதிப்பு இல்லாமல் நளினியை மீட்டுவிட்டார்கள்!

பயமுறுத்தி விரட்டப் பார்க்கிறாள், மெய்யாகவே சாக விட்டுவிட மாட்டாள் என்றுதான், நளினி நினைத்தது! அடுத்து அவள் கதவைத் திறக்கும் போது, நல்லத்தனமாகப் பேசி வெளியேறிவிட வேண்டும் என்று நினைத்துக் காத்திருக்கும்



போது, ஆண்கள் மூவருமாக வரவும், அவளுக்கு ஆச்சரியமாகிப் போயிற்று!

சுற்றுப்புறம் மறந்து, 'சுரேந்திரன் அவளை அணைத்தது' அவனைப் பற்றிய அவளது ஐயத்தைப் போக்கியது!

மகளுக்காக, அம்பலவாணர் மன்னிப்புக் கேட்டபிறகுதான், எப்படிப்பட்ட ஆபத்திலிருந்து தப்பியிருக்கிறாள் என்பதே, அவளுக்குப் புரிந்தது!

'ஐசுடைய' தாத்தா பாட்டி மிகவும் கண்டிப்பு ஆறுமாதம் அங்கே இருந்தால், ஐஸ் நேராகி விடுவாள். தயவு பண்ணி, அவளை மன்னித்துவிடம்மா!" என்று மீண்டும் மன்னிப்புக் கேட்டார்.

"தலையில் இடித்ததும், மயக்கம் வந்ததால் எதற்கும் 'ஸ்கேன் பண்ணி விடுங்கள். அந்த பில்லை, எனக்கு அனுப்பி விடுங்கள்" என்றார் தொடர்ந்து!

இப்படிப்பட்ட தகப்பனாருக்கு அப்படியொரு மகளா என்றிருந்தது மூவருக்குமே!

வீட்டுக்கு வந்ததும், என்ன ஏது என்ற பெரியவர்களிடம் சுரேந்திரன் சொல்லிக் கொடுத்தபடி,

"வெளியே சும்மா நடந்து கொண்டிருந்தேன். ஏதோ மாட்டைப் பார்த்து மிரண்டு ஓடி வரும்போது மரத்தில் இடித்து விழுந்துவிட்டேன்" என்றாள் பெண்.

மேற்கொண்டு கேள்வி கேட்க இடமின்றி "அசதியாய் இருக்கிறது. அத்தை! கொஞ்ச நேரம் படுத்திருக்கிறேன்!" என்று அகன்று ஓடிவிட்டாள்.

பின்னோடு, அண்ணன் தம்பி இருவரும் வந்தார்கள்!

"நேற்று என் கேள்விக்கு ஏன் பதில் சொல்லவில்லை என்று கேளடா!" என்றான் சுரேந்திரன்.

ஒருநாள் முழுவதும் மனம் அலை பாய்ந்த ஆத்திரம் அவனுக்கு!

"இதோ.." என்று சின்னவன் தொடங்குமுன், "நேற்று, அவர் என்ன சொல்லிக்கேட்டார் என்று முதலில் கேளுங்கள் மகேன்!' என்று பிகுவுடன் கூறினாள் நளினி.

"அவன் என்ன கேட்பது? இதோ, நானே சொல்லுகிறேன்! இந்தத் திருமண ஏற்பாடு பிடிக்காவிட்டால் சொல்லிவிடு என்றேன்! நீ, பதிலைச் சொல்லவே இல்லையே!"


"எப்படிச் சொல்லுவது?"

இருவரும் புரியாத திகைப்புடன் நோக்க, சிட்டுக் குருவியாய்த் தலை சரித்து, கண்ணில் குறும்புடன் அவள் கேட்டாள். "பிடிக்காவிட்டால்தானே சொல்லச் சொன்னார்? பிடித்திருக்கும்போது, சும்மாதானே இருந்தாக வேண்டும்?"

ஓஹோவென்று, சின்னவன் நகைக்க, "தம்பி ஜூஸ்ட்!" என்றான் அவன் அண்ணன்!

சிரித்துக் கொண்டே, அவன் சென்றுவிட ஆவலுடன் வேகமாகத் தன்னவளை அணைத்தான் சுரேந்திரன்.

மீண்டும், அவன் அவளை விடுவித்த போது, அவள் செங்கொழுந்தாகிப் போயிருந்தாள்!



# முத்தின் ஒளி வீச்சினிலே

விடிவதற்கு, இன்னும் வெகு நேரம் இருந்தது.

பொதுவாக, சதானந்தன் விழிப்பது இல்லை. சொல்லப் போனால், விடிகாலை நாலு மணிதான். அவன் மிகவும் ஆழ்ந்து துயிலுகிற நேரம். அந்த மாதிரி ஆழ்ந்த தூக்கத்திற்கெல்லாம், அவன் விடை கொடுத்துப் பல மாதங்கள் ஆகின்றன என்றாலும் இந்த நாலு மணிக்கு, அவனது துயில் கலைந்தது, அதிசயம் தான்.

அரைத் தூக்கத்திலேயே அருகில் துழாவியவன்.அங்கே இருக்க வேண்டியவள் கைக்குத் தட்டுப்படாது போகவும், 'விலுக்'கென்று எழுந்து அமர்ந்தான்.

சுற்றும் முற்றும் அவசரமாகத் தேடியவன் கண்களில், 'சிட்அவுட்' டின் இரும்பு கிரில்மீது சாய்ந்து நின்ற சுகந்தாவின் வரிவடிவம் தென்படவும், அவசரமாக எழுந்து, அவளிடம் விரைந்தான்.

"சுகி, என்னடா? வலிக்கிறதா? டாக்சியை வரச் சொல்லட்டுமா? இரவோ, பகலோ எந்த நேரம் என்றாலும், தயங்காமல் கூப்பிடும்படி, ராமநாதன் சொல்லியிருக்கிறான். சொல்லும்மா.வரச்சொல்ல வேண்டியதுதானே? டாக்சிவருமுன், நாம் இல்லை, நான் சாமான்களை எடுத்து வைத்து விடுகிறேன்." என்று பரபரப்புடன் திரும்பியவனைக் கையைப் பற்றி தடுத்தாள் சுகந்தா.

"ஷ். சும்மாயிருங்கள், சதா. இன்னும் நேரம் அதிகம் ஆகும். டாக்டர் சொல்லியிருக்கிறார்கள்." என்று மனைவி கூறவும், சதானந்தனுள் சட்டென வலித்தது.

டாக்டரும் சொல்லியிருக்கிறார்கள் என்றும் அவள் சொல்லியிருந்தால், அப்படிச் சொல்லும்படியாக இருந்திருந்தால், இந்த வலி தோன்றியிருக்காது. ஆனால்....

தன் வருத்தத்தைக் காட்டிக் கொள்ளாமல், "எதற்கும், மருத்துவமனைக்குப் போய் விடுவோமே, சுகிம்மா. முன்னே பின்னே ஆனாலும், அங்கே போய்விட்டால், வசதியாக.... நிம்மதியாக இருக்கும்." என்று மனைவியைக் கிளப்ப முயன்றான் சதானந்தன்.

டாக்டரின் திறமையும், அனுபவமும் மிகுந்த கரங்களில், மனைவியை ஒப்படைத்துவிட்டால், கொஞ்சம் ஆறுதலாக இருக்குமோ என்பது அவனுக்கு.

"ஆனால், இந்த நேரத்தில் போய், உங்கள் நண்பர் ராம நாதனை எழுப்பி, அவருடைய டாக்சி டிரைவரை எழுப்பி, அங்கே டாக்டரை எழுப்பி.... எதற்கு, சதா? எல்லோருமே, நாள் முழுவதும் உழைத்துக் களைத்து உறங்குகிறவர்கள்தான். உங்களை எழுப்பவே, மனமில்லாமல் இருந்தேன், நான். பொறுங்கள் விடியட்டும்." என்றாள் சுகந்தா.



எல்லோருக்கும் பார்க்கிறவள். இவள் அருமை, அவனுடைய பெற்றோருக்குப் புரியவில்லையே.

அவளுடைய பெற்றோருக்கும்தான் தெரியவில்லை.

ஆனால், அதைப் பற்றிப் பேசி, இப்போது, அவளது மனதைச் சங்கடப்படுத்த விரும்பாமல், "ரொம்ப வலிக்கிறதா, கண்ணு?" என்று உருகினான்.

"சேச்சே. சும்மா, பூவாலே தடவிக் கொடுக்கிற மாதிரி, சுகம்ம்மாக..." என்று கேலியாகச் சொல்லும்போதே, வெளி உலகத்தைப் பார்க்கத் துடித்த பிள்ளையின் அடுத்த முயற்சி, அவளை வலியால் முகம் சுளிக்க வைத்தது.

இடையிலே பேச்சு நிற்கவும், "என்ன? என்ன?" என்றவன், அவள் வலியை மறைத்து முறுவலிக்க முயலவும் ரொம்பவுமே மிரண்டு விட்டான்.

"ஊகூம். நீ என்ன சொன்னாலும் சரிதான்.நாம் இப்போது மருத்துவமனைக்குக் கிளம்பியே ஆகவேண்டும். வா. நீ. இங்கே பனியில் நில்லாதே. என்னவெல்லாம் கொண்டுவர வேண்டும் என்று, மருத்துவமனையில், ஒரு லிஸ்ட் தந்தார்களே. அது எங்கே இருக்கிறது? இல்லை. நீ நடக்காதே. எங்கே, என்னென்ன இருக்கிறது என்று சொல்லு போதும். நான் பார்த்து, தேடி, எடுத்து வைக்கிறேன்." என்று அவளைக் கைத்தாங்கலாக அழைத்துப் போய் உட்கார வைத்தான்.

"முதலில் ராமநாதனுக்கு..."

மீண்டும், அவன் கையைப் பற்றி நிறுத்தினாள் மனைவி.

"பொறுங்கள். பாதி சாமானாவது எடுத்து வைத்து விட்டு, அதன் பிறகு, உங்கள் ராமநாதனைக் கூப்பிடலாம். டாக்சி ஷெட்டும் அருகில்தான் இருக்கிறது. சொன்னால், ஐந்தே

நிமிஷத்தில், வண்டி வந்து வீட்டு வாசலில் வந்து நிற்கும். இப்போதே கூப்பிட்டு, அவர்கள் வீட்டிலும் தூக்கம் கெடுக்க வேண்டாம்.'' என்றாள், கெஞ்சுதலாக.

"ஆனால்..."

"அது மட்டுமல்ல, சதா. டாக்டர், நர்ஸ் எல்லோரும் சொன்ன கணக்கு பார்த்தால், பாப்பா பிறக்க இன்னும் குறைந்தது, ஐந்தாறு மணி நேரமாவது ஆகும். இப்போதே போய் எல்லோரையும் தொந்திரவு செய்தால், ரொம்பவும் அலட்டிக் கொள்கிற மாதிரி, கொஞ்சம் கூச்சமா இருக்கிறதும்மா. அத்தோடு, அவசியமும் இல்லை எனும்போது... இன்னும் கொஞ்சம் நெருக்கமாய் வலி வந்தால் நானே சொல்லி விடுவேன். சரியா?''

அவனுக்குப் பயம்தான். ஆனால், அவளது உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டியிருந்தது. அது, இது என்று, சும்மா சும்மா சள்ளை செய்கிறவளில்லை அவன் மனைவி. எனவே, அவளாக, ஒரு முடிவெடுத்தால், சதானந்தன் அதை அலட்சியம் செய்வதில்லை.

முதலிலிருந்தே அப்படித்தான். திருமணத்திலிருந்தே.

மருத்துவமனைக்குக் கொண்டுபோக வேண்டிய பொருட்களை எடுத்து வைக்க, சுகந்தாவும் லேசாக வென்னீரில் உடம்பு கழுவிக் கொண்டு கிளம்பியபோது, அவள் விரும்பிய படி, பொழுது விடியத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனால், மனைவியின் முகத்திலேயே ஒரு கண்ணை வைத்திருந்த சதானந்தனுக்குத்தான், அவ்வப்போது, அங்கே காணப்பட்ட மாறுதல்கள், நெஞ்சுக்குள் பந்தயக்குதிரைகள் ஓட வைத்தன.

வலி என்று, அவள் கத்தினால்கூட, அவனுக்கு, அவ்வளவு பயமாக இருந்திராது. எத்தனையோ திரைப்படங்களில்,பார்த்துப்



பழகியதுதானே? ஆனால், வலியை வெளிக்காட்டாதிருக்க, அவள் செய்த முயற்சிகள்தான், அவனை மிகவும் கலக்கின.

அடிக்கடி, டெலிபோனின் பக்கம், அவனது பார்வை பாய்ந்து கொண்டே இருந்தது. எல்லோரும் சொன்னது, சரிதானோ? இந்த நேரத்தில், அனுபவம் வாய்ந்த பெரியவர்களின் துணை அவசியம் தானோ?

எல்லாப் பெண்களுமே, இது மாதிரி வேளையில் தாய்வீடு என்று, ஓடியே போய்விடுகிறார்களே. காரணம் இல்லாமலா போவார்கள்? தாயாருக்கு வழியில்லாதிருந்தால், மாமியாரைக் கூப்பிட்டுத் துணை வைத்துக் கொள்கிறார்கள்.

ஆனால், சுகந்தா, எதையும் ஒத்துக் கொள்ளவில்லை.

எத்தனை பேர் சூழ இருந்தாலும், அவரவர் பிள்ளையை, அவரவர்தானே பெற்றாகவேண்டும் என்றாள். இதற்காக, ஏன் அடுத்தவர் காலில் போய் விழுவது என்பது அவளுக்கு.

அவனுக்கும், அப்போது சரியாகத்தான் தோன்றியது

இப்போது...வறட்டு வீராப்பில், வாழ்க்கையைத் தோற்றுவிடப் போகிறார்களா?

உடை மாற்றிக் கொண்டு வந்த சுகந்தா, அவன் முன் சொடக்குப் போட்டு, அவன் கவனத்தை ஈர்த்தாள். "என்ன யோசனை? இன்னும் தயாராகவில்லை?''

"இதோ, ரெடி'' என்று எழுந்தவனை, ஏற இறங்கப் பார்த்து, ஊகூம் என்று தலையாட்டினாள். "உங்கள் சிவப்பு டீஷர்ட்டைப் போட்டுக் கொள்ளுங்கள். அதுதான் உங்களுக்கு பளிச்சென்று இருக்கும்.''

"அதுவா முக்கியம்?'' என்றவன், அவள் கெஞ்சலாக நோக்கவும், "ஓகே, ஓகே'' என்று, அவள் சொன்ன டீஷர்ட்டை அவசரமாக அணிந்தான். "போகலாமா?''

மருத்துவமனையில், டாக்டர், நர்ஸ் எல்லோரும் இருப்பார்கள். தைரியம் கிடைக்கும் என்று சதானந்தன் எதிர்பார்த்ததற்கு நேர் மாறாக, அவனுக்கு அச்சம் தான் அதிகம் ஆயிற்று.

வீட்டிலாவது, சுகந்தா, அவன் கண்ணெதிரில் இருந்தாள். மருத்துவமனையில், பிரசவ அறைக்கு அவளை அழைத்துச் சென்றுவிட, அவனுக்குக் கண்முன் பூச்சி பறந்தது. அந்த மாதிரி, ஒரு நடுக்கம்.

பிரசவத்தை, மறுபிறவி என்று எழுதுகிறார்களே. அவளுக்கு ஏதேனும் ஆகிவிட்டால்?

''இந்த மருந்துகளை எல்லாம் வாங்கி வாருங்கள்.''

ஓய்ந்து கிடந்தவன், நர்சின் குரல் கேட்டு, அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான்.

மருந்து லிஸ்டை வாங்கும் போதே, சந்தேகம். இதில் ஏதாவது கிடைக்காவிட்டால்?

என்னவோ, சுகிக்கு பெரிய ஆபத்து என்பதால், இத்தனை மருந்துகள் வாங்கும்படி ஆகிவிட்டதாகவும், அவற்றுள் மிகவும் தேவையாக மருந்து ஒன்று கிடைக்காத மாதிரியும், அதனால், அவளது உயிருக்கே ஆபத்தாகிவிட்ட மாதிரியும் ஒரு கற்பனை தோன்றி, அவனை உலுக்கியது.

ஆனால், ''எல்லாம் நாங்கள் உள்ளே ஏற்கனவே வைத்திருப் போம். பயன்படுத்திக் காலியானதை, மீண்டும் இட்டு நிரப்பத் தான், உங்களிடம் வாங்கிவரச் சொல்வதே,'' என்று நர்ஸ் கூறி, அவனது மூச்சை மறுபடியும் நேராக்கினாள்.

மருத்துவமனை அருகிலேயே ஒரு மருந்துக் கடையும் இருந்தது. லிஸ்டில் இருந்த எல்லாமே, கடையிலும் இருந்தன.



பிசிறவும் இருக்கவே, தன்னை மீறி அவனது கால்கள் அவனை அங்கே இழுத்துச் சென்றன.

அவன் தொடர்பு கொண்ட முதல் இடத்தில், ''சுகந்தாவா? அப்படி யாரையும் எங்களுக்குத் தெரியாதே. தப்பு நம்பர்'', என்று பேச்சைத் துண்டித்தார்கள்.

அடுத்த எண்ணில், ''யார்? சதானந்தனா? எங்களுக்கு அப்படி ஒரு பிள்ளை இருந்தான்தான். ஆனால் அவன் போய் ஓர் ஆண்டு ஆகிறதே.'' என்று கூறி, டெலிபோன் கருவியை, தொப்பென்று போட்டார்கள்.

இவர்கள் யாரிடமும் ஒன்றுமே சொல்ல வேண்டாம் என்று, அவன் மனைவி பிடிவாதம் பிடித்தது, எவ்வளவு சரி. அதிகப்படி ரோஷம் என்று எண்ணினானே?

கடைசியாக, அவளது கருத்துதான், சரியாக இருக்கிறது.

எப்போதுமே, அப்படித்தான்.

மருந்துகளைக் கொண்டுபோய்க் கொடுத்தபோது, சுகந்தாவின் துணிமணிகளை ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு, அவனிடம் கொடுத்தார்கள். மருத்துவமனையின் பச்சை நிறக் கவுனை அணிந்து, அவனுடைய சுகி, ஒரு தரம் தலையைக் காட்டினாள்.

தைரியமாக இருக்கும்படி சைகை செய்து, அவள் முறுவலிக்கவும் அவனுள்ளும் ஏதோ ஒன்று நிமிர்ந்தது.

முதலிலிருந்தே, அப்படித்தான்.

அவனை நிமிர வைப்பவள், அவள்தான்.

அவனுக்குள் கடைசிவரை குழப்பம் தான்.

"இரண்டு ஆண்டுகளாக, இவர்கள் மனம் மாறும் என்று, நாமும் பொறுத்துப் பார்த்தாயிற்று. இரண்டு இல்லை, இன்னும்

இருபது ஆண்டுகள் சென்றாலும், இரு வீட்டினரும், இப்படியே தான் இருக்கப்போகிறார்கள். நாம், நம் வழியைப் பார்க்க வேண்டியது தான்.'' என்று தொடங்கியவள், அவள்தான்.

அதற்காக, இருவரும் சொல்லாமல் கொள்ளாமல், எங்கும் ஓடிப் போய்விடவில்லை. அவரவர் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு ஏதோ ஒரு ஃப்ளாட்டில் போய்க் குடித்தனத்தைத் தொடங்கிவிடவுமில்லை. இருவருடைய பெற்றோரிடமும், திருமணம் பற்றி, மீண்டும் ஒருதரம் நேரில் பேசி, வழக்கம்போல, அவர்கள் மறுக்கவும், பதிவுத்திருமணம் பற்றித் தெரிவித்து, அழைப்பும் கொடுத்துவிட்டுத்தான், மணந்து கொண்டார்கள்.

இருவருடைய குடும்பத்தினரும் வராதது, இவர்கள் இருவருமே எதிர்பார்த்ததுதான். எனவே, அதற்காக, அவர்கள் அதிகம் வருத்தப்பட்டுவிடவும் இல்லை.

வருத்தப்பட அவர்களுக்கு நேரமும் இல்லை.

ஒரு கட்டடத்தை வீடாக்கிக் கொண்டிருந்த அவர்களுக்கு, வெளி உலகம் பற்றி எண்ணிப் பார்க்கவே நேரமில்லாதபோது, வருத்தம், எங்கிருந்து வரும்?

சொர்க்கமாக இருந்த அந்த கூடு, இப்போது கலைந்து விடுமா?

எதற்காகவோ, நர்ஸ் பிரசவ அறையை விட்டு வெளியே வர, அவளிடம் ஓடிப்போய், ''என் மனைவிக்கு எப்படி இருக்கிறது?'' என்று பவ்வியமும், பயமுமாகக் கேட்டான்.

''மனைவி...'' என்று, சற்றுத் திகைத்துவிட்டு, ''ஓ, சுகந்தா சதானந்தன் நீங்கள் தான் மிஸ்டர் சதானந்தனா? குழந்தை பிறக்க, இன்னும் ஒன்று ஒன்றரை மணி நேரமாவது ஆகும் சார். நீங்கள் வேண்டுமானால், வெளியே ஏதாவது வேலை இருந்தால், முடித்துவிட்டு வாருங்களேன்.''



வெளியேயாவது? வேலையாவது அதுவும், அவனுடைய சுகி, இங்கே வாழ்வா சாவா நிலையில் இருக்கும்போதா?

இவர்களுக்கெல்லாம், மனம் மரத்துவிடும் போலும்.

''வேலையெல்லாம், ஒன்றுமில்லை, சிஸ்டர். ஆனால், நிஜத்தைச் சொல்லுங்கள், சுகி பிழைத்து விடுவாள்தானே?''

''ஏன்,உயிருக்கென்ன?ஒன்றும் ஆகாது.'' என்றபடியே நடக்கத் தொடங்கிய நர்ஸ், சற்று நின்று, ''முதல் குழந்தையா? ஒன்றும் பயமில்லை. இந்தக் காலத்தில் எல்லாம், பிரசவம் என்பது, ஒன்றுமே கிடையாது. தைரியமாக இருங்கள்.'' என்று கனிவாக முறுவலித்துவிட்டுப் போனாள்.

இப்படித்தான், சுகியும் சொன்னாள். 'இந்தக் காலத்தில், பிரசவம் என்றால் பயப்படவே, தேவையில்லை.' என்று.

ஆனால், குழந்தை வந்ததிலிருந்து, சதானந்தனுக்கு மட்டும் கலக்கம் தான்.

அவசரப்பட்டு விட்டோமோ? இன்னும் கொஞ்ச நாள் பொறுமையோடு இருந்திருந்தால், பெற்றோர் மனம் இளகியிருக்கக் கூடுமோ? அவள் தனியாயிருக்கத் தேவையில்லாமல், யாராவது கூட இருந்திருப்பார்களோ?

சுகி கருவுற்ற பிறகு, கொஞ்ச நாள் அவனுக்கு, அலுவலகத்தில் வேலையே ஓடவில்லை.

தலை சுற்றி, அவள் கீழே விழுந்துவிட்டால்? எத்தனை சினிமாவில் பார்த்திருக்கிறான்.

அவள் அப்படி விழுந்து கிடப்பது போன்ற கற்பனையில், விழுந்தடித்து, விடுப்பு எடுத்துக் கொண்டு, ஒரு நாள் வீட்டுக்கு ஓடி வந்தான்.

அவளுக்கு ஒரே சிரிப்பு. சிரித்து முடித்துவிட்டு, ''காலையில் கொஞ்சம் ஒரு மாதிரிஇருக்கும். அதுவும்,முதல் மாதங்களில்

தான். மற்றபடி, ஒன்றும் இராது.'' என்று, அவனுக்கு விவரம் சொன்னாள்.

அப்போதும், அவனுக்குள் கவலைதான்.

''பெற்றோருக்குத் தெரிவிப்போமா?'' என்று மெல்லக் கேட்டான்.

யாருடைய பெற்றோரிடம் போவது?

இருசாராருமே, அவர்கள் தோற்றுவிட்டதாகக் கெக்கலி கொட்டத்தான் செய்வார்கள்.

'போடி, போ. நாளைக்கு, மசக்கை என்று, ஒன்று வரத்தான் செய்யும். தலை தூக்கமுடியாமல், காலில் வந்து விழுவாய், பார். அன்றைக்குப் பேசிக் கொள்ளுகிறேன்.' என்றாள், அவளைப் பெற்ற தாயார்.

''இப்படியே இருக்க மாட்டீர்கள். நாளைக்குக் குழந்தை குட்டி என்று வரும். அப்போது, அவள் அம்மா, அந்த ராங்கிக்காரி, ஒன்றுமே செய்ய மாட்டாள். அப்போது என் காலில்தானே விழுந்தாக வேண்டும்? அப்போது பேசிக் கொள்ளுகிறேன்.'' என்று ஆருடம் சொன்னாள், அவனைப் பெற்றவள்.

அவர்களுடைய பொக்கிஷம் அதை, இவர்களின் ஏளனத்துக்கு ஆளாக்குவதா?

''வேண்டாம்'' என்று மறுத்துவிட்டாள், அவள்.

என்னென்னவோ நிறையக் காய்கறிகள் வாங்கி வந்து, விழுந்து விழுந்து சமையல் செய்துவிட்டு, ஒன்றும் சாப்பிடாமல் ஒதுக்கினாள், ஒரு நாள்.

உண்டு பார்த்தவன், ''ஏன்? நன்றாகத்தானேடா இருக்கிறது?'' என்று, அவள் உண்ணாததின் காரணத்தை விசாரித்தான், சதா.

சிறு புருவச் சுளிப்புடன் , ''என் அம்மா, இதுபோல, எல்லாம் போட்டு, ஒரு குழம்பும், அவியலும் செய்வார்கள். சாப்பிட



வேண்டும் போல இருந்தது. செய்து பார்த்தால், அந்த ருசி வரவேயில்லை.'' என்றாள் வருத்தத்துடன்.

அன்றைக்கு அவனுக்கு ரொம்பவும் வேதனையாகிவிட்டது.

தப்பு செய்துவிட்டோமோ என்றும் கூட எண்ணிவிட்டான். இதுவே, அவளுடைய தாயாரின் சம்மதத்தோடு நடந்த திருமணம் என்றால், ஓடி வந்து, ஊட்ட மாட்டார்களா?

வாய்க்கு ருசியாக உண்ண வேண்டிய நேரம் என்று சொல்லிக் கேள்விப் பட்டிருக்கிறான். அவன் மனைவி, அதற்கு ஏங்கும்படி ஆகிவிட்டதே.

''இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்த்திருக்க வேண்டுமோ என்று, தோன்றுகிறது, சுகி.'' என்று,மனதில் எண்ணியதை, அவளிடம் வாய்விட்டுச் சொல்லிவிட, சுகந்தாவின் முகம், மேலும் அதிகமாக வாடிப்போயிற்று.

அப்போதைக்கு, ஒன்றும் சொல்லாமல், அவள் எழுந்து போய்விட, அவளும் அப்படித்தான் எண்ணி வருந்துகிறாளோ, என்று, அவனும் மேலும் அதிக வேதனைப்பட, அன்று முழுவதுமே, வீட்டில் மௌனம் மேலோங்கியது.

ஆனால், எதையும் மனதில் வைத்துக் கொண்டு புகையக் கூடாது. பேசித் தீர்த்துவிட வேண்டும் என்பது, முதலில் இருந்தே, அவர்களது ஒப்பந்தம்.

அதன்படி, சுகந்தாவே கேட்டாள். ''நம் திருமணத்தை எண்ணி வருத்தப்படுகிறீர்களா, சதா? அப்பா அம்மா, தம்பி தங்கை எல்லோரையும் விட்டு இருக்கும்படி ஆகிவிட்டதே என்று எண்ணுகிறீர்களா? அதனால்தான், அப்படிக் கேட்டீர்களா?'' என்று.

அவளது வாட்டத்தின் காரணம் புரிந்துவிட, அவன் முகம் மலர்ந்தது. ''உனக்காகத்தான் சொன்னேன்.'' என்று, விளக்க, அவளும் சிரித்தாள்.

"இந்த அன்பான கணவன் போதும் எனக்கு. அவியலும் குழம்புமா, பெரிது? எதுவும் யாருமே எனக்கு வேண்டாம்."

அன்புதான். இப்போது, ஏதாவது மந்திரத்தின் சக்தியால், அவளது வலியை, அவன் வாங்கிக் கொள்ள முடியுமானால், சந்தோஷமாக வாங்கிக் கொள்ளுவான். ஆனால், அதற்கு வழியில்லையே?

ஆனால், ஒன்று. அவனுக்கு வலியைக் கொடுக்க அவளும் சம்மதிக்க மாட்டாள். அவ்வளவு அன்பு அவளுக்கும் உண்டு.

அவளும், அவனைப்போலவே, திருமணத்துக்கு அவசரப் பட்டுவிட்டோமோ என்று சில முறை நினைத்ததையே, அவள் அன்றுதானே சொன்னாள்.

அவன், அவ்வப்போது, முன் கூட்டியே சொல்லாமல், அவன் தாமதமாக வீடு வரும் போதெல்லாம்,அவளுக்கு, அப்படித்தான் இருக்குமாம். அவனுக்கு, என்னவோ, ஏதோ என்று கலங்கிவிடுவாளாம். இதுவே, பெரியவர்களோடு நல்ல உறவு இருந்திருந்தால், அவரே சட்டையை மாட்டிக்கொண்டு, விசாரித்துவரக் கிளம்பிவிடமாட்டாரா?

அன்றிலிருந்து,அவன், அப்படி யாருடனாவது பேசிக் கொண்டிருந்து விட்டுத் தாமதமாக வருவதை நிறுத்தினான். தவிர்க்க முடியாவிட்டால், அவளுக்கு, அதுபற்றித் தெரிவித்து விடுவான். 'என்னய்யா இது? சங்கிலி போட்டுக் கட்டாத குறையாக இருக்கிறதே.' என்று நண்பர்கள் யாராவது கிண்டல் செய்தாலும், கூடச் சேர்ந்து சிரிப்பானே தவிர பழக்கத்தை மாற்றிக் கொள்ளவில்லை. "நமக்காக, எவ்வளவோ செய்கிறார்கள். இது என்னப்பா, சாதாரணம்." என்பான்.

வேடிக்கை என்னவென்றால், மெள்ள மெள்ள, எல்லோருக்குமே அந்தப் பழக்கம் - வீடு திரும்பத் தாமதம்



ஆனால், வீட்டினருக்கு முன்கூட்டியே தெரிவிக்கிற பழக்கம் வந்தது.

ஒரு நண்பனுடைய மனைவி, அவனைப் பார்த்தபோது, நன்றி கூடச் சொன்னாள். "இப்போது எவ்வளவோ நிம்மதியாக இருக்கிறேன். சார்." என்று.

அப்போதுதான், வளைகாப்பு பற்றிய பேச்சு வந்ததும். "இது ஏழாம் மாதமா, அவர்கள் வீட்டில் இருந்து வந்து வளை காப்பு செய்வார்களே" என்றாள் அவள்.

"செய்யமாட்டார்களே. அந்த மாதிரி சென்டிமென்டில் விழத்தட்டி விடலாம் என்று யாரும் கனவு காணவேண்டாம்."

யோசித்து, அன்று சதானந்தன் வாங்கிப் போன பொருட்களைப் பார்த்து, அவளுக்கு ஒரே ஆச்சரியம். "என்ன இது? பூ, பழம், பலகாரம், வளையல் எல்லாம், தினுசு தினுசாக?"

அவன், விஷயத்தைச் சொன்னதும், சுகி வியப்பினால், விழி மலர, "என்னது? வளைகாப்பு,நீங்கள் செய்யப் போகிறீர்களா? கண்ணாடி வளையல் போட்டுவிடத் தெரியுமா? என் கையை ரத்தக் களரியாக்கத் திட்டமா?" என்று கிண்டலடித்துச் சிரித்தாள்.

"ஏய், உனக்கு ஆசையாக இருக்குமோ என்று வாங்கி வந்தேனடி. பட்டுச் சேலை கட்டி, மணையில் உட்கார்ந்து..."

"சம்பிரதாயப்படியா? அப்படிப் பார்த்தால், நம்திருமணமே, ரிஜிஸ்டர் ஆபீசில்தானே நடந்தது? நமக்கு மகிழ்ச்சியாக இல்லையா, என்ன? இது போல விசேஷங்களை எல்லாம் நம்மவர்கள் செய்ததன் காரணமே வேறு. அவரவர் வேலையில் மூழ்கிக் கிடக்கும் உறவினர்கள் எல்லோரும், ஒன்று சேர்ந்து கலந்து உரையாடி மகிழ ஒரு வாய்ப்பு. அவ்வளவு தான்."

"அப்படியானால், உன் அண்ணன், என் தங்கை, மற்ற உறவினரைக் கூப்பிட்டுப் பார்க்கலாமா?"

"நமக்காகப் பெரியவர்களை விரோதித்து, வரவும் முடியாமல், வராதிருக்கவும் சங்கடப்படும் படியான நிலைமைக்கு, அவர்களை ஏன் ஆளாக்க வேண்டும், சதா? எனக்கு நீங்கள் உறவு. உங்களுக்கு, நான். நாம் இருவரும் தான், எப்போதும், ஒன்றாக இருக்கிறோமே, இது போதாதா?" என்று அவன் தோளில் வாகாக, அவள் சாய்ந்து கொண்ட போது, அவனுக்கும் போதும் போலத்தான் இருந்தது.

ஆனால், இப்போது... இது போதாது போல, அவனுக்கு, ரொம்பவே பயமாக இருந்தது.

சும்மா உட்கார்ந்திருக்கும் அவனுக்கு இப்படியென்றால், உள்ளே வலியில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் அவளுக்கு எப்படி இருக்கும்?

சதானந்தன் தவிப்புடன் யோசிக்கும்போதே, அம்மா.. என்ற சுகியின் கதறலில் அவனது இதயம் நின்று,ஒரு குழந்தையின் வீறிடலில், மீண்டும் துடிக்கத் தொடங்கியது.

பாப்பா பிறந்ததைச் சொல்ல வந்த நர்ஸ், இவன் இருந்த நிலையைப் பார்த்துச் சிரித்தாள். "நான்தான் சுகப்பிரசவம் என்று சொன்னேனே," என்றபோது, அவன் முகத்தில் அசடு வழிந்தது.

சுகப்பிரசவம் என்பதால், மூன்றாம் நாளே வீட்டுக்கு அழைத்துப் போகலாம் என்று, சொல்லி விட்டார்கள்.

சுகந்தாவிடம் பணத்தைக் கொடுத்து, "பில் எல்லாம் அறைக்குள் கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன். கொடுத்தனுப்பிக் கட்டிவிடு. நான் வந்ததும், உடனே கிளம்பிவிடலாம்." என்று விட்டு, வந்து, வீட்டைக் குழந்தையின் வரவுக்குத் தயாராக்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

வீடு முழுக்க ஒட்டடை அடித்து, 'வாக்குவம் க்ளீன்' செய்து முடித்தான்.



சுத்தம் செய்து முடித்ததும், பெருமையாகக் கூட இருந்தது.

காலையில் எழுந்த போதும், வீட்டின் சுத்தம், கண்ணைப் பறிக்கும் விதமாகத்தான் இருந்தது.

இளவரசிக்கும், மகாராணிக்கும் ஏற்ற தூய்மை.

அடுத்துச் சாப்பாடு.

சுகிக்குச் சோளா பூரி, பன்னீர் குருமா பிடிக்கும் - வாங்கி, ஹாட் பாக்கில் வைத்துவிடலாமா என்று, சதானந்தன் யோசித்துக் கொண்டிருந்தபோது அழைப்பு மணி அடித்தது.

எதிர் ஃப்ளாட் பெண்மணி, காலை ஏழு மணிக்கெல்லாம், வேலைக்குப் போய், அந்த அம்மாள், அவருடைய தாய் வீட்டில் விட்டிருக்கும் குழந்தைகளைப் பார்த்துவிட்டுத் திரும்பிவர, மாலை மணி ஆறாகிவிடும். அவளைச் சந்திப்பதே அபூர்வம்.

சதானந்தனைப் பார்த்ததும்,"இன்று, மனைவி குழந்தையை அழைத்து வரப் போவதைச் சொன்னீர்களாம். அதிகம் அலட்டிக் கொள்ளாமல், கொஞ்சம் ஓய்வாய் இருக்கச் சொல்லுங்கள். வெந்நீரில் குளிக்கச் சொல்லுங்கள். சாப்பாடும் பத்தியமாக இருக்கட்டும். என்னால், அதிக உதவி செய்ய முடியாது. அதனால், தெரிந்ததைச் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன். வரட்டுமா?" என்று கிளம்பினாள்.

சோளா பூரி. அது, பத்தியமா இல்லையா?

"கொஞ்சம் இருங்கள், பத்தியச் சாப்பாடு என்றால் என்ன?" என்று அவள் வெளியேறி விடுமுன், அவசரமாக விசாரித்தான் சதானந்தன்.

"அது... பழைய காலத்தில், மருந்து அரைத்து, குழம்பு வைத்துக் கொடுப்பார்கள். இப்போது, அதெல்லாம் பார்ப்பது கடினம் காரம் இல்லாமல், ரசம் சாதம் மட்டும், சற்றுக் குழைவாகச் செய்து கொடுங்கள் போதும். ரசத்தில் புளி விட வேண்டாம்."

"புளி இல்லாத ரசமா? எப்படிச் செய்வது?"

கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு, "புளிக்குப் பதில், எலுமிச்சம்பழச்சாறு சேர்த்துக் கொள்ளுங்கள்," என்றவள், அவன் முகத்தைப் பார்த்துவிட்டு, "கடுகு, கறிவேப்பிலை, மிளகு சீரகம் போட்டுத் தாளித்து தக்காளி வெட்டிப் போட்டு வேக விட்டு, இறக்கும் போது,சாறு சேருங்கள். சாதத்திற்கு ஒருகப் தண்ணீர் அதிகம் ஊற்றுங்கள். வந்து..." என்று, ஏதோ சொல்ல வாயெடுத்தவள், "எனக்கு பஸ் போய் விடும் வருகிறேன்" என்று கிளம்பிச் சென்றுவிட்டாள்.

சாதம், ரசம் பரவாயில்லை. பத்தரைக்கு, மருத்துவமனையில் இருக்க வேண்டும். அவ்வளவுதானே? அதற்குள், பத்துமுறை ரசம் சாதம் செய்து விடலாம்.

சமையல் என்று, சதானந்தன் செய்ததில்லை. ஆனால், சுகி செய்யும்போது, பார்த்திருக்கிறான். கேள்வி ஞானமும் கொஞ்சம் இருந்தது.

என்ன? குக்கரில் தண்ணீரை ஊற்றி, பாத்திரத்தில் அரிசியைப் போட்டு, மூன்று விசில் வந்தால், சாதம் குழைவாக இருக்க, கூட ஒருகப் தண்ணீர்.

இப்போதே செய்தால், ஆறிவிடும் என்று, மற்ற வேலைகளைப் பார்க்கப் போனான்.

பாப்பாவின் துணிகள், அறையில் மாட்டத் திரைகள், எல்லாம் முன்னரே, தயாராக வாங்கி வைத்திருந்தார்கள். முதலில் திரைகளை மாட்டிவிடலாம் என்று எடுத்தபோது, ஓரத்தில் லேசாக அழுக்கு போலத் தோன்றியது.

வாஷிங் மிஷினில் போட்டு எடுத்து மாட்டிவிடலாம், நேரம் இருக்கிறது என்று, அவைகளை மிஷினில் போட்டவன் கண்களில், சுழற்றிப் போட்டிருந்த டீஷர்ட் பட்டது. அவனுக்குப் பிடித்து டீஷர்ட். ராசியானதும் கூட.



அதையும் சேர்த்து உள்ளே போட்டு, சோப்பையும் போட்டு, 'ஆன்' பண்ணிவிட்டு, அடுப்பில் சாதத்துக்கு வைத்தான்.

ரசம் தாளிக்கக் கடாயை, அடுத்த அடுப்பில் வைத்து, எண்ணையை ஊற்றியபோது, வாயில் மணி மீண்டும் ஒலித்தது.

சென்று பார்த்தால், யாரோ, எதையோ விற்க வந்திருந்தார்கள்.

'வேண்டாம்' என்று பிடிவாதமாகச் சொல்லி முடிக்கும் போது, "ஏதோ, தீய்கிற வாசனை, சார்" என்றாள், அவள்.

உள்ளே ஓடிப்போய்ப் பார்த்த போது, கடாய் தீப்பிடிக்காத குறை.

அவசரமாக 'காஸை' மூடிவிட்டு, சற்று நேரம் மூச்சு வாங்கிய பின் வேறொரு கடாயை வைத்து, தாளித்து '்ஃப்ரிஜ்'ஜிலிருந்து தக்காளி எடுத்து, வெட்டிப் போட்டு, எலுமிச்சம்பழச் சாறும் ஊற்றி, ருசி பார்த்தால், புளிப்பு நாக்கைப் பிய்த்துக் கொண்டு போயிற்று.

மூன்றே பழத்தில், இவ்வளவு புளிப்பா, என்று திகைத்துவிட்டு, நிறையத் தண்ணீரும் உப்பும் போட்டு, அதை ஒருவாறு, வாயில் வைக்கிறமாதிரி ஆக்கினான்.

மூன்று விசில் வந்துவிடவே, குக்கருக்குத் தீயை அணைத்து விட்டு, வாஷிங் மிஷினைத் திறந்து பார்த்தவனுக்குச் சற்று நேரம் ஒன்றுமே புரியவில்லை.

வெள்ளை வெளேர் என்று, பாப்பாவுக்கு வாங்கி வைத்திருந்த துணிகள் எல்லாம், எப்படிப் பிங்க் கலர் ஆயின?

எப்படி என்பது, இடையில் கிடந்த, சிவப்பு நிற டீஷர்ட்டைப் பார்த்ததும் புரிந்தது புதிது சாயம் கலைந்திருக்கிறது.

மீண்டும் ஒருதரம் துணிகளை அலசிப் பார்த்தான். ஆனால், ஷர்ட்டிலிருந்து அவ்வளவு இலகுவாகக் கலைந்த சாயம்,

வெள்ளைத் துணிகளில், அட்டையாய் ஒட்டிக் கொண்டது. வெறுமனே, நேரம் சென்றது தான் மிச்சம். வேறு வழியின்றித் துணிகளை காயப் போட்டுவிட்டு, குக்கரைத் திறந்து பார்த்தால், அப்போதும், அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

வைத்த அரிசி வைத்தபடியே இருந்தது.

சாதத்தை வாங்கிவிடலாம் என்றாலும், குழைந்த சாதத்துக்கு, எங்கே போவது?

பெரிய மூச்சுகள் எடுத்துத் தன்னைச் சமனப் படுத்திக் கொண்டு யோசித்தபோது, செய்த தவறை, ஒருவாறு கண்டு பிடிக்க முடிந்தது. சாதத்துக்கு உரிய தண்ணீரையும் சேர்த்து குக்கருக்குள் ஊற்றிவிட்டு, அரிசிப் பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றவே இல்லை. பெருமூச்சுடன், அரிசிக்குள் தண்ணீர் ஊற்றி, மீண்டும், அடுப்பில் வைத்தான்.

திரைத்துணிகளை மாட்டத் தொடங்கும்போது, பிஸ்கட் விற்கிற பையன் வந்து அழைத்து எரிச்சல் மூட்டினான்.

நேரம் வேறு போய்க்கொண்டே இருந்தது.

திரைகளை மாட்டி, தொட்டிலிலும், பிங்க்கலர் கொசுவலைத் துணியை, வேறு வழியின்றித் தொங்கவிட்டுவிட்டு, அவனும் குளித்து, அந்தப் பொல்லாத டீஷர்ட்டையே மாட்டிக் கொண்டு கிளம்பும்போது, மணி பதினொன்றை நெருங்கிக் கொண்டிருந்தது.

எதற்கும் இருக்கட்டும் என்று, சாதத்தைப் பார்க்க, அவன் குக்கரைத் திறந்து கொண்டிருந்தபோது, மீண்டும் அழைப்பு மணி ஒலித்தது.

“சும்மா தொந்திரவு பண்ணாதீர்கள். நான் எதையும் வாங்கப் போவது இல்லை.” என்று ஆத்திரமாகக் கத்தியபடி கதவைத் திறந்தவன், மீண்டும் ஒன்றும் புரியாமல் திகைத்தான்.



வெளியே, இருவர் பெற்றோருக்கும் நடுவில், அவனுடைய சுகி நின்று கொண்டிருந்தாள்.

“என்னடா, இந்தத் தங்கத்தையுமா வாங்க மாட்டாய்?” என்று, கையில் வைத்திருந்த குழந்தையைக் காட்டிக் கேட்டாள், அவனுடைய தாயார்.

“வாருங்கள். உள்ளே வாருங்கள். அப்பா, அம்மா, மாமா, அத்தை....” என்று, உளறிக் குழறி, எல்லோரையும் ஒருவாறு வரவேற்றான் அவன்.

“உன்னை ஆச்சரியப்படவைத்துவிட்டோம் பார்த்தாயா. அதற்காகத்தான், போன் கூடப் பண்ணாமல் வந்தோம்...” என்றார், தந்தை பெருமையாக.

“அட, பாப்பா பெண் குழந்தையென்று, என்ன பொருத்தமாக பிங்க் கலரில், கொசுவலை வரைவாங்கி மாட்டியிருக்கிறீர்கள்.” என்று, அவள் தாயார் பெருமிதம் கொள்ள, சுகந்தா வியப்புடன் கணவனைப் பார்த்தாள்.

சட்டைக் காலரைத் தூக்கிக் காட்டி, மர்மப் புன்னகை செய்தான், அவன்.

பெரியவர்கள் நால்வரும், நல்லபடியாகப் பேசிக் கொண்டிருக்க ,மெல்ல மனைவியிடம் போய், “என்ன நடந்தது? எப்படி?” என்று கேட்டான் அவன்.

“எதிர் வீட்டுப் பெண்மணி, போன் பண்ணி, ஏதோ சொல்லியிருக்கிறார்கள். ஒன்றும் தெரியாமல் நாம் கஷ்டப் படுவதாக. ஏற்கனவே, கொஞ்சம் இளகியிருந்த நேரம் வேறு சரிதான், என்று மருத்துவமனைக்கு வந்தார்கள். அப்புறம் என்ன? நம் முத்துக் குட்டியின் ஒளி, எல்லோரையும் வசீகரித்து இழுத்து வந்துவிட்டது.” என்றுரைத்துவிட்டு, “ஓர் உண்மை சொல்லட்டுமா? அவர்களைப் பார்த்தபோது எனக்கு

எவ்வளவோ, ஆறுதலாக இருந்தது." என்று முறுவலித்தாள் சுகந்தா.

"எனக்கும்தான்," என்றான், அவன்.